# உலக நாடுகளில் தமிழ்ப் பண்பாடு



முனைவர் எஸ். நாகராசன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# உலக நாடுகளில்
# தமிழர் பண்பாடு

# உலக நாடுகளில்
# தமிழர் பண்பாடு


**முனைவர் ச.நாகராசன்**

பேராசிரியர் - தலைவர் (ஓய்வு)
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

ISBN : 81-7090-328-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 268

திருவள்ளுவராண்டு 2035, ஆவணி - செப்டம்பர் 2004

| | | |
|---|---|---|
| நூல் | : | உலக நாடுகளில் தமிழர் பண்பாடு |
| ஆசிரியர் | : | முனைவர் ச. நாகராசன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | வரலாறு |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2004 |
| பக்கம் | : | viii+108= 116 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரூ. 50/- |
| படிகள் | : | 1000 படிகள் |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். |

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

# அணிந்துரை

உலக நாடுகள் பலவற்றிலும் தமிழர்கள் இன்று பெருமளவில் வாழ்ந்து வருகின்றார்கள். பழங்காலந்தொட்டே தமிழர்கள் பிறநாடுகளோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தமைக்குப் பல வரலாற்றுச் சான்றுகளும், இலக்கியச் செய்திகளும் உள்ளன.

தமிழ் மன்னர்கள் பலர் பிறநாடுகளோடு தொடர்பு கொண்டனர். கல்வெட்டுகளில் 'ஈழம்கொண்ட பரகேசரி' என்று குறிக்கப் பெறுவதும் இங்கு கருதத்தக்கது.

கடல் வாணிகத்திலும் முன்னையோர் பிறநாடுகளோடு தொடர்பு கொண்டிருந்தமையை ரோமானிய நாணயங்களும் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளை ஆராய்ந்து முனைவர் ச.நாகராசன் **'உலகநாடுகளில் தமிழர் பண்பாடு'** என்னும் இந்நூலினை உருவாக்கியுள்ளார்.

பிறநாடுகளில் வாழும் தமிழர்களின் சமய, பண்பாட்டு, பழக்கவழக்கங்களைத் தொகுத்து இந்நூலில் ஆசிரியர் பதிவு செய்துள்ளார். அவர்களின் இன்றைய வாழ்வுச்சூழலில் முந்தைய வாழ்வுமுறைகளின் கூறுகளைக் காணலாம்.

முந்தைய பண்பாட்டுக் கூறுகளின் எச்சங்கள், பிறநாடுகளில் வாழ்வு தேடிச் சென்றதற்கான பொருளாதாரச் சூழல்கள், தாங்கள்

வாழும் நாடுகளோடு சேர்ந்து விளங்கும் பண்பாட்டுக் கலப்புகள் ஆகியன பற்றி விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். அயல்நாடுகளில் காணப்படும் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் குறித்தும் இந்நூல் எடுத்துரைப்பது கருதத்தக்கது.

உலகில் வாழும் தமிழர்களின் இன்றைய பண்பாட்டுச் சூழலை அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் துணைபுரியும்.

நூலினை உருவாக்கிய முனைவர் ச. நாகராசன் அவர்களுக்கும், நன்முறையில் வெளியிட்ட பதிப்புத்துறையினருக்கும் பாராட்டுதல்கள்.

இ. சுந்தரமூர்த்தி

தஞ்சாவூர்
03.09.2004

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | இலங்கைக்குச் சென்ற தமிழர்கள் | 03 |
| 3. | தென்கிழக்காசியத் தமிழர்கள் | 08 |
| 4. | பிறநாட்டுத் தமிழர்கள் | 16 |
| 5. | அலைகடலுக்கப்பால் சிவவழிபாடு | 23 |
| 6. | அயல்நாட்டுத் தமிழர்களின் திருமால் வழிபாடு | 28 |
| 7. | அயலகத் தமிழ்ப் பண்பாட்டில் தீமிதியும் மாரியம்மன் வழிபாடும் | 33 |
| 8. | திரைகடலுக்கப்பால் தைப்பூசத் திருவிழாவும் முருக பக்தர்களும் | 46 |
| 9. | கடல் கடந்த தமிழர்களின் பிற விழாக்களும் பண்பாடும் | 54 |
| 10. | தமிழர்கள் வாழும் ஏனைய நாடுகளில் தமிழ்மொழியின் நிலை | 65 |
| 11. | வெளிநாடுகளில் தமிழ்க்கல்வி | 73 |
| 12. | தாயகக்கடலுக்கப்பால் தமிழ் இலக்கியம் | 85 |
| 13. | வேற்றுநாட்டில் குடியேறியத் தமிழர்களின் பொருளாதார நிலை | 91 |
| 14. | அயல்நாட்டுப் பண்பாடுகளில் தமிழ்ப்பண்பாட்டின் செல்வாக்கு | 97 |

# அறிமுகம்

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு", "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் மனப்பான்மையுடன் பண்டைய காலத்திலிருந்தே தமிழர்கள் உலகநாடுகளில் எங்கணும் உலாவி வருகின்றனர். ஆகையால் உலகெங்கும் தமிழினத்துடன் ஒரு பழைமையான தொடர்பு உள்ள வரலாறு காணப்படுவது வியப்பில்லை. கடல்கடந்து சென்ற சங்ககாலத்தமிழர்கள் மகளிரைத் தங்களுடன் அழைத்துச் செல்லத் தயங்கினார்கள் எனும் பண்பை "முந்நீர் வழக்கம் மகடுஉ வோடில்லை" எனும் தொல்காப்பிய நூற்பாவால் நம்மால் ஓரளவு புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் இலங்கைக்கு மட்டும் பண்டைய காலத்திலிருந்தே தமிழ்ப்பெண்கள் சென்றிருந்த வரலாற்று ஆதாரம் இருப்பதால் தமிழ்நாட்டிற்கு வெகு அருகில் உள்ள இலங்கைக்கு மட்டும் மகளிர் செல்ல வாய்ப்பளிக்கப் பட்டிருக்கின்றது என்று உய்த்துணரலாம். இன்று இந்தியாவுக்கு வெளியே உள்ள அயல்நாடுகளில் 1 கோடிக்குமேல், சுமார் 14 விழுக்காடு தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களில் தங்கள் மனைவி மக்களோடு சென்றவர்களும் உள்ளனர்.

தமிழர்கள் அயல்நாடுகளுக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகச் சென்றுகொண்டிருப்பதற்குக் காரணமாக விளங்குவிது வங்கப் பெருங்கடலைப் பார்த்துக் கொண்ருக்கும் தமிழ்நாட்டின் நீண்ட கடற்கரையாகும். மேலும் தமிழ்நாட்டின் தெற்குப்பகுதியின் வறண்ட சூழ்நிலை, மக்கள் தொகை அதிகரிப்பு, பஞ்சம், வணிக ஆர்வம், சைவ, வைணவ சமயப் புத்தெழுச்சி, பக்தி இயக்கத்துடன் இணைந்த புத்த சமய வீழ்ச்சி, தோட்டங்களில் கூலிவேலை செய்யத் தூண்டிய பொருளாதாரச் சூழ்நிலை,

பொதுவாக நிலவுடைமையர் மற்றும் வட்டிக்கடைக்காரர்களின் பொருளாதாரச் சுரண்டல், ஊதிய உயர்வு நோக்கம், சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட அனுபவம், வணிகம் மற்றும் தொழில்களில் வீழ்ச்சி, அடிமைமுறை ஒழிப்பு, உயர்கல்வி வாய்ப்பு, ஆர்வம் முதலியனவும் கடல்கடந்து செல்வதற்குக் காரணங்களாக விளங்கின. ஆகையால் மாக்கடல்களுக்கு நடுவில் மாரியம்மனின் தீமிதிச் சடங்குகள், தைப்பூசக் காவடிவிழாக்கள், தீபாவளி, பொங்கல் பண்டிகைகள், தமிழ்மொழியின் பெருமைகள், அவற்றுக்குக் கிடைத்துள்ள ஏற்புகள் ஆகிய தமிழ்ப்பண்பாட்டின் பாரம்பரிய அடையாளங்களை இன்றும் நாம் நேரடியாகப் பார்க்கலாம். மேலும் பண்டைக்காலத்திலே சென்ற மணிமேகலை, காரைக்கால் அம்மையார், கணேசர், சிவன், விஷ்ணு, அகத்தியர் வழிபாட்டுச் சின்னங்களையும் கண்டு மகிழலாம். தமிழர் உழைப்பின் மூலம் தழைத்தோங்கிய அயல்நாட்டு நகரங்கள் பல உண்டு. தமிழருக்குச் செல்வமும், பேரும், புகழும் தேடித்தந்த உலகநாடுகளும் பல உண்டு. எங்குச் சென்றாலும் தொடர்ந்து வறுமையால் வாடும் சில தமிழர்களுக்கு உதவி அளிக்க முடியாமல் தவிக்கும் பல வெளிநாடுகளும் உண்டு எனும் உண்மையையும் பயணங்களின் போது சந்திக்கலாம். பொதுவாக அயராது உழைத்து உழைப்பின் மூலம் உயர முயலும் பெரும்பான்மையான அயல்நாட்டுத் தமிழர்களைக் காண வாய்ப்பு கிடைப்பதால் நமது பயண அனுபவங்கள் நிறைவு அடைவதையும் உணரலாம்.

# இலங்கைக்குச் சென்ற தமிழர்கள்

தமிழர்கள் மிகுதியாக வாழும் அயல்நாட்டுப்பகுதி தமிழகத்தின் தென்கிழக்கே கோடிக்கரையிலிருந்து 22 கல்தொலைவிலுள்ள நாடான இலங்கையாகும். இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் பண்டைக் காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்பு இருந்தது. தொல் பழங்காலத்தில் தமிழரின் தாயகமாக விளங்கிய நிலப்பரப்பின் ஒரு பகுதியே இலங்கை. இராமநாதபுரம் மாவட்டத்தின் தொடர்ச்சியாக இலங்கை அல்லது ஏழ்பனைநாடு விளங்கியது. மறைந்துபோன குமரிக்கண்டத்தின் ஒரு பகுதியாக ஏழ்பனைநாடு இருந்தது. இந்த ஏழ்பனைநாடு ஒரு தீவாக மாறியது. இத்தீவையே ஈழம் என அழைத்தார்கள் என கிரேக்க வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இன்று தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலியில் ஓடும் தாமிரபரணி ஆறு ஒரு காலத்தில் கடல் பொங்குவதற்கு முன்பு இலங்கை வழியாக ஓடிக்கடலில் கலந்தது. எனவேதான் இலங்கைக்குத் தாமிரபரணி நாடு என்ற பெயரும் உண்டு. கரிகாலன் காலத்தில் இலங்கையிலிருந்து உணவுப் பொருட்கள் காவிரிப் பூம்பட்டினத்திற்கு வந்து குவிந்ததை

> "கங்கை வாரியும் காவிரிப் பயனும்
> ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்"
> (பட்டினப்பாலை 190-191)

எனப் பழந்தமிழ் இலக்கியம் குறிப்பிடுகிறது. பல்லவவேந்தர் நரசிம்மவர்மன் (கி.பி.630-660) இலங்கையில் பெற்ற வெற்றி

"இராமன் இலங்கையில் பெற்ற வெற்றியைப் போன்றது" என்று பல்லவர் வழங்கிய காசக்குடிச் செப்பேடு செப்புகிறது.

## சோழர்களின் மேலாதிக்கம்

சோழ அரசன் பராந்தகன் கி.பி.915 இல் இலங்கையில் வெள்ளூரில் பெற்ற வெற்றியின் விளைவாக, "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி" என்று கல்வெட்டுகளில் சிறப்பிக்கப் பெறுகிறார். கி.பி.993 இல் இலங்கையின் வடபகுதியை இராசராசனும் கி.பி.1017 இல் தென்பகுதியை இராசேந்திரனும் கைப்பற்றி இலங்கையின் பெரும்பகுதியைத் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர். வட இலங்கையும் தென்பகுதியும் சோழப் பேரரசின் நேரடி ஆட்சியின் கீழ் 86 ஆண்டுகள் இருந்தன எனச் சிங்கள மொழி நூல்கள் கூறுகின்றன.

சோழர்கள் இலங்கைத் தீவைத் தமது ஆட்சிக்குட்படுத்திய போது சிலாபம் முதல் பூநகரிவரையில், மேற்குக் கரையோரப் பகுதியில் தமிழர்களின் முன்னோர்கள் நெருங்கி வாழ்ந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து பாணமை வரையுள்ள கிழக்குக் கரையோரப் பகுதிகளிலும் பொலனருவைக்கு வடக்கேயுள்ள நிலப்பகுதிகளிலும் வாழ்ந்தனர். சோழப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் ஈழத்தில் தமிழரின் வாழ்விடங்களில் மாற்றம் இருக்கவில்லை.

## யாழ்ப்பாணத் தமிழரசு

சோழரின் மேலாதிக்கம் இலங்கையில் முறியடிக்கப்பட்ட பிறகு இலங்கையின் வடபகுதியில் தனியரசு ஒன்று கி.பி.1250 அளவில் தோன்றியது. அதனை "யாழ்ப்பாணத்தின் தமிழரசு" எனச் சுட்டுவது மரபு. கி.பி.1618 ஆம் ஆண்டில் போர்ச்சுக்கீசியர்கள் இவ்வரசை அழித்த காலம்வரை இவ்வரசு தனியுரிமை அரசாகச் செயல்பட்டு வந்தது. யாழ்ப்பாண அரசு தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. இவ்வரசக் குடும்பத்தினர் பாண்டிய, சோழ அரசக்குடிகளின் பெண்களை மணந்து முழுத்தமிழர்களாக மாறினர்.

மேலும் 18ஆம் நூற்றாண்டு முதல் 18.02.1833 வரையிலும் கண்டிப்பகுதி, வவுனியா மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் பல சிற்றரசர்களாகத் தமிழர்களும் சிங்களவர்களும் ஆண்டுவந்தனர்.

18ஆம் நூற்றாண்டில் கண்டியில் மலபார்த்தெரு என்ற பெயரில் தமிழர்தெரு இருந்திருக்கிறது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் ஈழ நிலப்பகுதி 13 ஆயிரம் சதுர மைல்கள். இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சிப்பகுதியாகச் சேர்க்கும்போது அப்பகுதி 11 ஆயிரம் சதுர மைல் ஆக இருந்தது. இன்று தமிழ் நிலப்பகுதி 8000 சதுர மைல்களே. 5000 சதுர மைல்களில் சிங்களவர் குடியேற்றப் பட்டனர்.

## இலங்கைத் தமிழர்கள்

இலங்கையிலுள்ள தமிழர்களை இலங்கை அரசு இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் எனப் பிரிக்கின்றது. பண்டைக் காலத்திலிருந்தே இலங்கையில் வாழ்ந்துவரும் தமிழர்களை இலங்கைத் தமிழர்கள் என இலங்கை அரசு குறிப்பிடுகின்றது. 1981ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி இலங்கைத் தமிழர்கள் 20,87,943 பேர்கள் ஆவார்கள். இலங்கைத் தமிழரில் 72.6 விழுக்காட்டினர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்றனர்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்துவரும் தமிழ் மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அப்பகுதிகளில் வாழ்ந்து வருவதால் அப்பகுதி பாரம்பரியத் தமிழ்ப் புலமென வழங்கப் படுகின்றது. 7068 சதுரமைல் பரப்பை அடக்கியுள்ள இப்பகுதி இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 28.3 விழுக்காடாகவும் இலங்கையின் குடித்தொகையில் 14.1 விழுக்காடாகவும் இருக்கின்றது. வடக்கு, கிழக்குப் பகுதியில் மொத்தக் குடித்தொகையில் வட மாகாணத்தில் 53.2 விழுக்காடு இருக்கின்றனர். வடமாகாணத்தின் குடித்தொகையில் 74.8 விழுக்காட்டினர் யாழ்ப்பாண மாவட்டத்திற் காணப்படுகின்றனர். பொதுவாக வடக்கே வவுனியா மாவட்டத்திலும், கிழக்கே அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களிலும் சிங்கள மக்கள் குறிப்பிடும்படியாக அதிகமாகக் காணப்படுகின்றனர். இப்பகுதியில் அண்மைக்காலங்களில் ஏற்படுத்தப்பட்டுவரும் குடியேற்றத் திட்டங்களில், சிங்கள மக்கள் பெருமளவு குடியேற்றப் பட்டிருப்பதே இம்மாவட்டங்களில் சிங்கள மக்களின் விழுக்காடு பெருகியமைக்குக் காரணமாகும். அம்பாறை, திருக்கோணமலை

மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் இலங்கைத் தமிழரே பெரும்பான்மையோராக உள்ளனர்.

## மலையகத் தமிழர்கள்

ஆங்கிலேயர் ஆட்சியின்போது வந்து இலங்கையின் நடுப் பகுதியில் குடியேறிய தமிழர்களை, அதாவது கண்டியன் மாநிலத்தில் வந்து குடியேறிய தமிழர்களை, இந்தியத் தமிழர்கள் அல்லது மலையகத் தமிழர்கள் என இலங்கை அரசு குறிக்கின்றது. பொதுவாக இந்தியத் தமிழர்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம். (அ) இல்ங்கையின் நடுப்பகுதியில் வேலைசெய்யும் தமிழ்த் தொழிலாளிகள் (ஆ) இந்தியத் தமிழ் வணிகர்கள், அரசு தனியார் நிறுவனங்களில் குறிப்பாகக் கொழும்பு நகரில் பணிபுரியும் அலுவலர்கள். இவர்களைக் கொழும்புத் தமிழர்கள் எனக் குறிக்கலாம். 1948ஆம் ஆண்டு இலங்கைக் குடிமகள் சட்டம் இயற்றப்பட்டவுடன் 84 விழுக்காடு மலையகத் தமிழர்களுக்கு இலங்கைக் குடிமகன் உரிமை அளிக்கப்படவில்லை. இலங்கை அரசு அளிக்கும் புள்ளிவிவரப்படி, தொடர்ந்து இந்தியாவுடன் பேச்சு நடத்தியதால், 4,21,209 பேர்களுக்கு இந்தியஅரசு இந்தியக் குடியுரிமை அளித்திருக்கின்றது. இச்சிக்கல் இன்றுவரை முற்றிலும் நீக்கப்படவில்லை. இந்தியத் தமிழர்களின் எண்ணிக்கை 8,25,233 ஆகும் (1981 புள்ளிவிவரம்)

## இசுலாமியத் தமிழர்கள்

மேலும் இலங்கை அரசு இசுலாமியத் தமிழர் (சோனகர்) எனும் மூன்றாவது பிரிவையும் அளிக்கின்றது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சோனகர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் (தமிழ் மட்டும் பேசுபவர்கள்) தமிழ்பேசும் கிழக்கு வடக்கு மாகாணங்களில் செறிவாகவும் ஏனையோர் (தமிழும் சிங்களமும் பேசும் இருமொழியாளர்கள்) சிங்களம் பேசும் இலங்கையின் பிற ஏழு மாகாணங்களில் பரவலாகவும் வாழ்கின்றனர். தங்களை அரேபியரின் வழித்தோன்றல்கள் எனக் கருதும் சோனகர்கள் மதச்சடங்குகளுக்கு அரபு மொழியும், மதபோதனைப் பிரசாரத்திற்குத் தமிழ்மொழியும் பயன் படுத்துகின்றனர். 1981 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி இலங்கைச் சோனகர்களின் எண்ணிக்கை 10,56,972 ஆகும்.

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 25.3 விழுக்காடு தமிழைத் தாய்மொழியாகப் பேசுகின்றனர். மூன்று பிரிவையும் சேர்ந்த தமிழ்பேசும் மக்களில் 55.6 விழுக்காட்டினர் வடக்கு, கிழக்கு மாகாணப் பகுதிகளிலும், 23.83 விழுக்காட்டினர் மலைநாட்டுப்பகுதியாகிய மத்திய, ஊவா மாகாணங்களிலும், 11.5 விழுக்காட்டினர் தலைநகர் அமைந்திருக்கும் மேல் மாகாணத்திலும், எஞ்சிய 9.1 விழுக்காட்டினர் ஏனைய நான்கு மாகாணங்களிலும் பரந்து வாழ்வதைக் காணலாம். அண்மைக் கால இலங்கைச் சிக்கல்கள் மூலம் இம்மக்கள் தொகை எண்ணிக்கையில் சிறிதளவு மாற்றம் தோன்றியிருக்க வாய்ப்பிருக்கின்றது.

# தென்கிழக்காசியத் தமிழர்கள்

மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா (அதாவது, ஜாவா, சுமத்திரா, பாலி போன்ற தீவுகள்), பர்மா, தாய்லாந்து (சயாம்), வியட்நாம் (சம்பா), லாவோஸ், கம்போடியா, பிலிப்பைன்ஸ் முதலிய நாடுகளடங்கிய பகுதியைத் தென்கிழக்காசியா எனக் கூறுகின்றோம். பண்டைக் காலத் தொடர்பான அகழ்வாராய்ச்சிச் சின்னங்கள் சிலவும், சங்ககால நூல்களும் தென்கிழக்காசிய நாடுகளுடன் தமிழ்நாட்டிற்குள்ள தொடர்பினைப்பற்றி விளக்கிக் கூறுகின்றன. இத்தீவுகளை முந்நீர்ப் பழந்தீவு, பன்னீராயிரம் எனச் சங்ககால நூல்கள் குறிப்பிடுகின்றன. பொதுவாக அந்தமான், நிக்கோபார் தீவுகள் வழியாக மலேசியா, இந்தோனேசியா தீவுகளுக்குப் பண்டைத் தமிழர்கள் சென்றார்கள். மலேசியாவில் உள்ள கேதா வணிகர்களைப் பற்றிப் பட்டினப்பாலை, மணிமேகலை ஆகிய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது.

## பல்லவர், சோழர் காலத்தில் தமிழர்கள் சென்றார்கள்

பல்லவர் காலத்தில் (கி.பி.550-750) கடல் வழியாக இப்பகுதிகளுக்குப் பல தமிழ்ப்பெருமக்கள் சென்றார்கள் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. பல்லவ கிரந்த எழுத்துக்கள் மூலம் எழுதப்பட்ட 200 சமஸ்கிருதக் கல்வெட்டுகள் தென் கிழக்காசியாவில் கிடைத்திருக்கின்றன. கி.பி.ஏழாம் நூற்றாண்டு இறுதியில் மலேய் தீபகற்பத்திலுள்ள சியா - சா, அதாவது கேதாவிற்கும், தென்இந்தியக் கிழக்குக் கடற்கரையிலுள்ள நாகப்பட்டினத்திற்கும் இடையே நிலையான ஒழுங்கான கப்பல் போக்குவரத்து இருந்ததாகச் சீன புத்தசமயப் பரப்பாளர்

இ-சிங் கூறுகின்றார். தாய்லாந்தில் தகுவா-பா எனுமிடத்தில் ஒரு பல்லவர் காலத்தமிழ்க் கல்வெட்டு கிடைத்திருக்கின்றது.

"பரக்கும் ஓதக் கடாரம்" என்று கலிங்கத்துப்பரணியும் "குளிறு தெண்டிரைக் கடாரம்", "காழகத்து ஆக்கமும்" என்று பத்துப்பாட்டும், பட்டினப்பாலையும் முறையே பகர்கின்றன. கடாரம் என்பது பர்மாவின் மற்றொரு பெயர் என ஒரு சாரார் கருதுகின்றனர். கடாரம் என்பது ஒரு பகுதி பர்மாவையும் (கீழ்ப்பகுதி) மற்றொரு பகுதி தாய்லாந்தையும் இணைக்கும் வால்போன்ற தென்பகுதி எனும் கருத்தும் உண்டு. கடாரத்தைச் சமஸ்கிருத மொழியில் கடாஹா என்றும் மலாய் மொழியில் கேதா என்றும் அழைத்தனர் எனவும் சிலர் நம்புகின்றனர். தென்னிந்தியச் சோழர் கல்வெட்டுகளில் சுமத்திராவிலிருந்து ஆட்சி புரிந்த ஸ்ரீவிசயபேரரசைக் கடாரம் என்று குறித்தனர் எனச் சுட்டுவதும் மரபு. இவ்வாறு கருத்து வேறுபாடு இருக்கும் போதிலும், கடாரம் எனும் பகுதி தென்கிழக்காசியாவில் உள்ள நாடு எனும் பொதுக்கருத்து உறுதியாக இருக்கின்றது. இராசேந்திர சோழன் கடற்படை கடாரத்தையும் மலைநாட்டையும் வென்றமையால் வெற்றியின் நினைவுக்குறியாக இராசேந்திர சோழன் கடாரம் வென்றான், மலைநாடு கொண்டான் என்ற பட்டங்களைக் சூட்டிக்கொண்டதோடு கடாரம் வென்றான். மலைநாடு கொண்டான் என்று பொறித்த இரு பொற்காசுகளை வெளியிட்டுள்ளான். இப்பொற்காசுகள் கிண்ணம்போல் உட்குழிந்ததாக இருக்கின்றன. இந்தக் காசுகள் தென்கிழக்கு ஆசியத் தீவுகளில் அவன் பெற்ற அரிய வெற்றிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. மேலும் தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ளே நடுவில் அமைந்த கோயிலின் மேற்குச் சுவரில் எழுதப்பட்டிருக்கும் தஞ்சாவூர்க் கல்வெட்டில் அளிக்கப் பட்டிருக்கும் 13 ஊர்கள் பெயர்கள்தான் இராசேந்திரசோழனின் வெற்றிக்கு முக்கியச் சான்றாக இருக்கின்றன. இப்பதிமூன்று ஊர்களில் ஆறு ஊர்கள் மலேயத் தீபகற்பகத்தில் இருக்கின்றன. ஸ்ரீவிசயாவைச் சேர்த்துக்கொண்டால் நான்கு ஊர்கள் சுமத்திராவில் இருக்கின்றன. கடார அரசனின் தலைநகரம் ஸ்ரீவிசயா என இக்கல்வெட்டில் கூறப்பட்டிருக்கின்றது. பொதுவாகக் கடாரப் படையெடுப்பு 1023-1025 இடையே நடந்திருக்க வேண்டும் என உய்த்துணரப்படுகிறது.

மேலும் சுமத்திராவில் பாரூஸ் அருகில் உள்ள

லூபுக்துபாவில் கி.பி.1088 இல் கிடைத்த தமிழ்க் கல்வெட்டில் தமிழ் வணிகர் மூலம் சமய, வணிக உறவு மலேயத் தீவுகளுடன் ஏற்பட்டது எனக் கூறப்பட்டிருக்கின்றது. கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்தே மலேசியாவில் தமிழ் வணிகக் குழுக்கள் அமைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக மணிக்கிராமம், நானாதேசி, வீர வளஞ்சியர், திசையாயிரட்டு, ஐந்நூற்றுவர் முதலிய வணிகக் குழுக்களின் பெயர்களை மலேயா, ஜாவா, பர்மா, சுமத்திரா முதலிய இடங்களில் கண்டுபிடித்த கல்வெட்டுகளில் காணலாம். சுமத்திராவில் 11ஆம் நூற்றாண்டில் பொதுமக்கள் பயன்படுத்திய பத்திரங்களில் தமிழ்மொழி பயன்படுத்தப்பட்டது என வுல்ட்ஸ் என்பாரும் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியும் கூறுகின்றனர். கி.பி.1084-1112ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த சான்சித்தர் என்ற பர்மிய மன்னனும் சோழப்பேரரசனும் சிறந்த நண்பர்களாக இருந்தனர் என்ற கல்வெட்டும் பர்மாவில் உண்டு.

## மலேசியத் தமிழ் முசுலீம்கள்

மலேசியாவில் இசுலாம் பரவத் தொடங்கியவுடன் தமிழ் முசுலீம்களும் அதில் முக்கியப் பங்கு கொண்டனர். சமயப் பரப்பாளர்களாக மட்டும் தமிழ் முசுலீம்கள் பணிபுரியவில்லை. நிருவாக அமைப்பிலும் அவர்கள் பணிபுரியத் தொடங்கினர். சுல்தான் குடும்பத்துடனும் உயர்குடிமகன்கள் குடும்பத்துடனும் மண உறவு வைத்துக் கொள்ளத் தொடங்கினர். ஆகையால் தமிழ் முசுலீம்களுக்குப் பன்தஹாரா அல்லது அரசியல் அரங்கச் செயல்துறைக் கட்டுப்பாட்டாளர், ஷாபன் தஹாரா அல்லது துறைமுக ஆட்சிப் பொறுப்பாளர்கள் பதவிகள் கிடைத்தன. மலேசியாவில் இச்சமயம் செல்வாக்குடன் வாழ்ந்த தமிழ் முசுலீம்களைச் சூலியா முசுலீம்கள் என அழைத்தனர். இக்காலக் கட்டத்தில் இந்துச் செட்டியார்களின் செல்வாக்கும் ஓங்கத் தொடங்கியது. பொதுவாக இந்து முசுலீம் தமிழ்க் குடியிருப்புகளைக் 'காம்புங்கிளிங்' என அழைத்தனர். தமிழர் பலர் தமிழ்நாடு, இந்தியாவுடன் உள்ள தொடர்பை இழந்தனர். தாய்த்தமிழைக்கூட மறந்தனர். மலேயர்களுடன் திருமணத் தொடர்பு கொண்டனர். மலேய் மொழியில் புலமைகூட அடைந்தனர். அவர்கள் பதினேழாம், பதினெட்டாம் நூற்றாண்டில் ஜோஹூர், பேராக், வெல்லஹ்லீ மாகாணம், கேதா முதலிய பகுதிகளுக்குச் சென்று குடியேறி வாழத் தொடங்கினர். மலேசியாவிலே நிலையாகக் குடியேறி

வாழத் தொடங்கிய முதல் தமிழர்கள் தமிழ் முசுலீம்களும் மலாக்கா செட்டியார்களும் ஆவர் எனக்கூறலாம்.

பதினேழாம் நூற்றாண்டில் இந்தோனேசியாவிலிருந்த டச்சுக்காரர்கள் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளின் ஆவணங்களையும், பதிவேடுகளையும் வைத்திருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை மலாக்கா கடற்கரையோரப் பகுதிகளில் விவரமான அறிக்கைகள், கணக்குகள் தமிழிலும் வைக்கப் பட்டிருந்தன என்பதற்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. மலேசியாவில் பிரிட்டிஷ் அரசு ஆட்சி செய்து கொண்டிருந்த போது பீனாங், மலாக்காவை அழகுபடுத்துவதற்காக இந்தியக் கைதிகள் இந்நகரங்களுக்குக் கொண்டுவரப்பட்டனர். தோட்டங்களில் பண்ணைகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியவுடன் தொழிலாளர்களின் தேவை அதிகரித்தது. இதன் விளைவாகப் தமிழர் பலர் தொழிற் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்துகொண்டு மலேசியாவிற்குச் சென்றார்கள்.

## சிங்கப்பூர்த் தமிழர்கள்

1800ஆம் ஆண்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சிங்கப்பூருக்கு வந்து குடியேறிய தமிழர் தொகை 1890 ஆம் ஆண்டளவில் ஓர் அளவு பெருகியிருந்தது. தவிர மலேசியாவிலி ருந்தும் தமிழர்கள் சிங்கப்பூருக்கு வந்தனர். 1913ஆம் ஆண்டளவில் தமிழர்களின் மொத்த மக்கள்தொகை மும்மடங்காகப் பெருகியது. குறிப்பாகச் சிங்கப்பூரில் பணிபுரிந்தவர்களுக்குச் சில உரிமைகளும் சலுகைகளும் அளிக்கப்பட்டதால் தமிழர்கள் சிங்கப்பூருக்கு மிகுதியாக வந்து குடியேறினர். 1950 ஆம் ஆண்டளவில் இவர்கள் இவ்வாறு சென்று குடியேறுவதை மிகக் கண்டிப்புடன் தடைசெய்ததால் இக்குடியேற்றங்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

## இந்தோனேசியாவில் தமிழர்கள்

இந்தோனேசியாவிற்கு வந்த இந்தியர்களின் பெரும்பாலோர் தமிழகம், கேரளம் ஆகிய இடங்களிலிருந்து வந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் இசுலாமிய மதத்தினர் எனவும் கடந்தகால வெளியீடுகள் குறிப்பிடுகின்றன. இந்தியர்கள் பெரும்பான்மையாக

வந்திறங்கிய இடம் சுமத்திராத்தீவின் கிழக்குக் கடற்கரையாகும். அக்காலத்தில் டெல்லி என்று வழங்கப்பட்ட இன்றைய வடசுமத்திராவிலேயே அவர்கள் வேளாண் தொழிலாளிகளாகத் தருவிக்கப்பட்டனர். முதன் முதலில் 1873இல் பினாங்கிலிருந்து தோட்டத்தில் கூலிவேலை செய்வதற்காகத் தமிழர்கள் வந்தனர். பொதுவாகத் தமிழர்கள் பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலிருந்து டெல்லி என்று பெயர்பெற்ற முன்னாளைய வட சுமத்திராவிற்குச் சென்றனர் எனக் கடந்தகால வெளியீடுகள் கூறுகின்றன. ஆனால் மேடாவில் உள்ள தமிழ் முதியோர்கள் அவர்கள் தத்தம் கிராமங்களிலிருந்து நேராக வடசுமத்திராவுக்குக் கொண்டுவரப்பட்டனர் எனக் கூறுகின்றார்கள். ஒப்பந்தக் கூலிகளாகப் பணியாற்றிய தமிழர்களைத் தவிர மற்ற சுதந்தரத் தமிழர்கள் வணிக நிமித்தமாகவும் நகர்ப்புற வேலைகள் செய்யும் பொருட்டும் மேடான் நகரத்திற்கு வந்தனர். மேடான், வடசுமத்திரா மாநிலத்தின் தலைநகரமாகும்.

## பர்மாவில் தமிழர்கள்

பண்டைய காலத்திலிருந்தே பர்மாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே வணிக உறவு இருந்தது. மேலும் தமிழர்கள் குடிபெயர்ந்து பர்மாவில் குடியேற்றம் செய்ததும் தொடர்ந்து நடந்தது. ஆனால் கீழைப்பர்மாவை 1852 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய உடன்தான் உண்மையில் மிகுதியான அளவில் தமிழர்கள் பர்மாவிற்குச் சென்று குடியேறுவது அதிகரிக்கத் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் கீழைப்பர்மாவைக் கைப்பற்றும் முன் பொதுவாக வணிகம் செய்து வந்த பெரும்பான்மையான தமிழர்கள் இரங்கூனில் வசித்தனர் ஆனால் ஆங்கிலேயர்கள் கீழைப்பர்மாவைக் கைப்பற்றிய பிறகு தமிழர்கள் இரங்கூனிலிருந்து கீழைப்பர்மாவிற்குச் சென்று குடியேறத் தொடங்கினார்கள். 1913ஆம் ஆண்டு 1929ஆம் ஆண்டுகளுக்கிடையே 45 இலட்ச இந்தியர்கள் பர்மாவிற்குச் சென்றனர். இவர்களில் 60 விழுக்காட்டிற்கு மேல் தமிழர்கள் இருந்தனர். பர்மாவில் குடியேறிய தமிழர்களுள் புகழ் வாய்ந்தவர்கள் செட்டியார்கள் ஆவர். இராமநாதபுரத்து நகரத்தார்கள் பர்மாவில் முதன்முதலில் 1850 இல் மொய்மீன் பகுதியில் குடியேறி வட்டித் தொழிலைத் தொடங்கினார்கள். 1930ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் மந்த நிலை தோன்றியவுடனும் 1937ஆம் ஆண்டு பர்மா இந்தியாவிலிருந்து பிரிந்தவுடனும் பர்மாவிற்கு வரும் தமிழர்களின், பிற இந்தியர்களின் எண்ணிக்கை குறையத்

தொடங்கியது. இரண்டாம் உலகப்போர் தோன்றியவுடன் 5 இலட்சம் இந்தியர்கள் பர்மாவைவிட்டு வெளியேறினர். கால்நடையாகத் தமிழகம் திரும்பியவர் பலர். 1962-1966ஆம் ஆண்டுகளுக்கிடையே எல்லாக் கடைகளும் நாட்டுடைமையாக்கப் பட்டவுடன் பெரும்பான்மையான இந்தியர்கள், தமிழர்கள் உட்பட, இந்திய அரசு உதவியுடன் பர்மாவை விட்டுத் தங்கள் உடைமைகளைப் பர்மாவில் விட்டு விட்டு வெளியேறினர். தங்களுடைய சேமிப்பில் ஒரு சிறு பகுதியே அவர்களால் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர முடிந்தது. பொதுவாகப் பர்மா சுதந்திரம் அடைந்தவுடன் தமிழர்களின் செல்வாக்கு வீழ்ச்சியடையத் தொடங்கியது.

## தாய்லாந்து, இந்தோசீனாவில் தமிழர்கள்

15, 16 ஆம் நூற்றாண்டுவரை தமிழர்கள் தாய்லாந்துடன் வணிக உறவு வைத்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டுக்கு முன்பு தஞ்சை மாவட்டத் தமிழர்களே முதன்முதலில் வைரம் முதலிய கல்வணிகம் தொடங்கினர். தமிழர்கள் இன்று மிகமிகக் குறைவாகத்தான் தாய்லாந்தில் இருக்கின்றார்கள். வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர், காரைக்கால் முதலிய இடங்களிலிருந்து வந்த தமிழ் முசுலீம்கள் 500 பேர் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தமிழ் மட்டும் தெரியும், இந்தி உருது தெரியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்தோசீனா (கம்போடியா, லாவோஸ், வியட்நாம்) முழுவதும் பிரெஞ்சு ஆட்சியின்கீழ் வந்தபோது புதுச்சேரி, காரைக்கால், மாகி முதலிய பகுதிகளிலிருந்து வேலைதேடித் தமிழர்கள் இந்தோ-சீனாவுக்குச் சென்றார்கள். 1937ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி 998 பேர் இருந்தனர். தவிர இந்திய பிரிட்டிஷ் பகுதியிலிருந்து சென்ற 6000 ஆசிய அயல்நாட்டினரும் இந்தோசீனாவில் வசித்துவந்தனர். இவர்களில் பெரும்பான்மையோர் தமிழ்பேசும் தென் இந்தியர்கள். மொத்தம் ஒரு விழுக்காடு இந்தியர்கள் கூட இந்தோசீனாவிற்குச் சென்று குடியேறவில்லை. வியட்நாமிலுள்ள சைகான், ஹநாய், கம்போடியாவிலுள்ள நாம்பென், சியாம்சிப், லாவோசிலுள்ள வியன்சியன், லுவாங் பிரபாங் முதலிய நகரப்பகுதிகளில் தமிழர்கள் குடியேறியிருந்தார்கள். நாம்பென்னில் ஆயிரக்கணக்கான

தமிழர்கள் இருந்தார்கள். இப்போது இங்கு இருக்கும் தமிழர்கள் குறைவு. கம்யூனிஸம் இந்தோசீனப்பகுதியில் பரவியதால் பெரும்பான்மையான தமிழர்கள் 1976க்குப் பிறகு தமிழகம் திரும்பிவிட்டனர். பலர் உடுத்திய உடையுடன் திரும்பினர்.

## பிலிப்பைன்ஸ் தீவில் தமிழர்கள்

கிறித்துவ நூற்றாண்டின் முதல் இரு நூற்றாண்டுகளிலேயே தமிழகத்து மக்கள் வணிகத்தின் பொருட்டு பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் தங்கள் குடியேற்றத்தை அமைத்து இருக்கவேண்டும் என்று கெர்ன் எனும் அறிஞர் கருதுகிறார். மேலும் சில அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் பல்லவர்கள் காலத்திலும் தமிழர்கள் இப்பகுதிக்குச் சென்று குடியேறியிருக்க வேண்டும் எனக் காண்பிக்கின்றன. கி.பி.1762ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து ஸ்பானியர் ஆட்சிக்குட்பட்டிருந்த பிலிப்பைன்ஸ் தீவுகளின் மீது (மணிலா) படையெடுத்துச் சென்றபோது ஆர்க்காட்டுப் பகுதியைச் சேர்ந்த 1000 தமிழ்ச் சிப்பாய்களும் சென்றனர். இவர்களோடு தமிழ்நாட்டுத் தொழிலாளிகள் 1400 பேர் உடன் சென்றனர். கி.பி.1764 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இத்தொழிலாளர்களை இத்தீவிலே விட்டுவிட்டு முன்னறிவிப்பு இன்றித் திடீரென்று பிரிட்டிஷ் கப்பல்கள் இங்கிருந்து இந்தியாவிற்குப் புறப்பட்டன. புறக்கணிக்கப்பட்ட தமிழ்நாட்டுப் படைவீரர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளின் நாட்டுப்புறப் பகுதிகளில் ஒதுங்கி வாழ்வதற்கு வழிதேடினர். சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து பரவலாக வாழத்தொடங்கினர். பிறகு தமிழர்களின் குடியிருப்பு இன்றைய கெயிண்டா எனும் ஊராக வளர்ந்தது. தமிழ்நாட்டுச் சிப்பாய்களின் வழித் தோன்றல்களே கெயிண்டா பட்டணத்தில் இன்றும் பேரளவில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் மக்களின் கால வழியினர் என்பதை இன்றைய உலகம் மறந்துகொண்டு வருகிறது. இவர்களைத் தவிர இத்தீவில் 100 தமிழர்கள் உள்ளனர்.

## மக்கள் தொகை

மலேசியாவில் வாழும் இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள். இவர்கள் 80 விழுக்காடு இருப்பார்கள். 1970ஆம்

ஆண்டு புள்ளிவிவரப்படி மொத்த இந்தியர்களின் எண்ணிக்கை 9,33,250. இவர்களில் இந்தியத் தமிழர்களின் தொகை 7.46.558. மேலும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 25,288. 1954 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி இந்தியர்களின் மொத்த தொகை 12,08,500 ஆகும்.

சிங்கப்பூரில் இருக்கும் மொத்த இந்தியர்களில் தமிழர்கள் 65 விழுக்காடு இருக்கின்றார்கள். 1979 மக்கள்தொகை பங்கீட்டின்படி மொத்த தமிழர்களின் எண்ணிக்கை 98,.425 ஆகும். சிங்கப்பூரைத் தங்களுடைய தாயகமாக 75 விழுக்காடு தமிழர்கள் கருதுகின்றார்கள்.

சுமத்திராவிலுள்ள மேடானில் 1972ஆம் ஆண்டில் சுமார் 50,000 தமிழர்கள் இருந்ததாக இவ்வூர் மாரியம்மன் கோயிலின் அறங்காவலர் கூறினார்.

பர்மாவில் உள்ள மொத்த இந்தியர்களில் தமிழர்கள் 60 விழுக்காடு இருக்கின்றனர். இன்று பர்மாவில் 2 1/2 லட்சத் தமிழர்கள் வாழ்கின்றனர்.

# பிறநாட்டுத் தமிழர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிஜி, தென்ஆப்பிரிக்கா, மொரீசியஸ், ரீயூனியன், கமானா, மார்த்தினிக், குவாதலோப் போன்ற பிற உலகப்பகுதிகளுக்குப் பொதுவாக பிரிட்டிஷ், பிரஞ்சுப் பேரரசின் பகுதிகளுக்குத் தோட்டங்களில் கூலி யாட்களாகப் பணிபுரிவதற்குத் தமிழர்கள் சென்றனர்.

## பிஜித்தீவு

1874ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து 12,000 மைல் தொலைவில் தென்பசிபிக் பெருங்கடலில் சிதறிக்கிடக்கும் பிஜித்தீவு பிரிட்டனின் முழுக் குடியேற்றமாக மாறிய பிறகு கரும்புத்தோட்டங்களில் பணிபுரிவதற்காகத் தொழில்முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தம் செய்துகொண்டு தமிழர்கள் இத்தீவிற்கு வந்து குடியேறினர். ஆள்பிடித்துக்கொண்டும் கண்காணி முறை மூலம் 1879-1916க்கு இடையே 87 கப்பல்களில் 65,000 இந்தியத் தொழிலாளர்கள் வந்தனர். 1970 ஆம் ஆண்டு பிஜித்தீவு முழுச் சுதந்திர நாடாயிற்று. இன்று பிஜித்தீவில் இருக்கும் இந்தியர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தென்இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அதாவது மதராசிஸ் என அழைக்கப்படும் தென் இந்தியர்களின் எண்ணிக்கை 1,16,000. இவர்களில் சுமார் 80 ஆயிரம் பேர்கள் தமிழர்கள். பிஜித்தீவின் மேற்குப் பகுதிகளில் தமிழர்களும் பிற இந்தியர்களும் ஓரளவு பெரும்பான்மையாக வாழும் பகுதிகள் நந்தியில் இருக்கும் ஊதியாய், ராக்கி-ராக்கி, டேங்கிடாங்கி, மலோலோ முதலிய பகுதிகள் ஆகும்.

## தென் ஆப்பிரிக்கா

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஆப்பிரிக்காக் கண்டத்தின் தெற்குமுனையிலே இருக்கும் நாடான தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று குடியேறினர். முதன்முதலில் 1860ஆம் ஆண்டு டர்பன் மாவட்டத்தில் உள்ள கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்காகத் தமிழர்கள் வந்தார்கள். இவ்வாறு பணிபுரிவதற்காக வந்த தமிழர்கள் பொதுவாக திரான்சுவேல், நேட்டால் பகுதிகளில் குடியேறினர். அவர்கள் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று குடியேறியதற்குச் சிறப்பான காரணம் வறுமை நிலையே ஆகும். 1860-1911 ஆம் ஆண்டுகளுக்கிடையே 1,52,184 பேர் இந்தியாவிலிருந்து வந்தார்கள், இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு தமிழர்களும், தெலுங்கர்களும் ஆவார்கள். பெரும்பான்மையான தமிழர்கள் ஒப்பந்தக் கூலியாக வந்தனர். சிலர் உரிமையுள்ள மனிதர்களாகவும் வந்து குடியேறினார்கள். 1911 ஆம் ஆண்டளவில் இவர்களில் பெரும்பாலோர் நிரந்தரமாகக் குடியேறி வாழத் தொடங்கினார்கள். 1980 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 3 இலட்சம் தமிழர்கள் தென் ஆப்பிரிக்காவில் இருந்தனர். மொத்த தென் ஆப்பிரிக்க இந்திய மக்கள் தொகையில் இவர்கள் 37 விழுக்காடு இருந்தனர்.

## மொரீசியஸ்

தென்மேற்கு இந்துப் பெருங்கடலில் ஆப்பிரிக்காவிற்கு அருகே, இந்தியாவிலிருந்து 4000 மைல் தொலைவிலுள்ள மொரீசியஸ் தீவிற்கும் பிரெஞ்சு குடியேற்றப்பகுதிகளான புதுச்சேரி, சந்திரநாகூரிலிருந்து 1731ஆம் ஆண்டிலிருந்து கூலிகளாகத் தமிழர்கள் வந்து குடியேறினர். பொதுவாகப் பண்ணைகளில் பணிசெய்வதற்காக இவர்கள் வந்தனர். மேலும் 1862-1867 ஆண்டுகளுக்கு இடையே சுமார் 1000 தமிழர்கள் வணிகம் செய்வதற்காகவும் வேளாண்மைத்தொழில் தொடர்பாகவும் இத்தீவிற்கு வந்தனர். 1810ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் மொரீசியஸைக் கைப்பற்றியவுடன் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்குக் கூலியாட்கள் மீண்டும் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டார்கள்.

இன்று இந்தியர்களுக்குள் மிகுதியாக மொரீசியஸில் இருப்பவர்கள் பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அடுத்ததாக இந்திய முசுலீம்கள். தமிழர்கள் மூன்றாவது இடத்தில் உள்ளனர். தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதி, தலைநகரமான போர்ட்லூயி, வடக்கு, தென்கிழக்கு மாவட்டங்களாகும். 1983ஆம் ஆண்டு தமிழை மூதாதையர் மொழி என்று கூறிக்கொண்டவர்கள் 66, 154 பேர் ஆவர். இன்று ஏறத்தாழ ஓர் இலட்சம் தமிழர்கள் இருக்கின்றனர். இவர்கள் மொத்த மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கு ஆவர்.

## ரீயூனியன்

மடகாஸ்கருக்கு வடக்கே 300 மைல் தொலைவில் இருக்கும் ரீயூனியன் தீவு மொரீசியஸை விடக் கொஞ்சம் பெரியது. இதன் தலைநகரம் செயின்ட் டெனிஸ். இத்தீவு தற்சமயம் பிரெஞ்சு அயல்நாட்டுத்துறையின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்தீவைத் தொடக்கத்தில் பண்படுத்த ஆட்கள் தேவைப்பட்டனர். ஆகையால் 18ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பிரெஞ்சுப்பகுதிகளான புதுச்சேரி, காரைக்கால் போன்ற நகரங்களிலிருந்தும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தும் வேலையாட்களைப் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் காலனியாட்சி வலிமையால் அழைத்துச் சென்றார்கள். இவர்கள் பெரும்பாலும் யூனியனில் உள்ள கரும்புத் தோட்டங்களிலும், காப்பித் தோட்டங்களிலும் பணிபுரிந்தனர். மொரீசியஸ் நாட்டிற்கு வந்து தமிழர்கள் குடியேறுவதற்கு முன்பே ரீயூனியனுக்கு வந்து அவர்கள் குடியேறினார்கள். அவ்வாறு வந்து குடியேறியவர்கள் ரீயூனியனிலேயே நிலையாகத் தங்கிவிட்டனர். அவர்களுடைய வழியினர் இன்று இத்தீவில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் 1848ஆம் ஆண்டு பிரெஞ்சுப் பேரரசில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டவுடன் மேலும் தமிழர்பலர் இத்தீவிற்கு வந்து குடியேறினார்கள். 1954ஆம் ஆண்டு புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளுக்குச் விடுதலை கிடைத்தவுடன் பல பிரெஞ்சுக் குடிமக்கள் சிறப்பாக சிவில் நீர்ப்பாசனத்துறையில் பணிபுரிந்தவர் கள் இத்தீவிற்கு வந்தனர். இன்று ரீயூனியனில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். நாட்டின் மொத்த மக்கள் தொகையில் தமிழர்கள் 28 விழுக்காடு இருக்கின்றார்கள்.

### சீசெல்சு

கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள மொம்பாசாவிற்கு ஆயிரம் மைல் கிழக்கில் இத்தீவு இருக்கின்றது. பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியின்போது 1770ஆம் ஆண்டளவில் தமிழர்கள் புதுச்சேரியிலிருந்து இத்தீவுக்கு அழைத்து வரப்பட்டனர். 1783-84ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் தொடர்ச்சியாக இங்கு வந்து குடியேறினர். இன்று உள்ள மொத்த மக்களுள் இந்தியர் 5 விழுக்காட்டினரே ஆவர். இவர்களுள் 10-15 குஜராத்திக் குடும்பங்களைத் தவிர எஞ்சியவர்கள் யாவரும் தமிழர்கள். ஏறத்தாழ 3000 தமிழர்கள் இருக்கிறார்கள் எனக் கூறலாம்.

### மார்தினிக், குவாடிலோப்

இந்தியாவிற்கு மேற்கே 15,000 மைல் தொலைவில் இருக்கும் மார்தினிக், குவாடிலோப் தீவுகளுக்கு 110 ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் மஞ்சக்குப்பம், கடலூர், தரங்கம்பாடி, நாகப்பட்டினம், புதுவை, காரைக்கால், ஏனாம் முதலிய பகுதிகளிலிருந்து சென்றனர். 1849ஆம் ஆண்டில் மார்தினிக்கிற்கு 6506 தமிழர்களும் குவாடிலோப்பிற்கு 5006 தமிழர்களும் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்காகச் சென்றனர். 1882இல் ஏறக்குறைய 30,000 தமிழர்கள் இத்தீவுகளுக்குச் சென்றனர். கரும்புத் தோட்டங்களில் பணிபுரிந்த இத்தமிழர்களைக் கூலிகள் எனத்தான் அழைத்தனர். கலப்பினத் தமிழர்கள் “சாப்ஸ் கூலி” என அழைக்கப்பட்டனர். இன்று மார்தினிக் தீவில் தமிழ்ப் பெற்றோருக்குப் பிறந்தவர்கள் 14,000 பேர் இருப்பார்கள் எனக்கூறலாம். 10,000 தமிழர் ஒரு நூற்றாண்டுக்கு மேல் வாழ்கின்றனர். குவாடிலோப்பில் 1982ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி 60 ஆயிரம் தமிழர்கள் இருக்கின்றனர். இங்குத் தமிழர்கள் பஸ்ஸெதொர தலைநகரிலும், கேப்தா நகரிலும் அதிகமாக வாழ்கின்றனர்.

### கரீபியன் தமிழர்கள்

கரீபியன் பகுதி அமெரிக்கக் குடியரசு, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் அருகில் இருக்கின்றது. இப்பகுதியில் டிரினிடாட், டொபாகோ, கயானா, சூரிநாம், ஜமெய்க்கா, கிரெனடா, குவாடிலோப், மார்தினிக் அங்குயிலா போன்ற நாடுகள் இருக்கின்றன. முதன்முதலாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தமிழர்கள்

இப்பகுதிகளுக்குச் சென்று குடியேறினர். முதன்முதலாக 1838 ஆம் ஆண்டு இந்தியக் கூலிகள் கயானாவுக்கு அழைத்து வரப்பட்டனர். பிறகு 1845 ஆம் ஆண்டு டிரினிடாட் டொபாகோவிற்கும் 1873ஆம் ஆண்டு சூரிநாம், ஜமெய்க்கா நாடுகளுக்கும் இந்தியக் கூலிகள் கொண்டுவரப்பட்டனர். இவ்வாறு வந்திறங்கிய இந்தியக் கூலிகள் சிலர் இத்தீவுகளிலி ருந்து கிரெனடா நாட்டிற்கும் சென்றனர். தமிழர்களையும் பிற இந்தியர்களையும் இந்நாடுகளில் கிழக்கிந்தியர்கள் என்றே அழைக்கின்றனர். கயானாவில் வாழும் தென்னிந்தியர்களை மதராசிகள் என அழைக்கின்றனர்.

கயானாவில் தற்சமயம் சுமார் 80,000 தமிழர்கள் வாழ்கின்றனர். தற்போது ஏறக்குறைய அறுபது ஊர்களில் வாழ்கின்றனர். டிரினிடாட் டொபாகோ நாட்டில் தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதி வாட்டர்லூ என்ற பகுதியாகும். சூரிநாம், கிரெனடா, ஜமெய்க்காவிலும் இருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை குறைவு. இத்தமிழர்கள் வாழைத்தோட்டங்களில் பணிபுரிகின்றனர். சூரிநாமில் சரமாச்சாவிலும், நிக்கெரியிலும் இந்தியர்களின் மக்கள் தொகை அதிகம். கிரெனடாவில் இந்தியர்கள் எல்லாப்பகுதிகளிலும் பரவி வாழ்கின்றனர். குறிப்பாக போர்ட் செயின்ட் ஜேம்ஸ், சமாரிடான், கும்மா, கிரேண்ட் பாக்கோலெட், புளோரிடா, கோயுயாவ் முதலிய இடங்களில் இந்தியர்கள் மிகுதியாக இருக்கின்றனர்.

## பிரிட்டன்

பிரித்தானிய நாட்டைப் பொறுத்தவரை கடந்த நாற்பது ஆண்டுகளிலேயே குறிப்பாக 1947-1948 ஆம் ஆண்டுகளிலிருந்து தமிழர் குடியேறத் தொடங்கினர். கடந்த இருபது ஆண்டுகளிலே கணிசமான அளவில் தமிழர்கள் இந்நாட்டில் குடியேறியுள்ளனர். கல்விக்காக பிரிட்டனுக்குச் சென்று அங்கேயே பணிவாய்ப்பு பெற்று அங்கேயே தங்கிவிட்ட தமிழர்களும் உண்டு. கல்வி கற்பிப்பதற்காகப் பணியமர்வு வாய்ப்புப் பெற்றுக் குடியுரிமை பெற்ற தமிழர்களும் உண்டு. வணிக நோக்கில் சென்று தங்கிவிட்ட சிறுபான்மையரும் உண்டு. தொழில்வழிக் குடியேற்றம் செய்தவர்களும் உண்டு. இலங்கை, மலேயா, சிங்கப்பூர், கயானா முதலிய நாடுகளிலிருந்து வந்து குடியேறிய தமிழர்களும் உண்டு.

பிரிட்டனில் மொத்தம் ஏறத்தாழ 2 1/2 லட்சம் தமிழர்கள் இருக்கின்றனர். ஆனால் தமிழர்கள் எண்ணிக்கை இத்தொகையை விடக் குறைவு எனக் கூறுபவர்களும் உண்டு.

## அமெரிக்கக் குடியரசு, ஆஸ்திரேலியா

36,75,545 சதுரமைல் பரப்புள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மொத்த மக்கள் தொகை 23 கோடி. மொத்த மக்கள் தொகையில் ஆசியர்கள் 1.57 விழுக்காடு இருக்கின்றனர். இதில் தென் இந்தியர்களின் எண்ணிக்கை 3 லட்சமாக உள்ளது. குறிப்பாக 1965 ஆம் ஆண்டிலிருந்து தமிழர்கள் இந்நாட்டிற்கு மிகுதியாக வந்து குடியேறத் தொடங்கினார்கள்.

இன்று ஆஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் மட்டும் 5000 தமிழர்கள் இருக்கின்றனர். பெர்த் நகரில் மட்டும் 500 தமிழர்களுக்கு மேல் இருக்கின்றனர். அண்மைக் காலத்தில்தாம் தமிழர்கள் இந்நாட்டிற்குச் சென்று குடியேறத் தொடங்கினார்கள்.

## பிற ஆப்பிரிக்க நாடுகளும், மேற்கு ஆசியநாடுகளும்

18, 19 ஆம் நூற்றாண்டிலேயே உகாந்தா, கென்யா, தாங்கனீகா, மடகாஸ்கர் முதலிய நாடுகளில் தமிழர்கள் குடியேறி விட்டதாகக் கருதப்படுகிறது. கென்யாவில் நூறு ஆண்டுகளுக்கு முன்பே மொரீசியஸ் தமிழர்கள் குடியேறிவிட்டதாகக் கருதப் படுகிறது. கென்யா கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்காக இவர்கள் வரவழைக்கப்பட்டனர். 1947க்குப்பின் கேரளா, தமிழர் பலர் குடியேறி ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். இலங்கைத் தமிழர்கள் அதிகமாக இருக்கும் பகுதி சாம்பியர், நைஜீரியா முதலிய நாடுகளாகும். கென்யாவில் 79,000, மொஸம்பிக்கில் 22,043, தான்சானியாவில் 59,000, ஏமனில் 1 இலட்சம் இந்தியர்கள் இருக்கின்றார்கள்.

மேற்கு ஆசியாவில் உள்ள ஈரான், ஈராக், குவைத், துபாய் போன்ற நாடுகளுக்குக் குறிப்பாக 1970ஆம் ஆண்டுக்குப்பிறகு தமிழர்கள் சென்று குடியேறினர். பொதுவாக நிலையாக இப்பகுதிகளில் தங்கிக் குடியேறியவர்களாக இவர்களைக் கருதமுடியாது. 1990-91 குவைத் ஈராக் போரிற்குப் பிறகு ஏறத்தாழ 25,000 தமிழர்கள் குவைத்திலிருந்து இந்தியாவிற்கு

திரும்பினர். அதேபோல் ஏறத்தாழ 25,000 பேர் ஈராக்கிலிருந்தும் திரும்பினர். சவுதி அரேபியாவிலிருந்தும் கணிசமான அளவில் திரும்பினர்.

## இலங்கைத் தமிழ் அகதிகள் குடியேற்றம்

இலங்கையில் தமிழ் ஈழச் சிக்கல் தோன்றியவுடன் இலங்கைத் தமிழ் அகதிகள் ஒருநாளைக்கு 100 தமிழர்களுக்கு மேல் குடிபெயர்ந்து தமிழ்நாடு, ஆஸ்திரேலியா, மேற்கு செருமனி, ஹாலந்து, சுவிட்ஸர்லாந்து, பிரிட்டன், அமெரிக்கக் குடியரசு, கனடா முதலிய நாடுகளுக்கு அமைதியான வாழ்க்கையைத் தேடிச் சென்று குடியேறினர். ஏறத்தாழ 25,000 இலங்கை அகதிகள் செருமனியில் குடியேறினர். பிரிட்டனில் ஏறத்தாழ 3000 பேர் குடியேறினர். கனடாவில் கணிசமாகக் குடியேறினர்.

# அலைகடலுக்கு அப்பால் சிவவழிபாடு

பிற அயல்நாட்டுத் தமிழர்களைவிட இலங்கைத் தமிழர்களே சிவ வழிபாட்டில் மிகுதியாக ஈடுபாடு உள்ளவர்கள் எனக் கூறினால் மிகையாகாது. பஞ்ச பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலியவை தொடர்பான ஐந்து சிவன் கோயில்கள் இவர்கள் வாழும் இலங்கையில் பரவலாக இருக்கின்றன. மன்னாருக்கு அருகே உள்ள திருக்கேதிசுவரம், திருக்கோணமலையிலுள்ள கோணேசுவரம், யாழ்ப்பாணத்தில் உள்ள நகுலேசுவரம், வைத்தீசுவரம், கொழும்புக்கு 50 கல் தொலைவிலுள்ள முனிசுவரம் முதலியவை இந்த ஐந்து சிவன் கோயில்களாகும். தேவாரம் பாடிய மூவர் திருக்கேதிசுவரம் கோயில், திருக்கோணேசர் ஆலயங்களில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் போற்றிப் பாடிய தேவாரப் பதிகங்கள் கிடைத்துள்ளமையால் இக்கோயில்கள் கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பே சிறப்புற்றிருந்தமை தெரியவருகிறது.

திருக்கேதிசுவரகோயிலிலுள்ள இறைவனுக்குக் கேதிசுவரர் என்றும், இறைவிக்கு கவுரிஅம்மை என்றும் பெயர். இங்குள்ள தீர்த்தம், கவுரிதீர்த்தம் எனப்படும். இத்தலத்தினைச் சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவரும் பாடிப் பரவியுள்ளனர். ஈழநாட்டுத் தலங்களுக்கு இவர்கள் நேரில் வந்து பாடியதாகவும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

திருக்கோணமலையிலுள்ள கோணேசுவரக் கோயிலிலுள்ள இறைவனுக்குக் கோணேசுவரர், லோகசங்கரர், சந்திரசேகரர் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. சந்திரசேகரர் என்னும்

இறைவிக்கு மாதுமையாள், ராஜராஜேச்வரி என்னும் பெயர்கள் வழங்குகின்றன. இங்குள்ள தீர்த்தம் பாவநாச தீர்த்தம் ஆகும். இக்கோயிலுக்கு அகத்தியர் வந்ததாகப் புராணம் சொல்கிறது. இக்கோயிலைப்பற்றி சம்பந்தரும் அருணகிரியாரும் பாடியுள்ளனர். இங்கு கோயிலில் பங்குனி உத்திரத்தில் கொடியேற்றப்பெற்றுப் பதினெட்டாம் நாளில் திருவிழா கொண்டாடப்பெறுகிறது.

இலங்கையில் மகாசிவராத்திரி பொதுவிடுமுறை நாளாகும். நுவரெலியாவிலுள்ள ஆதம்மலை முகடை (Adam's Peak) சிவனுடைய புனிதக் கால்கள் என இந்துக்கள் வழிபடுகின்றனர். இதைச் 'சிவநந்தி பாதம்' என மதிப்புடன் அழைக்கின்றார்கள். புத்த சமயத்தினரும் இங்கு யாத்திரை செய்ய வருகின்றார்கள்.

## தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சிவன் கோயில்கள்

இலங்கைக்கு அடுத்தபடியாக மலேசியா, சிங்கப்பூரில் சிவன் கோயில்கள் அதிகமாக இருக்கின்றன. மலேசியத் தமிழர்கள் சிவனை மிகுதியாக விரும்பி வழிபடுகின்றனர். இக்கோயில்களில் தினம் பூசைகள் செய்யப்படுகின்றன. இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட பிராமண அர்ச்சகர்களையும் இங்குப் பார்க்கலாம். ஆண்டுதோறும் கொண்டாடப்பெறும் விழாக்களில் ஏழை எளிய தமிழர்கள் கோயில்களில் ஏராளமான காணிக்கை கொடுக்கின்றனர்.

பல தமிழ்க்கோயில்கள் சிங்கப்பூரில் கட்டப்பட்டிருக்கின்றன. 1830ஆம் ஆண்டில் சிங்கப்பூர் சிவன்கோயில் கட்டப்பட்ட போதிலும் 1822ஆம் ஆண்டிலிருந்தே இவ்விடத்தில் தமிழர்கள் வழிபாடு செய்யத் தொடங்கினர் என்பது வரலாறு. 1968ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்து மானிய அளிப்புக்குழுவிடம் (Hindu Endowment Board) சிவன் கோயிலின் நிர்வாகப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இந்தோனேசியாவில் சித்திரை முதல்நாள் சக்கார்த்தாசிவன் கோயிலில் மலாயில் எழுதிய அரேராம அரேகிருஷ்ணா மற்றும் தேவார திருவாசகத்தைப் பாடிக் கும்பிடுவார்கள். வட சுமத்திராவிலுள்ள மேடான மாரியம்மன் கோயிலின் பின்புறத்தில் சிவன் ஆலயம் உள்ளது. பர்மாவிலும் தமிழர் கட்டிய சிவன் கோயில்களும் நடராசப் பெருமான் கோயில்களும் உண்டு.

இரங்கூனிலும், முப்பனின் நகரிலும், நிம்பலே பட்டணத்திலும் தமிழ்க் கோயில்கள் உண்டு. தாய்லாந்து மாரியம்மன் கோயிலில் சிவன் உருவமும் வழிபாட்டிற்காக அமைக்கப்பட்டிருக்கின்றது. சிவராத்திரித் திருவிழா இக்கோயிலில் நடைபெறுகின்றது. தமிழர்கள் சிவன்கோயிலை வியட்நாமிலும் கட்டியிருக்கின்றார்கள்.

## பிஜி, அமெரிக்காவில் சிவ வழிபாடு

வட இந்தியர்களைவிடத் தென் இந்தியர்களுக்கே பிஜித் தீவில் அதிக கோயில்கள் இருக்கின்றன. தென் இந்தியச் சன்மார்க்க ஐக்கிய சங்கத்தை ஸ்தாபித்த சாது குப்புசாமி இறந்தவுடன் அவருடைய சாம்பல் மேல் ஓர் நினைவுச் சின்னத்தை அமைத்தார்கள். பிறகு நந்தியை வைத்தார்கள். இவ்வாறாக இறுதியில் அமைக்கப்பட்டதுதான், நாடிசிவன் கோவில்.

அமெரிக்கக் குடியரசில் சைவ சித்தாந்த மடம் ஒன்றும் சிவன்கோயிலும் சான்பிரான்சிஸ்கோவில் உள்ளன. டெக்ஸாஸ்லுள்ள நகரில் மீனாட்சி அம்மன்கோயில் இருக்கிறது. ஹவாய்த் தீவில் சிவன் மடம் ஒன்று இருக்கிறது. பஜனை, இசை, நடன கலாச்சார நிகழ்ச்சிகள் இங்கு நடக்கின்றன.

## கயானாவிலும் பிற கரீபியன் பகுதிகளிலும் சிவபிரான் நினைவுச் சின்னங்கள்

கயானாவில் தமிழர்கள் இந்துக் கோயில்களையும் கிறித்துவ முறைப்படி “சர்ச்” என்று அழைக்கின்றனர். சில சமயங்களில் “இந்து சர்ச்” என்று கூறுவதும் உண்டு. இத்தகைய இந்து சர்ச்சுகளைத் தமிழ்நாட்டில் உள்ள கோயில்களோடு எந்த வகையிலும் ஒப்பிட முடியாது. உயர்ந்த கோபுரங்களையோ, பெரிய திருச்சுற்று மதில்களையோ, கற்சிலைகளையோ, படிமங்களையோ இந்தக் கோயில்களில் காண இயலாது. பெரும்பான்மையான கோயில்கள் நம் வீட்டுப் பூசை அறைபோல் பெரிய அளவில் உள்ளன. தெய்வச்சிலைகளுக்கு பதிலாகக் கடவுள் படங்களை வைத்து வழிபடுகின்றனர். சிவபெருமான் படங்களையும் காணலாம். சில கோயில்களில் களிமண்ணால் சிவன் சிலைகள் செய்து அழகிய வண்ணங்களைத் தீட்டி வழிபாட்டிற்கு உரியதாக்கியுள்ளனர்.

இங்குள்ள தமிழ்க் கோயில்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் (1) காளியம்மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களையும் கிராம தேவதைகளையும் உள்ளடக்கிய கோயில்கள் (2) மேற்கூறிய கடவுள்களோடு சிவன், பெருமாள், திருமகள், கலைமகள் ஆகிய தெய்வங்களை உள்ளடக்கிய கோயில்கள். முன்னதை மதராசிகளின் கோயில்கள் என்றும், இரண்டாவதை இந்துக்கோயில்கள் என்றும் அழைக்கின்றனர். ஆண்டுதோறும் இக்கோயில்களில் திருவிழா நடைபெறுவதுண்டு. ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் பூசை நடக்கின்றது. இறைவனிடம் வேண்டுதல் செய்துகொண்டு அந்த வேண்டுதல் நிறைவேறியதும் தம் இல்லங்களிலேயே தாம் வழிபடும் கடவுளுக்குச் சிறப்புப் பூசைகள் செய்வதுண்டு. அத்தகைய பூசைகள் சிவனுக்கும் செய்வதுண்டு. சிவனுக்குப் பூசை செய்ததும் பச்சைக் கொடியை வீட்டுச்சுவரின் ஒரு மூலையில் நடுவார்கள்.

டிரினிடாட்டில் தமிழர் சிவன் கோயில் கவிரா சாலையில் இருக்கின்றது. இக்கோயிலுக்கு ஒரு பூசாரி உண்டு. ஜமெய்க்காவில் உள்ள இந்துக்கள் ஒரு கோயிலைக் கூடக் கட்டவில்லை. கிரெனடாவில் மசூதியோ, கோயிலோ ஒன்றுகூட இல்லை. கூட்டயாஸ் என்று அழைக்கப்படும் கோயில்கள் தனியார் வீட்டு நிலங்களில் இருந்ததாகக் கூறுகின்றார்கள்.

## பிறநாடுகளில் சிவ வழிபாடு

தென் ஆப்பிரிக்கத் தமிழர்களில் பெரும்பான்மையோர் சிவவழிபாடு செய்பவர்கள். எடுத்துக்காட்டாகப் போர்ட் எலி சபெத்தில் ஸ்ரீசிவசுப்பிரமணிய ஆலயம், கேப்டவுனில் உள்ள சிவ ஆலயம், வெருலாமிலுள்ள சிவசுப்பிரமணியம் கோயில், டர்பனில் உள்ள ஸ்ரீவைத்தியநாத ஈச்சுரர் ஆலயம், உம்பிலோ ஈச்சுரர் கோயில் போன்ற கோயில்கள் இத்தமிழர்களுக்குச் சிவபெருமான் மேலுள்ள பக்தியைப் படம்பிடித்துக் காண்பிக்கின்றன. இத்தமிழர்களுக்குப் பொதுவாகத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருஅருட்பா முதலிய சமய இலக்கியங்களில் ஈடுபாடு உண்டு. திருப்புகழ் முருகனைப் புகழ்ந்தும், மற்ற மேலே கூறிய இலக்கியங்கள் சிவனைப் போற்றியும் பாடப்பட்டன. மகாசிவராத்திரி இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

சீசெல்சில் 1984ஆம் ஆண்டுவரை தமிழர்களுக்கெனக்

கோயிலோ, சமய அமைப்புகளோ இல்லை. 1984ஆம் ஆண்டு ஜீன் 10 ஆம் நாள் சீசெல்சு இந்துக்கோயில் சங்கம் அமைக்கப் பட்டது. இந்துக்கோயில் சங்கம் இருக்கும் குவின்சிதெருவில் வழிபாடு செய்ய இடம் இருக்கின்றது. ஒவ்வொரு ஞாயிறு காலை 8 மணிக்கும் மாலை 7 மணிக்கும் வழிபாட்டு முறைக் கூட்டம் கூடும். ஞாயிறு காலையிலும் சிறப்பு நாட்களிலும் நடராசர், விநாயகர் சிலைகளுக்குத் திருமுழுக்காட்டு செய்யப்படும். மகாசிவராத்திரி இச்சங்கத்தினரால் கொண்டாடப்படுகின்றது.

மொரீசியஸில் சுமார் 125 இந்துக்கோயில்கள் இருக்கின்றன. இங்குத் தலைநகரில் உள்ள சொக்கலிங்கம் மீனாட்சியம்மன் கோயில் பெரியது. இக்கோயிலில் இலங்கை அர்ச்சகர் ஒருவர் இருக்கிறார். இக்கோயிலைத்தவிர மேலும் பல சிறிய சிவன் கோயில்களும் கட்டப்பட்டிருக்கின்றன.

ரீயூனியனில் ஒவ்வோர் ஊரிலும் சிவன் கோயில்கள் இருக்கின்றன. சிவன் கோயில்களில் தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட குருக்கள் பணியாற்றுகின்றனர்.

# அயல்நாட்டுத் தமிழர்களின் திருமால் வழிபாடு

## இலங்கை

இந்தியாவிலுள்ளதுபோலவே இலங்கையிலும் இந்து சமயத்தில் சைவம், வைணவம், சாக்தம் என்னும் பெரும் பிரிவுகளும் சிறுதெய்வ வழிபாடுகளும் இடம்பெற்றுள்ளன. ஆனால் காலப்போக்கில் இவ்வழிபாடுகள் ஒன்றிணைந்துவிட்டன. ஆயினும் வைணவம் தன் சிறப்பு இயல்புகளை முற்றிலும் இழக்காமல் ஒரு தனி வழிபாடாகவே இன்றும் இலங்கையில் இருந்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் வேங்கடே வரதராசப் பெருமாள் கோயிலைச் சுற்றியுள்ள இடங்களில் வசிக்கும் ஏறத்தாழ நூறு வைணவக் குடும்பங்கள் திருமால் வழிபாட்டைப் பேணிக்காத்து வருகின்றன. இப்பெருமாள் கோயிலைச் சார்ந்துள்ள அடியார்க்கு நல்லான் வரம்பு என்னும் நிலப்பகுதி, யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரிய சக்கரவர்த்தியின் அமைச்சர் பெயரை, இடப்பெயராகக் கொண்டு விளங்குகிறது. வடகலை, தென்கலை வைணவ வேறுபாடுகள் மங்கிய நிலையில் இவர்கள் ஏனைய இலங்கைத்தமிழ் மக்களோடு ஒன்றி வைணவத்தைப் பேணி வருகின்றனர்.

தமிழ்மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளில் இன்று வைணவம் சைவர்கள் ஆதரவிலேதான் வாழ்ந்து வருகின்றது.

திருமால் கோயில் திருப்பணிகளையும் திருவிழாக்களையும் கண்ணன் பிறந்தநாள் ஏகாதசி போன்ற வைணவத் தினங்களையும், பெரும்பான்மையினரான சைவத்தமிழரும், சிறுபான்மையினரான வைணவத்தமிழரும் சமய உணர்வுடன் இணைந்து சிறப்பாக நடத்தி வருகின்றனர். சைவக் குடும்பங்களில் பிறந்த சிலர் திருமாலை இட்டதெய்வமாக வழிபடுவதும் வைணவ நூலாம் பகவத் கீதையை ஓதுவதும், ஏகாதசி விரதம் நோற்பதும் இன்றும் நடைமுறையிலுள்ளன.

இராமகிருஷ்ண இயக்கம், ஹரே கிருஷ்ண இயக்கம், சின்மயானந்த இயக்கம் ஆகிய நவீன சமய இயக்கங்களின் செல்வாக்குக் காரணமாகக் கடந்த பத்தாண்டுகளில் கீதைப் பேருரைகள், கூட்டுவழிபாடுகள், இசை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் வைணவச் சிந்தனைகள் கொழும்பில் வாழும் இந்துக்களிடையே ஆங்கில அறிவுள்ள ஒரு சாராரிடம் வளர்ந்து வருகின்றன.

## மலேசியா, சிங்கப்பூரில் திருமால் கோயில்கள்

மலேசியாவிலும் பெரிய, சிறிய நகரங்களில் திருமால் கோயில்கள் இருப்பதைக் காணலாம். ஆனாலும் மக்கள் மிகுதியாக வழிபடும் கடவுள்கள் சிவன், முருகன், மாரியம்மன் முதலிய கடவுள்கள் ஆகும். இக்கோயில்களில் நாளும் பூசைகள் செய்யப் படுகின்றன. தமிழ் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட பிராமண அர்ச்சகர்கள் இப்பூசைகளைச் செய்கின்றார்கள். மலாக்கா பொய்யாத விநாயகர் கோயிலிலும், மேலும் சில கோயில்களிலும் இராமன் சிலையைப் பார்க்கலாம்.

சிங்கப்பூரில் 1855 ஆம் ஆண்டு பெருமாள் கோயில் கட்டப்பட்டது. இக்கோயில் மிகவும் புகழ்வாய்ந்த கோயிலாகும். 1968 ஆம் ஆண்டு ஸ்ரீசீனிவாசப்பெருமாள் கோயிலின் நிர்வாகப் பொறுப்பு இந்து மானிய அளிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப் பட்டது. பர்மாவில் 1927இல் கட்டப்பட்ட வரதராசப்பெருமாள் கோயில் புகழ்பெற்ற கோயிலாகும். இராமநாதன் செட்டியார் என்பவர் திருமால் கோயிலைக் கட்டியுள்ளார். இக்கோயில் காஞ்சி வரதராசப்பெருமாள் கோயிலின் பாணியில் அமைக்கப்

பட்டுள்ளது. கோயில் வழிபாட்டுமுறை பாஞ் ராத்திரிக ஆகமத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

## கோவிந்தனை நம்பும் பிஜியர்கள்

நந்திலம்பாஸா பெருமாள், பெரிய ஹரே கிருஷ்ணா கோயில்கள் பிஜியில் இருக்கின்றன. எந்தக்கோயிலுக்குச் சென்றாலும் பொதுவாக எல்லா தென்னிந்தியர்களும் "கோவிந்தா, கோவிந்தா" எனக் கோயிலுக்குள் முழக்கமிடுகின்றனர். ஆகையால் தென்னிந்தியர்களையெல்லாம் பிஜியர்கள் "கோவிந்தா, கோவிந்தா" என அழைக்கின்றனர். அர்ச்சனையைக் குருக்கள் சமஸ்கிருத மொழியில் செய்வார். சாமிக்கு திருமுழுக்குச் செய்து மாலைபோடுவார்கள். ஆரத்தி காண்பிப்பார்கள். பஜனை நடக்கும். இராமாயணம் படிப்பார்கள். பஜனையில் சில தமிழ்ப்பாட்டுகளும் பாடுவார்கள்.

பிஜித்தென்னிந்தியர்கள் புரட்டாசி சனித்திருவிழாவையும் கொண்டாடுகின்றார்கள். தமிழ்ப் புரட்டாசி மாதத்தில் (செப்டம்பர் -அக்டோபர்) 4 அல்லது 5 சனிக்கிழமைகளில் இத்திருவிழாவைக் கொண்டாடுவார்கள். திருப்பதி வெங்கடேசப்பெருமாள் மேல் உள்ள பக்தியால் இம்மாதிரி கொண்டாடுகின்றார்கள். பெருமாள், ஏழுமலை என்ற பெயரைச் சிலர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். புரட்டாசி சனி என்றால் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக் கிழமைகள் என்று பொருள். தமிழ்நாட்டின் வட எல்லையில் இருக்கும் திருப்பதியிலிருந்து பல தொழிலாளிகள் பிஜிக்கு வந்து குடியேறியிருப்பதால் இத்திருவிழா இங்குக் கொண்டாடப் படுகின்றது. இம்மாதத்தில் பெருமாளின் பக்தர்கள் புலால் உணவு உண்ணுதல், வெறியூட்டும் குடிவகைகளைக் குடித்தல் முதலிய பழக்கங்களை விட்டுவிடுவார்கள். குளித்துவிட்டு அருகில் உள்ள வெங்கடேசப்பெருமாள் கோயிலுக்குச் செல்வார்கள். பெருமாளின் பக்திப்பாடல்களைப் பாடுவார்கள். பெருமாள் பெயரை மீண்டும் மீண்டும் சொல்வார்கள். ஓர்விளக்கை ஏற்றிவிட்டு வலம் வருவார்கள். சிலர் உண்ணா நோன்பு இருப்பார்கள். சிலர் ஒரு வேளை உணவு, அல்லது ஒருநாள் உண்ணா நோன்பு இருப்பார்கள். சிலர் திருவமுது மட்டும் உண்பார்கள். பொதுவாகப் புலனடக்கத் தத்துவத்தைப் பின்பற்றுவார்கள். நாமம் இட்டுக்கொள்வார்கள். திருவமுது அளிக்கும் போதும்,

அந்தத்தீபத்தை எடுத்து எல்லோருக்கும் காண்பிக்கும்போதும் "கோவிந்தா கோவிந்தா" என்று முழக்கமிடுவார்கள்.

## பிறநாடுகளில் திருமால் பூசை

பிரிட்டனில பர்மிங்காமில் வெங்கடேஸ்வரர்கோயில் இருக்கின்றது. அமெரிக்க நாடுகளில் ஹாலிவுட் அருகே இருக்கும் லாஸ் ஏஞ்சல்சில் வெங்கடேஸ்வரர்கோயில் ஒன்று இருக்கிறது. தசாவதாரக்கோயில்கள் பிட்ஸ்பர்க், நியூயார்க் நகரங்களில் உள்ளன. ஆஸ்திரேலியாவில் ஒரு பெருமாள் கோயில் இருக்கின்றது.

'இந்துசர்ச்' என அழைக்கப்படும் கயானா தமிழ்க் கோயில்களில் வெங்கடேசப்பெருமாள் படங்களையும் களிமண்ணால் செய்யப்பட்ட திருமால் சிலைகளையும் காணலாம். ஆண்டுதோறும் இக்கோயில் களில் திருவிழா நடைபெறுவதுண்டு. கயானாவிலுள்ள பெருமாள் கோயில் இந்து சமய மரபுவழி, உருவ வழிபாட்டு முறை பின்பற்றப்படுகின்றது. இக்கோயிலில் பூசை நடக்கும்போது இருவர் பறைஒலி எழுப்புவர். ஓரிருவர் மணி அடிப்பர், சங்கு ஊதுவர். பலிச்சடங்கு பின்பற்றும் மரபும் உண்டு. முன்பு தமிழ் மொழி மட்டும்தான் இக்கோயில்களில் பயன்படுத்தப்பட்டது. தற்சமயம் இந்தி, ஆங்கிலம் பயன்படுத்துகின்றனர். இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்கள் டிரினிடாட் இந்துக்களிடையே மிகச்செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. இராமரின் மேல் பக்தியைக் காண்பிப்பதற்காக அனுமான் தன் மார்பைப் பிளந்து காண்பித்தது, கண்ணன் அருச்சுனனுக்குப் போரின் போது அறிவுரை அளிப்பது போன்ற நிகழ்ச்சிகள் எல்லோராலும் இன்றும் போற்றப் படுகின்றன. ராம்லீலா, கிருஷ்ணலீலா திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

தென்னாப்பிரிக்காவில் பொதுவாக முருகனுக்கும், சிவனுக்கும் கோயில்கள் கட்டப்பட்டன. திருமாலுக்குக் கோயில்கள் மிகுதியாகக் கட்டப்படவில்லை. சில திருமால் கோயில்கள் மட்டும் உள்ளன. "போர்ட் எலிசபத்தில் உள்ள ஸ்ரீவிஷ்ணு கோயில், கிளட்ஹவ் ஸ்ரீஎம்பெருமாள் கோயில் பெருமாள் கோயில்களாகும். ஸ்ரீராமநவமி, கிருஷ்ணஜன்மாஷ்டமி இத்தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

மொரீசியஸில் கிருஷ்ணர், இராமர்கோயில்களைக் காணலாம். கோவிந்தன் விழா என அழைக்கப்படும் புரட்டாசி விரதவிழா புரட்டாசித் திங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் கொண்டாடப்படுகின்றது. இம்மாதத்தில் ஒவ்வொரு சனிக் கிழமையும் தமிழர்கள் விரதமிருப்பதுண்டு. புரட்டாசி நோன்புப் பருவத்தில் கோவிந்தன் விழாவினைத் தழுவி ஒரு மாத அளவில் காலையில் பத்துமணி அளவிற்குச் சிறப்பு நிகழ்ச்சி, மாதத்தில் இரு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இடம்பெறும். இப்போது மொரீசியஸில் தமிழுக்கு இடம் உண்டு. ரீயூனியனிலும் நாம் திருமால் கோயில்களைப் பார்க்கலாம். தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட குருக்கள் இக்கோயில்களில் பணியாற்றுகிறார்கள். 1980 இல் மொரிசீயஸ் தமிழ்மொழி விழிப்புக்குப்பின் சில தமிழ்ப் பண்டாரங்கள் ரீயூனியன் கோயில்களில் தமிழிலும், வடமொழியிலும் அர்ச்சனை செய்கிறார்கள். அதற்கு முன்பு பிரெஞ்சுமொழிதான் இத்தீவில் உள்ள தமிழர்கள் கோயிலின் ஆட்சிமொழி.

# அயலகத் தமிழர் பண்பாட்டில் தீமிதியும் மாரியம்மன் வழிபாடும்

மாரியம்மன் வழிபாடு உலகத் தமிழர்களின் பண்பாட்டு இணைப்புப் பாலமாக இருப்பதைக் கண்கூடாகப் பார்க்கலாம். சிவன், திருமால், விநாயகர் வழிபாட்டைவிட மாரியம்மன் வழிபாடே அயல்நாட்டுத் தமிழர்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருக்கின்றது. ஏனென்றால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலிருந்து, குறிப்பாகத் தஞ்சாவூர், திருச்சி, சிதம்பரம், கடலூர், வடஆர்க்காடு முதலிய பகுதிகளிலிருந்து அயல்நாட்டிற்குச் சென்று குடியேறிய தமிழர்களில் பெரும்பாலோர் தமிழ்நாட்டுக் கிராம தெய்வங்களை வணங்கும் தொழிலாளிகள், விவசாயிகள். தமிழ்நாட்டிலுள்ள சிவன், திருமால் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்ய இவர்கள் உயர்சாதியினரால் அனுமதிக்கப் படவில்லை. ஆகையால் பொதுவாக இவர்கள் மாரியம்மன், திரௌபதி, ஐயனார், அங்காள பரமேசுவரி, மதுரைவீரன், காளியம்மன் முதலிய கடவுள்களை வழிபாடு செய்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் இத்தமிழ்க் கிராம தெய்வங்கள் அயல்நாடுகளில் செல்வாக்குப் பெற்றுத் தழைத் தோங்கியதாகச் சான்றுகள் இல்லை. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து அயல்நாட்டுக்குச் சென்று குடியேறிய வேளாண்மைத் தொழிலாளர் தாங்கள் பணிபுரிந்த தோட்டங்களிலெல்லாம் இக்கிராம தெய்வங்களை, குறிப்பாக மாரியம்மனைத் திருநிலைப்படுத்தி வணங்கினார்கள்.

## மலேசியாவில் புகழ் உச்சி

காளி, மாரியம்மன், ஐயனார், முனீசுவரன், வைரவர்

முதலிய தெய்வங்களுக்கு மலேசியத் தோட்டங்களிலும், பண்ணைகளிலும் கோயில்கள் இருக்கின்றன. கோயில்களிலே பெருமைபெற்றது கோலாலம்பூரில் அமைந்துள்ள மகாமாரியம்மன் கோயில் ஆகும். இதற்குப் பெருஞ்சொத்து உண்டு. மகாமாரியம்மன் கோயில் நிர்வாகம் சிலசமயங்களில் சமூகப் பணிகளைச் செய்து வருகின்றது. இக்கோயில் நிர்வாகத்தால் சமய இலக்கியங்கள் வெளியிடப்படுகின்றன. திருமுறைகள் போட்டி நடத்தப் படுகின்றன. நாதசுவர வித்துவான்கள் தமிழகத்திற்கு வந்து, பயிற்சி பெற்றுவர ஏற்பாடு செய்யப்படுகின்றது. தமிழகத்திற்குச் சென்று கலைகள் கற்றுவர இதன் உதவியால் மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

மலேசியாவில் உள்ள மாரியம்மன் கோயில்களில் தீமிதிவிழா கொண்டாடப்படுகின்றது. பொதுவாக எல்லாக் கோயில்களின் (எடுத்துக்காட்டாகப் பினாங்கில் மின்டன் எனும் ஊரில் உள்ள மாரியம்மன்கோயில்) தீமிதி விழாவின் போதும் ஒரு தீக்குழி வெட்டப்படுகின்றனது. இத்தீக்குழி 6 அடி ஆழமும் 6 அடி அகலமும் 20 அடி நீளமும் உள்ளது. இவ்விழாவின்போது பக்தர்கள் மயில் தோகையில் அலங்கரிக்கப்பட்ட காவடிகளைத் தூக்கிச் செல்வார்கள். இவர்கள் தீக்குழிக்கு நடந்து செல்லும் சாலைகள் மாவிலை, வேப்பிலை, தென்னை, பனையோலை முதலியவற்றால் செய்யப்பட்ட தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். இவர்கள் இச்சாலைகளின் வழியாக நடந்து வந்து தீக்குழியின் அருகில் வருவார்கள். தீக்குழியின் மேல் நடந்து செல்ல இருக்கும் பக்தர்கள் பலவிதக் கட்டுப்பாடுகளுடன் சில நாட்கள் வாழ்வார்கள். உணவுக்கட்டுப்பாடு (உண்ணா நோன்பு உட்பட), தூய எண்ணம், தூய செயல்கள் போன்ற பலவித நோன்புகளைப் பின்பற்றுவார்கள்.

தீக்குழிமேல் பக்தர்கள் நடக்கும்முன் நேர்த்திக்கடன் செய்யப்படும். இவ்விழாவிற்காகச் சிறப்பு விருந்தினராக வேறு இடத்திலிருந்து அழைக்கப்பட்ட ஒரு பூசாரிதான் முதன்முதலில் தீக்குழியின் மேல் நடப்பார். பிற பக்தர்கள் அவரைப் பின் தொடர்ந்து செல்வர். தீக்குழியின் மேல் நடந்து செல்லும் சில பக்தர்கள் சில நொடிகள் தீமேல் நடனமாடுவார். ஆனந்தம் உள்ளவர்களாகக் காணப்படுவர். அவர்கள் தீக்குழியில் நடந்து செல்வதற்காகவும், உதவ சில உதவியாளர்கள் தீக்குழியின் அருகில் நிற்பர். இவ்வாறு பக்தர்கள் தீக்குழியின்மேல்

நடந்துசென்றபிறகு உடனடியாக அருகில் உள்ள தூயபால் நிறைந்துள்ள குழிகளில் தங்கள் கால்களைவிட்டுக் கழுவுவர். இவ்வாறு கால்களைக் கழுவியவுடன் காவடிகளைத் தாங்கிக் கொண்டு செல்லும் பக்தர்கள் அருகில் உள்ள கோயிலைச் சுற்றி நடனமாடிக்கொண்டே செல்லுவார்கள். பிறகு கோயிலுக்கு உள்ளே சென்று வேண்டுதலை நிறைவேற்றிய மனநிறைவுடன் தாங்கள் தூக்கிச் சென்ற சுமைகளைக் (காவடி உட்பட) கழற்றிக் கீழே வைத்து விடுவார்கள். இவ்விழாவின்போது கோயில்அதிகாரிகள் எல்லோருக்கும் சைவ உணவு அளிப்பார்கள்.

## சிங்கப்பூரில் சிறப்பான வழிபாடு

மாரியம்மன், பிள்ளையார், முருகன், திரௌபதி முதலிய கடவுள்கள் மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கின்றன. 1828ஆம் ஆண்டு கட்டப்பட்ட 242 தென்பாலச்சாலையிலுள்ள மாரியம்மன் கோயில் ஒரு புகழ்பெற்ற தமிழ்க்கோயிலாகும். மிகப்பழமையானதும், மிக முக்கியமானதும் ஆன இந்துக் கோயில் என இக்கோயில் கருதப்படுகின்றது. இக்கோயிலின் கதவுகளிலும், உச்சிப் பகுதிகளிலும், ஐந்து அடுக்குக் கோபுரங்களிலும் இந்துப் புராணங்கள் தொடர்பான அழகான உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. தீமிதி விழா சிங்கப்பூரிலும் பக்தியுடன் பின்பற்றப்படுகின்றது. சிங்கப்பூரில் தீமிதிப்பது ஒருநாள் நிகழ்ச்சியானாலும் அது தொடர்பான நிகழ்ச்சிகள் ஏறத்தாழ மூன்று மாத காலம் நடைபெறுகின்றன. ஸ்ரீமாரியம்மன் கோயிலின் நிர்வாகப் பொறுப்பு இந்து மானிய அளிப்புக் குழு வசம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றது. சிங்கப்பூர் அரசு பாதுகாத்துக்கொண்டு வரும் 19 வரலாற்றுச் சின்னங்களில் இம்மாரியம்மன் கோயிலும் ஒன்றாகும்.

## இந்தோனேசியாவில் அன்புடன் வழிபாடு

வட சுமத்திராவில் முப்பத்திரண்டு தமிழ் இந்துக்கோயில்களும், தென்னிந்திய மகுதி ஒன்றும் தமிழர்களால் எழுப்பப்பட்டன எனத் தெரியவருகிறது. ஆனால் பல கோயில்கள் இன்று இயங்கவில்லை. இதற்குக் காரணம் தோட்டப்புறங்களில் தமிழர்கள் வாழாததுதான். மேடான் நகரத்திலுள்ள கோயில்கள் சிறப்பாக இயங்குகின்றன. மேடான் நகரத்தைச் சுற்றிப்பார்க்கும் எவரும் மாரியம்மன் கோயிலைப் பார்க்காமல் இருக்க முடியாது. ஜலான்

எச்சைதூல் அலிவ்வின் துங்கு உமார் எனும் சாலையில், அதாவது மேடான் நகரக் கடைத்தெருக்களில் முக்கியமான ஒன்றில் மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. கோயிலின் வாசலில் சிறு கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மதில்களால் கோயில் சூழப்பட்டு இருக்கிறது. இடப்புறமாகக் கோயிலை வலம் வந்தால் முதலில் நவக்கிரகங்கள் ஆலயம் தென்படும். அதனையொட்டி வீரனாருக்குக் கோயில் எழுப்பப் பட்டிருப்பதைக் காணலாம். கோயிலின் பின்புறத்தில் (மூலையில்) சிவன் ஆலயம் உள்ளது. அதையடு[illegible]லகமும், பெருமாள் கோயிலும் இருக்கின்றன. கோபு[illegible]ன் வலப்புறத்தில் இடும்பன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் மண்டபத்திற்குள் மாரியம்மன் மூலத்தானமும், பக்கங்களில் பிள்ளையார், முருகன் ஆகியோருக்கான கோயில்களும் இருக்கின்றன. கோயில் பின்புறத்தில் 'தர்மபுத்திரா' பள்ளிக்கூடம் அமைந்திருக்கின்றது.

நிலப்பதிவேடுகளின்படி மாரியம்மன் கோயில் 1848 இல் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. மாரியம்மன்கோயிலைப் பலமுறை பிரித்துக் கட்டியிருக்கின்றனர். கோயிலின் சமயச் சார்பான நிகழ்ச்சிகள் அனைத்தும் கோலாலம்பூர் மாரியம்மன் கோயிலின் சமய அட்டவணையைப் பின்பற்றியே நடத்தப்படுகின்றன. ஆனால் இறைவனுக்குப் பூசை செய்யும் முறைகளில் சிங்கப்பூரில் காணப்படும் ஆகம முறைகள் காணப்படவில்லை. அதுபற்றி வடசுமத்திரா தமிழர்களும் கவலைப்படவில்லை. இக்கோயிலில் இந்து மதத்தை இந்தோனேசிய மொழியிலேயே கற்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெள்ளிக் கிழமைகள் தோறும் வழிபாட்டு வகுப்பு இரவு மணி ஏழரைக்கு நடத்தப் படுகிறது. கோயில் நிர்வாகத்தினரே தீமிதி விழா நிறுத்தப் பட்டதற்குக் காரணம் எனப் பொதுமக்கள் கருதுகின்றனர். இதன் விளைவாக 1973ஆம் ஆண்டு இந்தோனேசிய அரசு தீமிதி விழா கொண்டாடுவதைத் தடை செய்தது.

ஆனால் சுங்கு சுப்பு பெக்காலா மாரியம்மன் கோயில் தீமிதித் திருவிழா பல இன்னல்களுக்கு இடையில் நிர்வாகத்தினரால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. 1876 ஆம் ஆண்டு சுங்கு சுப்பு மாரியம்மன் கோயில் கட்டப்பட்டதாகக் கூறுகின்றார்கள். தீமிதித் திருவிழா ஒவ்வோர் ஆண்டும் ஜீன் திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று கொண்டாடப்படுகின்றது. ஏறத்தாழ ஐந்து நாள்கள் இந்நிகழ்ச்சி நடக்கின்றது.

இந்தோனேசியப் புரட்சியின்போது கூட இந்நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது.

தீக்குழி மூடப்படக்கூடாது எனும் தடையிருந்ததால் அது வாளா விடப்பட்டிருந்தது. அத்தீக்குழியைச் சுற்றிச் சிறிய வேலி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதரச் சடங்குகள் அனைத்தும் ஆர்வத்துடன் செய்யப்படுகின்றன. மஞ்சள்நிற ஆடைஅணிந்து இடக்கரத்தில் மஞ்சள் நூலைக் கட்டிக்கொண்டு வேப்பிலைகளைக் கைகளில் வைத்துக்கொண்டு பக்தர்கள் நடக்கின்றனர். தங்கத்தால், வெள்ளியால் செய்யப்பட்ட, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அம்மன் பல்லக்கில் கோயிலிலிருந்து வெளிவருகின்றது. கரகம் முன் செல்ல, மூன்று காவடிகள் பின் தொடர்ந்து செல்கின்றன. அவற்றின் பின் வேப்பிலை ஏந்திய பக்தர்கள் நடக்கின்றனர். முன்னாளைய தீக்குழியைக் கரகத்துடன் பக்தர்கள் மூன்றுமுறை வலம் வருகின்றனர். ஒவ்வொரு சுற்றின் பின்னரும் கரகம் மாரியம்மனை நோக்கி நிற்கும். முன்னாளைய தீக்குழியில் சூடங்கள் ஏற்றிவிடப்படும். கரகம் வேலிக்கு வெளியில் வந்ததும் அம்மன் பல்லக்கு காவடிகளைப் பின்தொடர்ந்து வரும். கரகமும், காவடிகளும் பக்தர்கள் பின்தொடர மாரியம்மன் கோயிலை வலம்வரும். ஒவ்வொரு கோயிலின் முன்புறத்திலும் பூசை நடைபெறும். நாகூர் ஆண்டவர் திருமுன் மட்டும் பூசை நடத்தப்படாது.

## பர்மா, தாய்லாந்திலும் மாரியம்மன் பக்தி உண்டு

பர்மாவில் தீமிதிப்பு போன்ற சடங்குகளில் பௌத்த குருமார்கள் நேரடியாகப் பங்கு கொண்டு வழிபாடும் செய்து வருகின்றனர்.

அண்மைக்காலத்துக்குரிய தமிழ்க் கோயில் தாய்லாந்து தலைநகரான பாங்காக்கில் சிலாம் சாலையிலுள்ள மாரியம்மன் கோயிலாகும். வைத்தி படையாட்சி என்பார் இக்கோயிலைக் கட்டினார். 1888 ஆம் ஆண்டில் இக்கோயில் விரிவாக்கம் செய்யப்பட்டது. சிங்கப்பூர் மகாமாரியம்மன் கோபுரம் எழுப்பிய தஞ்சைச் சிற்பி சிதம்பரநாதன் என்பவரே இதனையும் கட்டினார். 1955 ஆம் ஆண்டில் இக்கோயிலின் குடமுழுக்கு நடந்தது. இக்கோயிலில் இருக்கும் முதற்கடவுள் மாரியம்மன் ஆகும். ஆனாலும், சிவன், பிரம்மா, முருகன், கணேசர், சைவ

நாயன்மார்கள் விக்கிரகங்களும் வழிபாட்டிற்காக அமைக்கப் பட்டிருக்கின்றன. தமிழ்ப்பண்டாரம் ஒருவர் இக்கோயிலின் அர்ச்சகராகப் பணியாற்றுகிறார். இவர் தமிழிலேயே வழிபட்டு மந்திரங்களை ஓதுகின்றார். ஆனால் இக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பு தமிழ் முன்னோர்கள் வழித்தோன்றலான தாய் மக்களிடம் இருக்கின்றது. இக்கோயிலில் வரும் பெரும்பான்மையான பக்தர்கள் தாய் மக்களும், சீனர்களும் ஆவர். மிக அதிகமாக வருவோர் தாய்லாந்து மக்களே. தாய் மற்றும் சீன பக்தர்கள் பக்தியுடன் அளிக்கும் பணம் முதலிய காணிக்கைகளிலிருந்துதான் இந்தக்கோயில் ஆதரவு பெற்றுக் காப்பாற்றப்படுகின்றது. இத்தெய்வம் சக்திவாய்ந்த தெய்வம்; வழிபட்டால் வெற்றியும், இலாபமும் கிடைப்பது உறுதி என இவர்கள் நம்புகின்றார்கள். வேறுபாடின்றி மாரியம்மன் கோயிலில் பல புத்த உருவச் சிலைகளையும் வைத்திருக்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் திங்களில் நவராத்திரி, சிவராத்திரி திருவிழா ஒன்பது நாட்கள் இக்கோயிலில் நடைபெறுகின்றன. காவடி தூக்கல், அலகு குத்தல், தேர் இழுத்தல் போன்ற பல்வேறு தமிழ்நாட்டுச் சமய வழிபாட்டு முறைகள் இக்கோயில் திருவிழாவின்போது பின்பற்றப்படுகின்றன. பத்தாவது நாள் ஊர்வலம் வரும்போது தாய்மார்கள் இந்த மாரியம்மன் முன் விழுந்து வணங்குகிறார்கள். விபூதியைப் பயபக்தியுடன் வாங்கிக் கொள்கிறார்கள். மலேசியாவிலிருந்தும் சிலர் அங்கு இதற்காகப் போவது உண்டு.

## பிஜி: நம்பிக்கை ஏராளம்

இன்று பிஜித் தீவில் ஏறக்குறைய நாற்பது கோயில்களில் தீமிதிவிழா நடைபெறுகின்றது. எடுத்துக்காட்டாக சுவாவில் உள்ள மகாதேவி மாரியம்மன் கோயிலைக் குறிப்பிடலாம். இக்கோயிலைக் கட்டியவர்கள் கந்தன் பூசாரி, ரெங்கசாமி நாயுடு மற்றும் சிலர். தினம் பூசை நடக்கும் நேரங்கள் காலை 6.30-7, மாலை 6.30; ஆராதனையும் வழிபாடு செய்வோர்களின் பூசையும் காலை 7லிருந்து மாலை 9 மணிவரை.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு திங்களில் இக்கோயிலில் தீமிதிவிழா நடக்கும். இவ்விழா பத்து நாள் கொண்டாடப்படும். அதாவது வியாழக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை முடியும். இந்தக்கோயிலின் முதல் தீமிதி விழா 1928 ஜீன் 16ஆம் நாள் நடந்தது. தீக்குழியின் மேல் முதன்முதல் நடந்தவர்கள் சுப்பையா

பூசாரி, ரங்கசாமி பூசாரி, ராமசாமி, கந்தன், நடேசன் முதலியார் ஆகியோர் ஆவர்.

தீமிதிவிழாவின்போது வியாழக்கிழமை மாலை ஆறு மணிக்குச் சுப்பையா பூசாரியின் நினைவாகக் குரு பூசை நடக்கும். மாலை 6 மணியிலிருந்து 11 மணிவரை அம்மனுக்குப் பால், தயிர்,தேன், மஞ்சள் தூள் நீர், தண்ணீர் ஆகியவை திருமுழுக்குச் செய்யப்படும். புனிதமான துணியினால் சிலையைத் துடைத்து விட்டு புதுப்புடவை கட்டுகின்றனர். நகை போடுகின்றனர். பூக்களை வைத்து அலங்கரிக்கின்றனர். அம்மனுக்கு முதல் பூசை வியாழன் நள்ளிரவிலிருந்து வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரை மதுரைவீரன் கடவுளுக்கு ஒரு கொடி உயர்த்தப்படுகின்றது.

மாலையில் உடுக்கு, தபேலா நாதங்களை இசைத்துக் கொண்டு அம்மனுக்குப் பூசை செய்வார்கள். பூசை நடக்கும் போது வழிபாடு செய்பவர் ஒருவருக்குச் சாமி பிடித்துக் கங்கணம் கட்டவேண்டும். கடவுள்சிலையிலிருந்து பூவிழுவதற்குப் பூசாரி காத்துக்கொண்டிருப்பார். முதலில் கங்கணம் கணேசருக்குக் கட்டப்படும். பிறகு மகாதேவிக்கும், அதற்குப்பிறகு சூலம், மற்ற கடவுள்கள், தலைமைப் பூசாரி, தர்மகர்த்தா, சங்கத்தின் தலைவர், மற்ற வழிபாடு செய்பவர்கள் முதலியவர்களுக்கும் முறையே கங்கணம் கட்டப்படும். சனிக்கிழமையிலிருந்து அடுத்த வெள்ளிக் கிழமை வரை கங்கணம் கட்டிக்கொண்ட பக்தர்கள் சூலத்தோடு வீடு வீடாகச் சென்று காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணி வரை பூசை செய்வார்கள். திரும்பியவுடன் அவர்கள் கோயிலுக்கு அரிசி, பழம், உண்டியலில், பக்தர்கள் போட்ட பணம் முதலியவற்றை அளிப்பார்கள்.

வெள்ளிக்கிழமை இரவு 11 மணி அளவில் கடற்கரையிலிருந்து சக்திகரகம் திரும்பி வரும். அப்போது தபேலா, செனாய் இசையுடன் இணைந்து பக்தர்கள் குரலிசை எழுப்புவார்கள். அவர்கள் பாதி வழி திரும்பி வரும்போது திரௌபதி அம்மனும், முகமூடி போட்டுக்கொண்ட ஓர் ஆணும், ஒரு பெண்ணும் அவர்களைச் சந்தித்துச் சக்திக் கரகத்துடன் கோயிலுக்கு வருவார்கள்.

வெள்ளிக்கிழமை மாலை பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் சங்கம் குழுவினர் உணவளிப்பார்கள்.

சனிக்கிழமை மாலை தென்இந்தியத் தெருக்கூத்து நடன நாடகம் இரவு 8.30 மணிக்குத் தொடங்கும். இரவு 11 மணிக்கும் 11.30 மணிக்கும் இடையில் பக்தர்கள் தங்கள் தோளில் திரௌபதி அம்மன் சிலையை எடுத்துச் செல்வார்கள். மேலும் பூசாரி தீக்கரகத்தை எடுத்துச் செல்வார். கோயிலைச்சுற்றி இவர்கள் மூன்று முறை வலம் வருவார்கள். தீக்கரகம் எதிரில் வைக்கப்படும். சங்கத்தின் தலைவர், மற்ற குழு உறுப்பினர்கள் முன் தலைமைப் பூசாரி தீக்குழியில் தீ மூட்டுவார். பக்தர்களும் கோவிந்தா இசைத்துக்கொண்டு கற்பூரம் ஏற்றி விறகின்மேல் போடுவார்கள். நள்ளிரவு சமயத்தில் இது நடக்கின்றது.

ஞாயிறு காலை 6 மணிக்குத் தெருக்கூத்து முடிகின்றது. கங்கணம் கட்டிக்கொண்ட பக்தர்கள் கடலுக்குச் சென்று குளிக்கின்றார்கள். பிறகு காலை 7 மணிக்குக் கோயிலுக்கு வருகின்றார்கள். பால், பழம் போன்ற உணவைப் பக்தர்கள் உட்கொள்கிறார்கள்.

இதற்கிடையில் கோயிலின் நுழைவாயிலிலும், கோயிலுக்குச் செல்லும் பாதையிலும், கோயிலைச் சுற்றியுள்ள இடங்களிலும் மாவிலை, வேப்பிலை, தென்னைஓலை முதலியவற்றால் செய்யப் பட்ட தோரணங்கள் கட்டி அலங்கரித்து வைப்பார்கள். பிற்பகல் 2இலிருந்து 3.30 மணிவரை தீமிதிவிழா நிகழ்த்துவார்கள். வந்திருக்கும் மக்களின் பொழுது போக்கிற்காக ஏதாவது வேடிக்கைக் காட்சி நடத்தப்படும்.

கடற்கரை ஓரத்திலுள்ள தீமிதியாளர்கள் குளித்துவிட்டு, தீக்கரகம், கங்கைக் கரகங்களை அலங்கரிப்பார்கள். திருநீறு, குங்குமம், சந்தனம் தடவிக்கொண்டு உடம்பில் அலகுகளையும் சூலத்தையும் குத்திக்கொள்வார்கள்.

மாலை 3 மணிக்குக் கடற்கரையிலிருந்து கிளம்பி 4.30 மணி அளவில் தலைமைப் பூசாரியும் மற்ற பக்தர்களும் சக்தி கரகத்தையும் தீக் கரகத்தையும், கங்கா கரகத்தையும் தூக்கிக் கொண்டு தீ மேல் நடக்கத் தொடங்குவார்கள். மூன்று முறை இவர்கள் தீ மேல் நடப்பார்கள். ஒவ்வொரு முறையும் கோயிலைச் சுற்றி வலம் வருவார்கள்.

திங்கள் காலை 9 மணிக்குச் சக்தி கரகம், தீக்கரகம்,

கங்கா, சூலம் முதலியவற்றுக்குப் பூசை செய்வதற்காகக் கடலுக்கு எடுத்துச் செல்வார்கள். அச்சமயத்தில் பக்தர்கள் கங்கணத்தை நீக்கி விடுவார்கள். கடலிலிருந்து பக்தர்கள் கடல் தண்ணீரைப் பித்தளைப் பாத்திரங்களில் எடுத்துக்கொண்டு சாந்தி வருவதற்காகக் கோயில் உள்ளேயும், சுற்றியும் தெளிப்பார்கள். மாலையில் பெரும்பான்மையான பக்தர்கள் கோயிலைவிட்டு வெளியேறி விடுவார்கள்.

ஒருவாரம் கழித்துவரும் ஞாயிற்றுக்கிழமை அன்று பக்தர்களும், பொதுமக்களும், பூசாரியும் அம்மனுக்குக் கூழ்படைப்பார்கள். அச்சமயத்தில் நல்ல புது உடை அணிந்து பூக்களாலும், நகைகளாலும் அம்மனை அலங்கரிப்பார்கள். கூழ்படைத்தல் சடங்கு முடிந்தவுடன் ஆடையும் காணிக்கைகளும் பூக்களும் மற்ற அலங்காரங்களும் அம்மனின் வணங்குவதற்குரிய இடத்திலிருந்து நீக்கப்பட்டு, கடல் தண்ணீரோடு கலக்கப்படும் அன்று மாலை 3.30 மணிக்குக் கொடி இறக்கப்படும். கடைசியாக மதுரைவீரன் கடவுளுக்கும் கணேசருக்கும் சிறப்பாகப் பூசை செய்யப்படும் இத்துடன் தீமிதித் திருவிழா பிஜியில் முடிவடைகிறது.

## கயானாவில் தமிழ்ப்பண்பாட்டின் அடித்தளம்

கயானாவில் உள்ள பெரும்பான்மையான தமிழர்கள் காளிமே (காளியம்மை), மாரியம்மா முதலிய கடவுள்களை வழிபடுகின்றார்கள். காளியைத்தான் இவர்கள் காளிமே என அழைக்கின்றார்கள். காளியின் தோற்றம் சக்தி, பணிகள் உறவுகள் பற்றிய கதைகள் பல உண்டு. காளியையும் அவளுடைய பாதுகாவலன் மதுரைத் தலைவனான மதுரை வீரனையும் கொண்டாடிப் போற்றுகின்றார்கள். இவ்வழிபாடு இந்நாட்டின் நாட்டுப்புறப் பண்பாடுகளில் ஒன்றாக இருக்கின்றது.

காளி என்றால் கருப்புத்தாய் என்று பொருள். காளியை மகாகாளி, காளிமாதா, மாரியம்மா, மாரியம்மன் என்றும் அழைக்கின்றார்கள். அம்மை, காலரா நோய் தோன்றுவதற்கு இத்தாய்தான் காரணம் என்று கருதுகின்றார்கள். சிவபெருமானின் மனைவி காளி. 1954-1960ஆம் ஆண்டுகளுக்கு இடையே காளி வழிபாடு குறையத் தொடங்கியது. தமிழர்கள் வாழும் ஒவ்வொரு தோட்டத்திலும் கிராம ஆண்டு அல்லது கவ்பூசை கிராம

வழிபாட்டு முறையில் நடக்கின்றது. பெரிய அழகான கோயில் கட்டடங்கள் எழுப்பப்படவில்லை. சில தோட்டங்களில் மட்டுமே சிறுகோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. கிராம ஆண்டுத் திருவிழாவின் போது களிமண்ணில் செய்த சிலைகள் அலங்கரிக்கப்பட்டு வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படும். ஆனால் பூசைகள் முடிந்து விழா முடியும் தினத்தில் இச்சிலைகளைத் தண்ணீர் உள்ள குளங்களிலோ கிணறுகளிலோ போட்டு விடுவார்கள். இத்திருவிழாக்களின்போதுதான் பூசாரிகள் தெய்வம் ஆடத் தொடங்குவர். அப்போது அவர்கள் உடல், மனநோய் உள்ளவர்களுக்குத் தேவையான அறிவுரைகளை அளிப்பார்கள். மற்ற நாள்களில் ஆண்டு முழுவதும் கடவுளை வீட்டுப் பூசை அறைகளில் வழிபடுவார்கள். அல்லது “கோயிலோஸ்” என்று அழைக்கப்படும் கோயிலில் வழிபடுவார்கள்.

1940ஆம் ஆண்டுக்கும் 1960ஆம் ஆண்டுக்கும் இடையே ஆண்டுத்திருவிழா கொண்டாடப்படுவது பல இடங்களில் குறையத் தொடங்கியது. மிருகங்களின் தலைகளை வெட்டுவது, பறவைகள், சேவல் கோழிகளின் கழுத்தைக் கடித்துக் கொய்தல், இரத்தத்தைக் குடித்தல் போன்ற சடங்குமுறைகளின் தத்துவத்தைப் புரிந்துகொள்ளாத பல கயானா பொதுமக்கள் இக்காளியின் வழிபாட்டைக் காட்டுமிராண்டி வழிபாடு என்றும், பிசாசு தீய ஆவி வழிபாடு என்றும் வெறுக்கின்றார்கள்.

கடந்த பதினைந்து ஆண்டுகளில் காளியின் வழிபாடு புத்தெழுச்சி பெற்றிருக்கின்றது. கோயில்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு பெருகியிருக்கின்றது. சடங்கு முறைகள் திருத்தப் பட்டிருக்கின்றன. சில பழைய முறைகள் விடப்பட்டன. புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மக்களின் ஆதரவு அதிகரித்திருக்கின்றது. தற்சமயம் கொல்லாமையைப் பின்பற்றும் பிரிவினர் இருக்கின்றனர். ஏழு கோயில்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றன.

இந்நாட்டுக்கோயில்களில் மூலவரான காளியம்மனுக்குப் பெரிய அறையும் மதுரைவீரன் போன்ற கிராமதேவதைகளுக்குத் தனித்தனிச் சிறிய அறைகளும் உள்ளன. கோயில்கள் சிறியனவாக இருந்தால் எல்லாக் கடவுள்களையும் ஒரே அறையில் உயரமான மேடையில் வைத்திருப்பார்கள்.

வாரம் ஒருமுறை எல்லோரும் இணைந்து கோயிலில் வழிபாடு செய்கின்றார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் கோயிலில் கூட்டுப்பிரார்த்தனை ஒரு மணி நேரத்திற்கு நடை பெறும். அப்போது "மாரியம்மன் தாலாத்து", "தாலாத்து சிலக்குத்து" போன்ற நூல்களில் உள்ள பாடல்களைத் தாளத்தோடு பாடுவர்.

கூட்டு வழிபாடு முடிந்ததும் பூசாரி தம் பூசையை அறிந்தபடி முறையாகத் தொடங்குவார். முதலில் பக்தர்கள் கொண்டுவந்த பூக்களைக் காளியம்மன் பாதத்தில் வைத்துவிட்டுத் தேங்காய்களை உடைத்துச் சாம்பிராணி தூபம் காட்டிக் கற்பூர ஆராதனையோடு பூசையை முடித்துவிடுவார். பூசை நடைபெறும் காலத்தில் பக்தர்களில் பலர் பாடிக்கொண்டிருப்பர். இருவர் பறை ஒலி எழுப்புவர், ஓரிருவர் மணி அடிப்பர். பெருமாளுக்குப் பூசை செய்யும்போது சங்கு ஊதுவதும் உண்டு. பூசை நடக்கும்போது காளிதெய்வம் வரும் அனுபவம் பலருக்கு இருக்கின்றது.

நாட்டின் எல்லா இனப்பிரிவினர்களுக்கும் தற்சமயம் காளிபூசை ஈடுபாடு ஏற்பட்டிருக்கின்றது. எந்த ஞாயிற்றுக்கிழமை பூசை நாளிலும் மதராசிகளைத் தவிர பிற இந்தியர்களையும் மற்ற சமயத்தினரையும், ஆப்பிரிக்கர்களையும் காணலாம். எல்லோரும் இக்கோயில்களை நோய்தீர்க்கும் மருத்துவ நிலையங்களாகவும் கருதுகின்றனர். கொரண்டின் பகுதியில் உள்ள ரோஸ் ஹால் அம்மன் கோயிலை ஓர் ஆப்பிரிக்க பக்தர் நடத்துகிறார். ஹெர்ஸ் டெலிஸ் கோயிலில் பக்தியோடு குறி சொல்லும் இளைஞர் ஓர் இசுலாமியர்.

போர்பாஸ் (Fore pass) என்று அழைக்கப்படும் தீமித்தல் விழா தற்சமயம் நடத்தப்படுவதில்லை. கைகளின்மேல் குதிரைச் சவுக்கால் அடித்தாலும் எவ்வித வலியோ காயமோ இல்லாமல் இருப்பது அல்லது கற்பூரத்தை ஏற்றி வாய்க்குள் அணையும்வரை வைப்பது போன்ற சடங்குகள்தாம் தற்சமயம் பொதுவாகப் பின்பற்றப்படுகின்றன.

இறைவனிடம் வேண்டுதல் செய்துகொண்டு அந்த வேண்டுதல் நிறைவேறியதும் தம் இல்லங்களிலேயே தாம் வழிபடும் காளியம்மனுக்கும், மாரியம்மனுக்கும், மதுரை வீரனுக்கும், சிறப்புப்பூசைகள் செய்தல் உண்டு. 'பூசை முடிந்ததும்

மாரியம்மனுக்குரிய மஞ்சள் அல்லது சிவப்பு நிறக்கொடியை அல்லது காளிக்குரிய கருமை நிறக்கொடியை வீட்டின் சுற்றுச்சுவரின் ஒருமூலையில் நடுவார்கள். இப்பழக்கத்தைப் பீகார் நாட்டிலிருந்து வந்தவர்களிடமிருந்து தமிழர்கள் கற்றுக்கொண்டு தம்முடையதாக்கிக் கொண்டனர். இதுபோல வங்காளத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படும் காளிபூசையையும் இந்நாட்டுத் தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

முன்பு தமிழ் மொழி மூலம் மட்டும்தான் கோயிலில் தொடர்பு கொண்டிருந்தனர். தற்சமயம் இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டையும் பயன்படுத்துகின்றனர். ஆனால் நெடுங்காலமாக இருக்கும் கோயில்களில் இன்றுகூடத் தமிழ் மொழித் தொடர்புக்குத்தான் முதன்மை அளிக்கப்பட்டிருக்கின்றது. கீர்த்தனைபாடும் பிரிவினர்கள் பஜனை செய்பவர்கள், தமிழ்மொழி, இந்திமொழி முதலிய மொழிகளைப் பயன்படுத்துகின்றார்கள். பல கோயில்களில் இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றை மட்டும் பயன்படுத்துகின்றனர்.

## டிரினிடாட் மாரியம்மன்

தென் இந்தியர்களை டிரினிடாட்டில் மதராசிகள் என அழைக்கின்றனர். இவர்கள் பக்தியுடன் அதிக ஆண்டுகள் தீமிதி விழாக் கொண்டாடினர். இவ்விழாக் கொண்டாடிய காலத்தில் 12 அடி நீளம் 6 அடி அகலம் 1 அடி ஆழம் உள்ள குழிகளைத் தோண்டி அக்குழிக்குள் தீ மூட்ட விறகுகளைப் போட்டிருப்பார்கள். ஒருவாரம் பிரார்த்தனை, உண்ணா நோன்பு இருக்கும் பக்தர்கள் முதுகில் உடை அணியாமல் உறையற்ற கால்களுடன் இத்தக்குழியின் மேல் நடப்பார்கள். இவர்கள் தீமிதிக்கும் போது முரசொலிக்கப்படும்.

## மொரீசியஸ், ரீயூனியன்: பரவசத்துடன் வழிபாடு

மொரீசியசில் சில காளி கோயில்களும், மாரியம்மன் கோயில்களும் இருக்கின்றன. தீமிதித்தல் என்பது மாரியம்மன் கோயில்களில் பெருமளவில் நடத்தப்படுகின்றது. திரௌபதி அம்மனுக்கும் தீமிதி நிகழுவதுண்டு. பாடி நோன்பிருந்து விழா நடத்துவார்கள்.

ரீயூனியனிலும் காளிகோயில்கள் அதிகம் உண்டு. பல கோயில்களில் தீமிதிக்கின்றனர். சில கோயில்களில் ஆட்டுக்கடா வெட்டிச் சமைத்துப் படையலிட்டுக் கூட்டாக உட்கார்ந்து இருநூறு முந்நூறு பேர் சாப்பிடுகின்றனர். மொரீசியஸ் நாட்டின் தீமிதித் திருவிழாவிற்குப் பலர் ரீயூனியனிலிருந்து போகிறார்கள். காளியம்மன் கோயிலில் அம்மன் ஊர்வலமும், சக்தி கரக ஆட்டங்களும் சிறப்பாக நடைபெறும். ஊர்வலத்தின்போது பக்தர்கள் வீடுதோறும் தீபாராதனை செய்கின்றனர்.

## மார்தினிக், குவாடிலோப்பி தமிழ்ப்பண்பாடு மறையாமல் இருக்க உதவும் மாரியம்மன்

மாரிதினிக் நாட்டில் மதுரைவீரன், சீதாலட்சுமி, காளியம்மன் விழாக்கள் இருந்தன. விழாவன்று அனைவரும். வெள்ளை ஆடைகள் அணிவார்கள். மாரியம்மன் கோயில் விழா ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும். இவ்விழாவின்போது ஆடு, சேவல் பலியிடுவார்கள். இவர்களில் சிலர் அம்மன்வழிபாடு செய்கின்றனர்.

குவாடிலோப்பில் மாரியம்மன், நாகூர்மீரா கோயில்கள் உண்டு. மதுரைவீரன்விழா, தீமிதிவிழா, மாரியம்மன்விழா உண்டு. பூசாரிகள் பிரெஞ்சு பேசுகின்றனர். மாரியம்மன் விழாவின்போது தெருக்கூத்தும் பிரெஞ்சுப்பாட்டும் உண்டு.

# திரைகடலுக்கு அப்பால் தைப்பூசத்திருவிழாவும் முருகபக்தர்களும்

பொதுவாக அயல்நாட்டிலுள்ள எல்லாத் தமிழர்களும் முருகபக்தர்கள். வேல்முருகனே உலகத் தமிழ்ப் பண்பாட்டின் உட்பொருளாக விளங்குகின்றான் எனத் தயங்காமல் கூறலாம். தமிழ்நாட்டைப்போல முருகபக்தி மிகுதியாக உள்ள அயல்நாடுகள் இலங்கை, மலேசியா, மொரீசியஸ் ஆகும். பல சிங்களவர்களும் சில சீனர்களும், தாய்லாந்தினரும், ஆப்பிரிக்கர்களும், பிஜியர்களும் இன்று முருகபக்தர்களாக மாறிவருகின்றார்கள்.

## இலங்கை: கதிர்காம முருகன்

இலங்கையில் உள்ள புகழ்பெற்ற முருகஸ்தலம் கதிர்காமம் ஆகும். கதிர்காம முருகனை 'கட்டர் காமதேவா' என்று சிங்களவர்கள் அழைக்கின்றனர். இது கொழும்பிலிருந்து சுமார் 200 மைல் தொலைவிலுள்ளது. கோயிலின் வாசற்சுவரில் மயிலுருவமும், யானை உருவமும் ஏராளமாக அமைத்துள்ளார் கள். கோயிலின் உள்ளே மண்டபத்தை அடுத்து ஒரு பெரிய மேடை உள்ளது. அதில் அழகிய திரைச்சீலை தொங்குகிறது. அத்திரையில் முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோரின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. முன்பு அக்கோயிலில் தமிழர்கள் அர்ச்சகர்களாக இருந்து பூசை செய்தனர். இப்பொழுது சிங்களர்கள் பூசை செய்து வருகின்றனர். முதலில் அர்ச்சகர் திரையில் உள்ள தெய்வங்களைத் தொட்டு வழிபாடு செய்து வணங்குகிறார். அவர் தன் வாய், மூக்கு, காது முதலியவற்றை ஒரு துணியால் கட்டிக்கொண்டிருக்கிறார். திரையை வழிபட்டதும் அவர் கருவறைக்குள் செல்கிறார். கருவறைக்குள் மொத்தம் 7

திரைச்சீலைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொங்குகின்றன. நமக்கு முதல் திரைச்சீலைதான் தெரியும். அதனைத்தான் அர்ச்சகர் தொட்டு வணங்குகிறார். நாமும் அதனைத்தான் அருகில் இருந்து வணங்குகிறோம். கருவறைக்குள் அர்ச்சகர் மட்டும்தான் செல்லலாம். உள்ளே ஒரு யந்திரம் எழுதியுள்ள தகடுள்ள பெட்டி இருக்கிறதாம். அது முத்துலிங்கசுவாமி நிறுவிய யந்திரம். அது தங்கத்தில் இலைவடிவமாக இருக்கிறது என்று சொல்லுவார்கள். திருவிழாவின்போது அதை ஒருபெட்டியில் வைத்து யானைமேல் ஊர்வலம் கொண்டு வருவார்கள். அதற்கு அர்ச்சகர்கள் தீபாராதனை செய்து வணங்கிவிட்டு வெளியேவந்து முதல் திரைச்சீலையில் ஓவியமாக உள்ள முருகனுக்குத் தீப ஆராதனை நிகழ்த்துகிறார். நாமும் வணங்குகிறோம். பிறகு பக்தர்களுக்குத் திருநீறு, தீர்த்தம், திருவமுது முதலியன வழங்கப்படுகின்றன.

காலையில் 5 மணிக்கும் பிறகு 9 1/2 மணிக்கும், மாலையில் 6 1/2 மணிக்கும் முருகன் கோயிலில் தீப ஆராதனைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலுக்கு இந்துக்கள், இசுலாமியர், கிறித்தவர்கள், பௌத்தர்கள், ஆங்கிலேயர்கள், சிங்களவர்கள், வெளிநாட்டவர்கள் ஆகிய எல்லோரும் சாதி, மத, இன, மொழி, நாடு வேறுபாடின்றி வந்து காணிக்கை செலுத்தி வணங்குகின்றனர். முடிக்காணிக்கையும், காவடிக்காணிக்கையும் செலுத்துவோர்கள் ஏராளம். இங்கு ஆடித்திருவோண பௌர்ணமி அன்று ஆடிவேல் உற்சவம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. சிங்களவர்கள் ஆங்கிலேயர்கள் எல்லாம்கூடக் காவடி எடுத்து பூக்குழி இறங்குவது கண்கொள்ளாக் காட்சியாகும். பூக்குழி இறங்குவதுடன் 10 நாள் கொண்டாடப்படும் ஆடிவேல் திருவிழா முடிவடையும்.

## யாழ்ப்பாணம் கந்தசுவாமி கோயில்

இலங்கைத்தீவில் புகழ்பெற்ற கோயில்களில் இதுவும் ஒன்றாகும். இக்கோயில் கி.பி.15ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண மன்னர் செண்பகப்பெருமாள் என்பவரால் கட்டப்பெற்று கதிர்காம முருகனுக்காக அர்ப்பணிக்கப் பெற்றதாகும். இங்குள்ள மூல விக்கிரகம் வேலாகும். கர்ப்பக் கிரகத்தில் வேல்வடிவில்தான் மூலவர் வள்ளி தேவசேனா சமேதரராகக் காட்சியளிக்கிறார். ஆனால் மகாமண்டபத்தில் சண்முகர் வள்ளிதேவ சேனாபதியாக மயில்மீதமர்ந்து காட்சி தருகிறார். திருந்த மண்டபத்தில் அழகிய

முத்துக் குமாரசுவாமி குறவள்ளி காந்தனாய்த் தேவகுஞ்சரி மணாளனாய் வீற்றிருந்தருள் புரிகிறார். நல்லூர்க் கோயிலில் ஆறுகாலப் பூசைகள் காலந்தவறாது நடைபெறுகின்றன.

பிரம்மோற்சவம் ஆடிமாதத்தில் இருபத்தைந்து நாட்கள் நடைபெறுகிறது. 22ஆம் நாள் திருவிழா தண்டாயுதபாணி உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது. 24ஆம் நாள் தேர்த்திருவிழா. தீர்த்தத் திருவிழா 25ஆம் நாள். பூங்காவனத்திருவிழா 26ஆம் நாள்திருவிழா. இது கிட்டத்தட்ட வள்ளித் திருமணத்தை நினைவூட்டுவதே ஆகும். விழாவின் போது தண்ணீர்ப் பந்தல்களில் தொடர் சொற்பொழிவுகள் நடப்பது தமிழகத்தில் இல்லாத புதுமை. பஜனை குழுக்கள் வீதிவலமாக வந்து கந்தன் புகழ்பாடுகின்றார்கள்.

## மலேசியாவில் தைப்பூசத்திருவிழா

முருக வழிபாடு மலேசியாவில் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. கோலாலம்பூரில் செந்நூல் என்னும் பகுதியில் தண்டாயுதபாணி கோயில் இருக்கின்றது. இக்கோயில் நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னர் நகரத்துச் செட்டியார்கள் கட்டியதாகும். வெள்ளிக்கிழமைதோறும் இக்கோயிலில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. இக்கோயிலுக்கு வெள்ளித்தேர், வெள்ளியிலான மயில்வாகனம் ஆகியன கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

கோலாலம்பூரின் எல்லையில் 9 கி.மீட்டர் தொலைவில் 'பத்துமலை' (பெரியமலை) எனும் இடம் உள்ளது. மலை அடிவாரத்தில் இருந்து மலை உச்சியில் உள்ள மாபெரும் குகைக்குச் செல்ல இருவரிசைப் படிக்கட்டுகள் உள்ளன. 272 படிகள் ஏறி மேலே சென்றால் தலைமைக்குகை இருக்கின்றது. மின்னூர்தியும் (Winch) இருக்கின்றது. தலைமைக் குகையின் நுழைவாயிலில் மயிலின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது. மலைப் பகுதியில் எங்கும் மயில்கள் ஆடி அசைவதைக் காணலாம். இங்குள்ள கோயில்களுள் பெரும்புகழ் வாய்ந்தது முருகனின் திருக்கோயிலும் திருவள்ளுவரின் கோட்டமுமாகும். இக்கோயிலில் தைப் பூசத்திருவிழா மாபெரும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டு வருகின்றனர். பத்துமலை முருகனுக்கு ஆயிரக்கணக்கான காவடிகள் தைப்பூச நாளன்று செலுத்தப்படுகின்றன. தேர் இழுக்கப்படுகிறது. ஏராளமான

காணிக்கைகள் குவிகின்றன. இவ்விழாவை மலேசியாவின் தேசியத் திருவிழாவாகப் போற்றுகின்றனர்.

முருகன் லிங்க வடிவில் வழிபடப்படும் கோயில் சன்னாசி மலைக்கோயில். மலாக்காவில் இருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. தைப்பூசம், மாசிமகம் ஆகியன சிறப்பாக இக்கோயிலில் கொண்டாடப்படுகின்றன. பக்தர்கள் நூற்றுக்கணக்கான காவடிகளைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

## சிங்கப்பூர் முருகன் கோயில்கள்

முருக வழிபாடு சிங்கப்பூர் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கின்றது. குளம்சாலையிலுள்ள தண்டாயுதபாணி கோயில் ஒரு முக்கிய கோயிலாகும். பணக்காரச் செட்டியார்கள் இக்கோயிலை 1859ஆம் ஆண்டு கட்டினார்கள். இக்கோயிலின் இராசகோபுரம் மீண்டும் 1903 நவம்பர் திங்களில் கட்டப்பட்டது.

காவடி தூக்குதல், அலகு குத்துதல், கரக ஆட்டம் முதலிய சடங்குகள் சிங்கப்பூரிலும் பக்தியுடன் பின்பற்றப் படுகின்றன. எடுத்துக்காட்டாகத் தைப்பூசத் திருவிழாவின்போது சனவரி, பிப்ரவரி திங்களில் காவடிகளைத் தூக்கிக்கொண்டு பக்தர்கள் செரன்கூனில் உள்ள பெருமாள் கோயிலிலிருந்து குளம் சாலையிலுள்ள தண்டாயுதபாணி கோயில்வரை செல்வார்கள். இக்காவடி மயில் தோகைகளால் அலங்கரிக்கப்பட்ட மர அடிப்பகுதியுள்ள மரவில் வளைவு அமைப்பாகும். பழங்கள், பூக்கள், பால்கிண்ணங்கள் முதலியனவும் காவடியுடன் எடுத்துச் செல்லப்படும். சில பக்தர்கள் உலோகத்தால் செய்யப்பட்ட காவடிகளைத் தூக்கிக்கொண்டும் போவார்கள். கன்னங்களிலும், உடம்புகளிலும், நாக்குகளிலும் அலகுகளைக் குத்திக் கொண்டு பலர் செல்வார்கள். பக்தியுடன், ஆசாரத்துடன் உண்ணாநோன்பு இருந்து பூசை செய்து, வேண்டிய பிறகுதான் இம்மாதிரியான சடங்குகளை மக்கள் பின்பற்றுகின்றனர்.

## இந்தோனேசியாவும் தைப்பூசமும்

வடசுமத்திராத் தமிழர்கள் கொண்டாடிய திருவிழாக்களில் குறிப்பிடத்தக்கது மேடான் நகரத்துமாரியம்மன் கோயில்

தைப்பூசமாகும். 1973 வரை தைப்பூசத்திருவிழா தமிழர்களின் தனிவிழாவாக இக்கோயிலில் கொண்டாடப்பட்டது. மாரியம்மன் கோயிலுக்குச் சிறிது தூரத்தில் இருக்கும் பபுரா நதிக்கரையில் அமைந்துள்ள காளி கோயிலிலிருந்து காவடிகள் மாரியம்மன் கோயிலுக்குக் கொண்டு வரப்படும். பபுரா நதியில் நீராடி, காவடிகளைத் தாங்கி வரும் காட்சியைக் காண மேடான் நகரமே புடைசூழத் திரண்டுவரும். அன்றிரவு இரதத்தில் முருகப்பெருமான் மேடான் நகரத்துத் தெருக்களை வலம் வருவார். இன்று அத்தகைய பக்திவழிபாடும் மக்களின் ஆரவாரமும் மேடானில் இல்லை. 1973இல் தைப் பூசத்திருவிழா இக்கோயிலில் நிறுத்தப்பட்டது. இதனால் மேடான் மாரியம்மன் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்தது. இதரக் கோயில்களின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியது.

இன்றைய தண்டாயுதபாணி கோயில் 1918இல் துவங்கப் பட்டது. நாள்தோறும் இருதடவைகள் பூசைகள் நடக்கின்றன. பூசைகளைச் செய்ய பண்டாரம் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். மேடானில் இக்கோயில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் கட்டப்பட்டது. லெபுக் பக்கம் சுப்பிரமணியர்கோயிலில் போருக்கு முன் தைப்பூசம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## பர்மியர்களும் அர்ச்சனை செய்கின்றார்கள்

பர்மாவில் 40 இந்துக்கோயில்களுக்கு மேல் இருக்கின்றன. தாட்டனில் உள்ள தண்டாயுதபாணிகோயில் 1888 இல் கட்டப்பட்டது. 1933வரை பர்மா செட்டியார்கள் பேராதரவுடன் தண்டாயுதபாணி கோயில்கள் கட்டப்பட்டன. இரங்கூனில் அகன்ற பெரிய மோகுல் தெருவில் உட்கட்டட அமைப்பில் தண்டாயுத பாணி ஆலயத்தை அமைத்துள்ளனர். பசுமந்தானில் இதுபோல் தண்டாயுதபாணி கோயிலுக்கு அரசகோபுரம் 1900இல் கட்டப் பட்டது. 1942இல் இது குண்டுவீச்சில் சேதமடைந்தது. 1967இல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. மோல்மீனில் முதலாம் செட்டியார் குடியேற்றம் தோன்றியபோது வேல்முருகன் ஆலயம் அமைத்தனர். இது மலைக்கோயிலாகவும் சிவத்தலமாகவும் பின்னர் மறுஉருவாக்கப்பட்டுத் தைப்பூசக்காவடி, வேலாட்டம் முதலி யன பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதுவே பர்மாவில் பெரிய இந்து ஆலயம். 32 ஊர்களில் தண்டாயுத பாணி கோயில்கள் நாட்டுக்கோட்டை செட்டியார்களால்

நிறுவகிக்கப்படுகின்றன. மினிக்கோன் சுப்பிரமணியர் ஆலயம் தமிழ்ப்பணி ஆற்றுகின்றது. விழாவின் போது தேரில் முருகப் பெருமான் ஊர்வலம் வரும்பொழுது பர்மிய மக்கள் தட்டுகளில் தீபாராதனைப் பொருள்களை ஏந்திய வண்ணம் தங்கள் வீட்டு வாசல்களில் காத்து நிற்கின்றனர். தங்கள் வீட்டிற்கு நேராகத் தேர்வந்தவுடன் அர்ச்சனை, ஆராதனை செய்து திருநீற்றைப் பெற்று நெற்றியில் வழிபாட்டுணர்வோடும் பக்தியுணர்வோடும் அணிந்து கொள்கின்றனர். இந்த அளவிற்குத் தமிழனின் சமயவழிபாட்டில் பர்மியர்கள் பேரீடுபாடு கொண்டுள்ளனர்.

## வியட்நாமில் தண்டாயுதபாணி

1880ஆம் ஆண்டளவிலேயே சைகானில்தண்டாயுதபாணி (சுப்பிரமணியசுவாமி) கோயில் கட்டப்பட்டது. 1971இல் இக் கோயிலுக்கு நகைகள் உட்பட 4 கோடி இந்திய ரூபாய்கள் சொத்து இருந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## பிஜியில் பத்துநாள் திருவிழா

பிஜித்தீவிலும் தைப்பூசத் திருவிழா தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கிறிஸ்துமஸ் சமயத்தின்போதோ, புத்தாண்டுத் தொடக்கத்தின்போதோ இத்திருவிழா பத்துநாட்கள் கொண்டாடப்படும். இத்திருவிழாவின்போது முதலில் கொடியேற்றம் செய்யப்படும். பிறகு ஒவ்வொரு நாளும் விசேஷ பூசைகளும், காணிக்கைகளும், படையல்களும் செய்யப்படும். நூற்றுக்கணக்கில் மக்கள் வந்து இப்பூசையைச் செய்கின்றனர். ஒரு சிறப்பு வழிபாட்டுமுறை என்னவென்றால் விரும்பியவர்கள் முருகனிடம் பக்தி செலுத்தி ஒரு குறிப்பிட்ட காலம் வரை உண்ணாநோன்பு இருப்பார்கள். மயில்தோகைகளால் அலங்கரிக்கப்பட்ட காவடி, பூக்கள், பால் குடங்கள், சர்க்கரை முதலியவற்றை வாயைத் திறக்காமல் எடுத்துச் செல்வார்கள். சூரியன் மறைந்த பிறகு முருகக்கடவுளை அழகாக அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் வைத்து, நகரத்தில் உள்ள முக்கிய தெருக்கள் வழியாக இழுத்துச் செல்வார்கள். வீடுகளுக்கு அருகில் முருகன் ரதம் வரும்போது பக்தர்கள் முருகனுக்கு அர்ச்சனை செய்வார்கள். பத்து நாட்களிலும் பக்தர்களுக்கும், மற்றவர்களுக்கும் பிரசாதம் அளிக்கப்படும். பிஜித்தீவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இத்திருவிழாவின்போது நாடிகோயிலுக்குப் பக்தர்கள் வருவார்கள். ஏனென்றால் முருகன்

வழிபாடு செய்பவர்களுக்கு இக்கோயில்தான் தேசிய கோயிலாக இருக்கின்றது. நாடி மாவட்டத்தில் உள்ளவர்களே விருந்தளிப்பவர்களாக இருப்பார்கள்.

## தென்ஆப்பிரிக்காவிலும் காவடி தூக்குகின்றனர்

தென்ஆப்பிரிக்காவில் பொதுவாக முருகனுக்கும் சிவனுக்கும் கோயில்கள் கட்டப்பட்டன. முதன்முதலில் 1875இல் கட்டப்பட்ட மூன்று கோயில்களில் உம்பிலோ தென்கரையிலுள்ள ஸ்ரீசுப்பிரமணியர் ஆலயம் ஒன்றாகும். மேலும் போயனிக்ஸில் உள்ள முருகன் கோயில், கிளேர் வுட்டில் உள்ள ஸ்ரீசுப்பிரமணியர் கோயில், போர்ட்எலிஸபெத்தில் உள்ள ஸ்ரீசிவசுப்பிரமணியர் ஆலயம், வெருலாமிலுள்ள சிவசுப்பிரமணியர் கோயில் புகழ் வாய்ந்த கோயில்களாகும். இக்கோயில்களில் தைப்பூசம் அல்லது காவடித் திருவிழா கொண்டாடப்படுகின்றது. காவடித் திருவிழாவின்போது வேண்டுதலை நிறைவேற்றுவதற்காகச் சிலர் காவடி தூக்கும் வழக்கமும் உண்டு.

## மொரீசியஸில் தீவிர முருகபக்தர்கள்

மொரீசியசில் தைப்பூசக்காவடி மிகப்பெரிய திருவிழா ஆகும். இதுபோது விடுமுறை நாள். கொடியேற்றத் தொடங்கி விரதம் எடுத்து காவடி எடுப்பதுண்டு. காவடியோடு மாவிளக்கு, பால்குடம் எடுப்போரும் உண்டு. காவடி எடுக்கும்போது பெண்கள் மஞ்சள் ஆடையும், ஆண்கள் காவி நிற ஆடையும் அணிவார்கள். பெண்டிர், ஆடவர் வாயில் நாக்கில் அலகுகளைக் குத்தியும், ஆடவர் உடம்பெல்லாம் அலகுகளைக் குத்தியும் சிலர்காலில் ஆணிநிறைந்த காலணிகளை அணிந்தும் ஊர்வலமாக நடந்து போவார்கள். வழிநெடுகிலும் முருகக் கடவுள் பாடல்கள், காவடிப் பாடல்கள் வேல், வேல் அரோகரா கேட்கலாம். காவடிகள் மிக அழகாக மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இவர்கள் தீவிர முருகபக்தர்கள், ஆனாலும் கந்தசஷ்டி, பங்குனி உத்திரம், கொண்டாடுவதில்லை.. காவடியில் பூசக்காவடி, சித்திரைக்காவடி, வைகாசிக்காவடி சிறப்பாகத் தமிழ்ப் பண்பாட்டோடு கொண்டாடப்படுகின்றன. பொதுவாக முருகனுக்கு பூக்காவடி, இளநீர்க்காவடி, பால்காவடிகள் எடுக்கப்படுகின்றன. அலகுபோடுதலை நாக்குகுத்தல் என்று சொல்கின்றனர். பிஞ்சுக்குழந்தைகள், மங்கையர், ஆடவர், வயது முதிர்ந்தவர்கள் யாவரும் அலகு குத்திக்கொள்ள

அஞ்சுவதில்லை. முருக பக்தியில் மொரீசியஸ் நாட்டுத்தமிழர் தன்னிகரற்று விளங்குகின்றனர். தைப்பூசக் காவடித் திருவிழாவுக்கு முந்திய நாள் இரவு பத்து மணி முதல் மறுநாள்காலை ஆறுமணிவரை முருகன் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

ரீயூனியனிலும் முருகன் கோயில்கள் பல உண்டு. காவடி எடுப்பதும், செடல் குத்துவதும் இங்குப்பழக்கம்.

# கடல்கடந்த தமிழர்களின் பிறவிழாக்களும் பண்பாடுகளும்

சித்திரை முதல்நாள், விநாயக சதுர்த்தி, ஆயுதபூஜை, தீபாவளி, கார்த்திகை தீபம், திருவாதிரை, பொங்கல், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் முதலிய பண்டிகைகளை இலங்கையில் வசிக்கும் எல்லாத் தமிழர்களும் கொண்டாடுகின்றனர். பொங்கல், மகாசிவராத்திரி தமிழ்ப்புத்தாண்டு, தீபாவளி முதலியவை பொதுவிடுமுறை நாட்களாகும். கண்ணகி வழிபாடு சார்ந்த விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. குறிப்பாக மட்டக்களப்பு தமிழ் இந்துக்களிடம் கண்ணகி வழிபாடு சிறப்பிடம் பெற்றிருக்கிறது. இவர்களிடையே வழங்கும் கண்ணகி வழக்குரைகாதை, சிலப்பதிகாரத்திலிருந்தும் தமிழ்நாட்டில் வழங்கும் கோவலன்கதை, யாழ்ப்பாணத்துக் கோவலன் கதை ஆகியவற்றில் இருந்தும் பல்வகையில் வேறுபட்டது.

தைப்பொங்கல் திருவிழா தை மாதத்தில் கொண்டாடும் காலத்திலிருந்து, யாழ்ப்பாணத்தின் சமய, சமூகத் திருவிழாக்கள் தொடங்குகின்றன. யாழ்ப்பாணத்தில் மாட்டுப்பொங்கல் எனக் கூறாமல் பட்டிப்பொங்கல் (Paddi Pongal) என்று கூறுகின்றனர். மாடுகள் கட்டிவைக்குமிடத்தைப் பட்டி என அழைக்கும் மரபால் இப்பெயர் தோன்றியிருக்கக்கூடும். காணும் பொங்கலைத் தைப்பொங்கல் எனக் கூறுகின்றனர். இத்திருவிழா பொதுவாக அறுவடைத் தொடர்பான விழாவாகும். தேங்காய்ப்பாலும் வெல்லமும் கலந்த அரிசிப்பொங்கலை விடிகாலையில் உதயசூரியன் படம் போடப்பட்ட புதிய பானையில் சமைப்பார்கள். சமைத்தவுடன் பொங்கலோ பொங்கல் என ஆனந்தத்துடன் கத்திக்கொண்டு பானையில் தயாரித்த பொங்கலைத் தரையின்மேல் வைத்திருக்கும்

பெரிய வாழை இலையில் கொட்டுவார்கள். பிறகு தேங்காயை இரு பாதியாக உடைத்து சூரியனுக்குப் பூசை செய்வார்கள். பூசை முடிந்தவுடன் குடும்பத்தினர் எல்லோரும் பொங்கல் சாப்பிடுவார்கள்.

இந்துபுது வருடமும் விமரிசையாக இலங்கையில் கொண்டாடப்படுகின்றது. அன்று, வருவது பற்றிய முன்குறிப்புரை (prediction) அளிக்கப்படுகின்றது. விருப்பம் உள்ள எல்லோரும் அருகிலுள்ள கோயிலுக்குச் செல்லுகிறார்கள். கோயிலிலிருந்து திரும்பியவுடன் அன்றைய தினத்தின் முதல் உணவு அருந்துகின்றார்கள். முதலில் பால்-சோறு சாப்பிடுகிறார்கள். உணவு அருந்தும்போது கடைசியில் வீட்டில் செய்த கொழுக்கட்டையும், பழமும் சாப்பிடுகிறார்கள். ஆடிமாதத்தில் ஆடிப்பிறப்பின்போது சோமசுந்தரப்புலவர் எழுதிய பாடல்களைப் பாடிக் கொண்டாடுகிறார் கள். ஆடி அமாவாசையின்போது முன்னோர்களுக்கான சடங்கு களைச் செய்து வழிபடுகின்றார்கள். செப்டம்பர்-அக்டோபரில் சரஸ்தி பூஜையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

பொதுவாகத் தைப்பூசம், சித்திரைப்பருவம், விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைத்தீபம், பங்குனி உத்திரம், பொங்கல் மாசிமகம், ஸ்ரீராமநவமி, தமிழ்ப்புத்தாண்டு முதலிய விழாக்களை மலேசியா, சிங்கப்பூர் பர்மா, பிரிட்டன், அமெரிக்கக் குடியரசு, தென்ஆப்பிரிக்கா தமிழர்கள் கொண்டாடுகின்றனர். மொரிசியஸ் தமிழர்கள் கந்தசஷ்டி, பங்குனி உத்திரம் கொண்டாடுவதில்லை.

## திருமணமும், சாதி அமைப்பும்: பழைய மரபு மறைந்துவருகின்றது

இலங்கைத் தமிழரின், மலேசிய, சிங்கப்பூர்த் தமிழரின் திருமணங்களிலும், இல்லற வாழ்க்கையிலும் வாழ்க்கையின் புனிதத்தன்மைகளையும் ஒழுக்கத்தினையும் விடாது கடைப் பிடித்து வருவதைக் காணமுடிகிறது. ஒருசில திருமணங்களைத் தவிர, பொதுவாகச் சாதி அடிப்படையில் சமுதாயம் அமைந்துள்ளதால், புறச்சாதி மணத்தடையை இறுக்கமாகப் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். அயல்நாடுகளிலேயே மிக அதிகமாக இப்பழக்கம் இலங்கையில் இருக்கின்றது. கணவனை

இழந்த பெண்கள் மறுமணம் செய்யும் வழக்கம் தமிழ்ப் பெண்களிடையே கட்டுப்படுத்தப்படினும் அண்மைக்காலங்களில் விதவையின் வயதினைப் பொறுத்து இதன் நிலைமாறுபடுவதைக் காணலாம். ஆனால் பிஜித்தீவில் சாதிப்பெயரை ஆண்களும், பெண்களும் தங்கள் பெயரோடு இணைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்தாலும், பொதுவாக இங்குச் சாதி உணர்வு அவ்வளவு கிடையாது. திருமண உறவுத்தொடர்பு கொள்ளும்போதிலும் சாதி உணர்வு மேலோங்குவதில்லை. வட இந்தியர்களைக் கூடத் திருமணம் புரிந்துகொள்ளுவதில் ஒருவிதத் தடையுமில்லை.

இலங்கையில் பிராமணர்களுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட வில்லை. சாதிப்படி அமைப்பில் உயர்படியிலுள்ளவர்கள் வெள்ளாளர்கள். வெள்ளாளர்கள் குருக்களாகவும் பணி புரிகின்றார்கள். தவிரப் பிராமணக் குருக்களும் பணிபுரிகின்றார்கள். வன்னியர், மூக்குவர், சந்தர், அடிமை, குடிமை பிரிவினர்கள் முக்கிய சாதிப்பிரிவினர்கள் ஆவார்கள். அடிமை சாதியைச் சேர்ந்த நளவர், பள்ளர்கள் தீண்டப்படாதவர்களாகக் கருதப் படுகிறார்கள். பொதுவாகக் கலப்புசாதி திருமணத்திற்கு ஆதரவு குறைவு. திருமணத்தின்போது சடங்கு செய்வதற்குச் சாஸ்திரிகள் உறுதியாகத்தேவை எனக் கருதுவதில்லை. பிராமணச் சடங்குகள் இல்லாமல் திருமணம் செய்யக்கூடாது எனும் மரபும் இல்லை. ஆகையால் சில திருமணங்களில் ஓமச்சடங்குகள் செய்வதில்லை. பிள்ளையார் பூசை மட்டும் செய்கின்றார்கள். தாலி கட்டுவது மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. கூறை கொடுக்கின்றார்கள். சில வெள்ளாளர் குடும்பங்களில் சாஸ்திரிகள் அழைக்கப் படுவதில்லை. அவர்களே திருமணங்களை நடத்துகின்றார்கள். திருமணம் பெண்வீட்டில் நடக்கின்றது. திருமணம் நடக்கும் அன்றே பெண்ணை மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துச் சென்று திரும்பும் சடங்கும் இருக்கின்றது. தமிழ்நாட்டிலுள்ளதைப் போலச் சகோதரர்கள் குழந்தைகளுக்குடையே, சகோதரிகள் குழந்தைகளுக்கிடையே திருமணம் நடக்கக்கூடாது.

தொடக்கத்தில் கயானாவில் சாதிவேறுபாடு மேலோங்கி இருந்தபோது பல கீழ்ச்சாதிகள் எனக் கூறப்பட்ட தமிழர்கள் கிறிஸ்து சமயத்தைத் தழுவினர். அவ்வாறு மதம் மாறியவர்களில் பலர் காலப்போக்கில்தம் பழைய சமயத்தின் பாரம்பரியத்தையும் மேன்மையையும் அறிந்து மறுபடியும் இந்து சமயத்திற்கே திரும்பியதும் உண்டு. ஆனால் தற்சமயம் இந்தியாவில் உள்ளது

போன்ற சாதிப்பிரிவு தெளிவாக இந்நாட்டிலும், பிற கரீபியன் பகுதிகளிலும் இருப்பதாகத் தெரியவில்லை. உயர்ந்த சாதியினையும் தாழ்ந்த சாதியினரையும் எவரென்று தனித்தனியே பாகுபடுத்திக்காட்ட வரையறை இங்கில்லை. ஆல்பியன் காளிகோயில் பாஸ்கர்நாயுடு கருத்துப்படி ராம்சாமி, வெங்கட்சலம், நாராயண்சாமி, முன்சாமி, கோவிந்தசாமி போன்றோர் உயர் சாதியினர். மற்றையோர் தாழ்ந்த சாதியினர். இச்சாதிப்பாகுபாடு பெர்பீஸ் பகுதியில் அதிகம் இருக்கின்றது என ஈ.ச.விசுவநாதன் கூறுகின்றார். ஜமெய்க்காவில் தொடக்கத்தில் சாதிமதப் பிரிவினர்களிடையே திருமண உறவு தோன்றிய போதிலும் காலப்போக்கில் இம்மனப்பான்மை மறையத் தொடங்கியது. பலசமய, பலசாதித் திருமண உறவு வலுப்படுத்தப்பட்டது. கிரெனடாவில் கலப்புத் திருமண முறை இந்தியர்கள் அந்நாட்டுப் பண்பாட்டுடன் ஒருசேரக் கலந்து இருப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. பள்ளிக்கூடம், பணிபுரியும் இடம் போன்ற பல்வேறு சூழ்நிலையில் இந்தியர்களும் ஆப்பிரிக்கர்களும் சந்திப்பதால் இவர்களிடையே மிகுதியான திருமண உறவு தோன்றுகிறது. பெற்றோர்களும் சிறிது மன வருத்தத்துடன் இவர்களின் கலப்புத்திருமணத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். ஒவ்வோர் இந்தியர் வீட்டிலும் இந்தியர் அல்லாத ஒருவர் அல்லது பலர்குடும்ப உறுப்பினர்களாக இருப்பதைக் காணலாம். ஆனால் பொதுவாக ஜமெய்க்கா போன்ற நாடுகளில் தந்தை தாய் சொற்படி வாழவேண்டும். திருமணம் செய்து கொள்ளவேண்டும் எனும் எண்ணம் 75 விழுக்காடு பெண்களிடையே மேலோங்கியிருக்கின்றது.

சீசெல்சில் ஆசாரி, செட்டி, பிள்ளை, நாயுடு, நாயக்கன், படையாட்சி என்ற பெயர் இறுதிகள் இல்லாத தமிழர் அல்லது தமிழர் வழி வந்தோர் எண்ணிக்கை மிகக்குறைவு. அவர்களில் பிள்ளை, செட்டி இரண்டும் மிகவும் புழக்கத்தில் உள்ளன. தமிழரை மூதாதையராகப் பெற்ற சீசெல்சு மக்கள் சாதிப் பெயரையும் பெற்றுள்ளார்கள். ஆனால் தமிழராகக் கருதப்படாது கறுப்பராகவோ, வெள்ளையராகவோ கருதப்படுவர். பாதிக்கு மேற்பட்டோர் தமிழரை மூதாதையராகப் பெற்றிருப்பது கண்கூடு. தலைமுறைகளின் பெருமைபேசும் சில வெள்ளைக்காரக் குடும்பங்கள் கூடத் தமது மூதாதைத் தமிழரின் சாதிப்பெயர் பெருமையைப் பேசிச் சாதிப்பராக்கிரமங்களைக் கூறி மெய் சிலிர்ப்பர்.

இத்தமிழர் வழிவந்தோர் ஆப்பிரிக்கப் பெண்களையும் கந்தர்வ மணம் புரிந்தனர். கலப்புத்திருமண வாழ்க்கை நடத்தினர். குழந்தை பிறந்தால் தாயின் தந்தை பெயர் வைக்கப்பட்டது. பெரும்பாலும் தாய் தமிழ்நாட்டைச் சேர்ந்தவளாக இருக்க மாட்டாள். குழந்தை பிறந்தால் சைவ. வைணவ சமயிகள்கூட, கத்தோலிக்கக் குருமாரிடம் சென்று ஞானஸ்நானம் செய்தனர். கிறித்துவ மதப்பெயரையும் வைத்துக்கொண்டனர். திருமணங்கள் சைவ வைணவ சமயிகளுக்கிடையேகூட கத்தோலிக்கக் கோயில் குருமார் ஆசியுடன் அம்மத முறைப்படியே நடைபெற்றன. சிலர் தமிழர் முறைப்படித் திருமணம் செய்துகொண்டு கட்டுப்பாடான குடும்ப வாழ்க்கை நடத்துகின்றனர். இறந்தவர்கள் தகனம் செய்யப் படாது கத்தோலிக்க மதக்கிரியைகளுடன் புதைக்கப்பட்டனர். ஏனென்றால் சுடுகாடு சீசெல்சு தீவுகளில் இல்லை. பொதுவாக நடைமுறையைக் கவனித்தால் சீசெல்சில் கத்தோலிக்க மதத்தில் சேராமல் அந்த மதம் சார்ந்த வாழ்வைத் தமிழர் வாழ்கின்றனர் எனக்கூறலாம்.

இந்தோனேசியத் தமிழர்கள் இந்தோனேசியச் சுதந்திரத்தின் போது சாதிப்பெயர்களை வைத்துக்கொள்வதில்லை எனத் தீர்மானம் எடுத்தனர். சீர்திருத்தத் திருமண முறையையே இவர்கள் விரும்புகின்றனர். தமிழ்த் திருமண முறையும் உண்டு.

தென்ஆப்பிரிக்கா, மொரீசியஸ், ரீயூனியன், மார்தினிக், குவாடிலோப் முதலிய பகுதிகளிலும் சாதிமுறை மறைந்துவிட்டது. மார்தினிக், குவாடிலோப் தமிழர்களில் சிலர் நீக்ரோ பெண்களைத் திருமணம் செய்து கொள்கின்றனர். ரீயூனியனில் சாதிகள் இல்லை. சமயக்காழ்ப்புணர்ச்சிகள் இல்லை. சாதிமத ஆசாரங்கள் இல்லை. திருமணங்களும் மற்ற சடங்குகளும் தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட குருக்களால் நடத்தப்படுகின்றன. பிறந்த குழந்தைக்கு உரியகாலத்தில் முடியிறக்கித் தெய்வவழிபாட்டை நிறைவேற்றுவது வழக்கம். ஆனால் காதுகுத்தும் வழக்கம் மறைந்து வருகிறது. இறந்தவர்களை எரிக்கும் வழக்கம் இங்கு அறவே இல்லை. எல்லா மதத்தினரும் இறந்தோரைப் புதைத்து விடுகின்றனர்.

மொரீசியசில் திருமணத்தில் நிச்சயம் செய்தல், மஞ்சள் பூசுதல் (நலுங்கு வைத்தல்), பரிசம் போடுதல், தாரை வார்த்தல், கன்னிகாதானம் செய்து கொடுத்தல், மஞ்சள் கயிற்றில் தாலி

கட்டும் தமிழ் மரபு, பாதபூசை செயதல், சீர்வரிசை வைத்தல், நாத்தனார் மிஞ்சி அணிவித்தல், மாலை மாற்றல் என அனைத்துச் சடங்குகளும் தமிழ் மரபை ஒத்துள்ளன. குழந்தை பிறந்தால் 30 நாள்வரை அந்த வீட்டிற்குச் சென்று வந்தால் தலை முழுகுகின்றனர். காது குத்துவைபவம் பெண் குழந்தைகளுக்கு மட்டுமே உண்டு. திரட்டிச்சடங்கும் செய்கின்றனர். இறப்பில் கோடிபோடுதல், எட்டுப்படைத்தல், கருமாதி, சோறு ஆக்கிப் போடுதல், மகன் மொட்டை அடித்தல் முதலியவற்றைக் குறையின்றித் தமிழர்கள் கடைபிடித்து வருகின்றனர்.

## குடும்ப அமைப்பு: அன்பின் நெருக்கம்

பிற அயல்நாடுகளைவிட இலங்கையில், குறிப்பாக இந்தியத் தமிழர்களைப் பொறுத்தவரை கூட்டுக்குடும்ப முறையே பெருமளவுக்குக் கைக்கொள்ளப்பட்டுள்ளது. டிரினிடாட், ஜமெய்க்கா போன்ற நாடுகளில் உள்ள இந்தியர்களிடையேயும் இந்தியர் கூட்டுக்குடும்ப அமைப்பு இருக்கின்றது. கூட்டுக் குடும்பத்தின் தலைவர் தந்தை. அவர் இல்லாத நேரத்தில் மூத்தமகன் தலைவனாக இருந்தான். எல்லாச் சகோதரர்களும் இணைந்து குடும்பத்தை நடத்துகின்றார்கள். குடும்பத்திற்குச் சொத்தைச் சேகரிப்பதில் ஈடுபடுகின்றார்கள். தற்சமயம் திருமணம் ஆனபிறகு 80 விழுக்காடு நடுத்தர உயர்தர வகுப்பினர்கள் 20 விழுக்காடு கீழ்ப்படியிலுள்ள பிரிவினர் கூட்டுக்குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனிக்குடும்பம் அமைக்கின்றனர். ஆனால் கூட்டுக் குடும்பப் பந்தபாசம் தொடர்ந்து அவர்களைப் பிணைக்கின்றது. மனைவிமார்கள் கணவர்களை மதித்து நடக்கின்றார்கள். பொதுவாக எல்லா இந்தியப் பெண்களும் குடும்ப நலனில்தான் முழுக்கவனம் செலுத்துகின்றனர். ஆனால் இந்தியா, டிரினிடாட், பிஜித்தீவில் உள்ள இந்தியர்களைப்போல ஜமெய்க்காவில் உள்ள இந்தியர்களிடையே தற்சமயம் நெருங்கிய பந்தபாச உறவு குறைந்து வருகிறது எனக்கூறலாம்.

கூட்டுக்குடும்பமுறை கிரெனடாவில் இந்தியச் சமூகத்தினரிடையே மறைந்துவிட்டது. பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றியதாலும், சுதந்தரமாக வாழவேண்டும் என்ற மனப்பான்மை தோன்றியதாலும் இக்கூட்டுக்குடும்ப அமைப்பு முறை மறைந்து விட்டது. ஆனால் முதியோர்களுக்கு மரியாதை கொடுக்கும் வழக்கம் மறையவில்லை.

மொரிசியசில் தமிழ்க் குடும்பங்களில் அன்பின் நெருக்கத்தை உணரலாம். அன்பின் அடிப்படையில் எழும் குடும்ப வாழ்வில் மதிப்பும் மரியாதையும் நிலைத்து வாழ்கின்றன. தந்தையின் சகோதரர்களைச் சித்தப்பா என்றும், அண்ணனை அண்ணன் என்றும், தாயின் சகோதரர்களை மாமே (மாமா) என்றும், அக்காவின் கணவனை அத்தான் என்றும், மாமியாரை அத்தை என்றும், பாட்டியை அப்பாயி, அம்மாயி என்றும் அழைக்கின்றனர். இம்முறைப்பெயர்கள் தமிழர்க்கே உரியன.

## உணவு, ஆடை, அணிகலன்கள் - பன்னாட்டுப் பண்பாடுகளின் தாக்கம்

இலங்கை, சிங்கப்பூர், மலேசியத் தமிழர்கள் பொதுவாக தமிழர்களின் மரபுமுறை ஆடை அணிகலன்களை அணிகின்றார்கள் எனக் கூறினால் தவறில்லை இப்பரம்பரைப் பழக்கம் பிற நாடுகளில் ஓரளவு மாறியிருக்கின்றது.

வடசுமத்திராத் தமிழர்கள் தங்கள் உணவு, உடை முதலிய பழக்க வழக்கங்களில் பெரும்பாலும் இந்தோனேசியர்களைப் பின்பற்றுகின்றனர். சேலை கட்டிய தமிழ்ப் பெண்களை இவர்களிடையே காண்பது அரிது. விழாக்களின் போதும், திருமணங்களின்போதும் இவர்களில் 50 விழுக்காட்டினர் வேட்டி, புடவை கட்டிக்கொள்கின்றனர். பொதுவாகத் தமிழ்ப் பெண்மணிகள் அணியும் ஆடை கவுன் ஆகும்.

யாழ்ப்பாண ஆண்கள் வேட்டியை மலபார் ஆண்கள் கட்டும் முறையைப் பின்பற்றிக் கட்டுகின்றார்கள். தமிழ்நாட்டு வேட்டிகட்டும் முறையைப் பின்பற்றுவதில்லை. பொதுவாகப் பெண்கள் சேலைகட்டிக் கொள்கிறார்கள். கீழ்ச்சாதியினர் சேலைத் தலைப்பைத் தோள்மேல் தூக்கிப் போட்டுக் கொள்ளாமல் அவர்களுடைய உடுப்பின் முன்னுடல் மேற்பகுதியின் மேல் இழுத்துப் போட்டுக் கட்டிக் கொள்கின்றார்கள். உணவு தயாரிக்கும் போது அரிசியில் தண்ணீரை அதிகமாகக் கொட்டி வேக வைக்கிறார்கள். அரிசி நன்றாக வெந்தபிறகுகூட கொஞ்சம் தண்ணீர் சமையல் பானையில் மிச்சம் இருக்கின்றது. இந்தத் தண்ணீரை வடித்து எடுத்துக் குடிக்கின்றனர். பொதுவாகத் தொழிலாளர்கள் அரிசிக் கஞ்சியை மாலையில் விரும்பிச் சாப்பிடுகின்றார்கள். காலையில் பழைய சோறைச்

சாப்பிடுகின்றார்கள். இலங்கைத் தமிழர் உணவில் தேங்காயை அதிகமாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். பொதுவாகத் துருவி எடுத்த தேங்காய்த்தூளை அம்மியில் அல்லது மிக்சியில் அரைத்து எடுத்தவுடன்தான் எல்லாக் கறிகளுடன், மீன், மாமிசம், கறிகாய் முதலிய கறிகளுடன் கலக்கின்றார்கள். அரைத்த தேங்காய் விழுதுடன் தயிரைச் சேர்த்துப் பச்சடியும், அடிக்கடி செய்யும் பழக்கம் உண்டு. தேங்காய் எண்ணெயையே மிகுதியாகப் பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களைப்போலக் கடலை எண்ணெயை மிகுதியாகப் பயன்படுத்துவதில்லை.

பிஜித்தமிழர்களிடம் உடை, உணவு தொடர்பாகச் சில மாற்றங்கள் தோன்றியிருக்கின்றன. பள்ளிகளில் பணிபுரியும் தமிழ் ஆசிரியைகள் பொதுவாகச் சேலை கட்டிக்கொள்கின்றனர். குழந்தைகள் கவுன் அணிந்துகொள்கின்றனர். தோட்டங்களில் பணிபுரியும் தமிழ்ப்பெண்கள் கழுத்துவரை மூடியிருக்கும் கவுன் அணிந்து கொள்கின்றனர். தலைமயிர் நிறைய உள்ள தமிழ்ப் பெண்கள் மூக்குத்தி அணிவதில்லை. மிகுதியான நகைகள் அணிவதில்லை. பூக்கடைகள் இல்லாத பிஜித்தீவில் ஒரு சில சமயங்களில் மகளிர் பூக்களை அணிகின்றனர். அதேபோல சில சமயங்களில்தான் நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்வார்கள். ஆண்கள் மேலை நாட்டு ஆடைகளை அணிகின்றார்கள். அரை டிராயர் அல்லது சுலு என்னும் லுங்கியை வீடுகளில் அணிகின்றார்கள். ஒரு சிலர் மட்டும் வேட்டி கட்டுகின்றார்கள். திருநீறு அல்லது சந்தனப்பொட்டு பூசை செய்யும்போது மட்டும் தான் இட்டுக்கொள்வார்கள். ஆனால் வெளியில் வரும்போது எவருமே பொட்டு வைத்துக்கொண்டு வரமாட்டார்கள். காரம் குறைவாகச் சாப்பிடும் இத்தமிழர்கள் எல்லோரும் வடநாட்டுப் பண்பாட்டின் தாக்கத்தால், குறிப்பாக மதிய உணவின்போது சப்பாத்தி சாப்பிடுகிறார்கள். சில உணவகங்களில் மட்டும் இட்லி, மசாலா தோசை கிடைக்கும். பொதுவாகப் பிஜித் தமிழர்கள் பிற்பகலில் தேநீர் அருந்துகிறார்கள்.

ஜமெய்க்காவில் 1920 ஆம் ஆண்டுவரை குர்த்தா, வேஷ்டி, பைஜாமா, புடவை அணிந்துகொண்டிருந்தார்கள். ஆனால் 1920ஆம் ஆண்டிலிருந்து மேலைநாட்டு உடைகளை எல்லா இந்தியர்களும் அணியத் தொடங்கிவிட்டனர். தற்சமயம் பண்டிகைகளின்போது சிலர் இந்திய உடைகளை அணிகின்றார்கள். இன்று 50 விழுக்காடு

இந்தியர்கள் ஐரோப்பியக் குடும்பப்பெயர்களை வைத்திருக்கிறார் கள். பெரும்பான்மையான இந்தியர்கள் ரொட்டி, கரிபாஜி கரோலா, சேமியா, ஊறுகாய், சட்டினி முதலிய உணவு வகைகளைச் சாப்பிடுகிறார்கள். இளம் தலைமுறையினர் பலர் இந்திய உணவு வகைகளில் பலவற்றைச் சாப்பிட்டதே இல்லை.

தொடக்கத்தில் கிரெனடாவிற்கு வந்து குடியேறியபோது இந்தியர்கள் குர்தா, வேஷ்டி புடவை முதலியவற்றை அணிந்து கொண்டார்கள். குடியேறிய இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஒஹரினி எனும் கழுத்துத் துண்டைப் பயன்படுத்தத் தொடங்கினார் கள். மேலைநாட்டுப் பண்பாட்டுத் தாக்கத்திற்குப் பிறகு உடை முறைகளில் மிகுதியான மாற்றம் ஏற்பட்டது. கிரெடாவில் உள்ள பெண்கள் இந்திய நகைகளை, அணிகலன்களை விரும்பி அணிகின்றார்கள். இப்பழக்கத்தைத் தற்சமயம் புதிய கிறித்துவக் கோயில்கள் தாக்குகின்றன. இந்தியர்கள் ரொட்டி, அரிசி, பருப்பு, பூசணிக்காய், காய்கறிகள், உருளைக்கிழங்கு பீன்ஸ், ஊறுகாய், சட்னி போன்ற இந்திய உணவுப்பண்டங்களைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றார்கள்.

தென் ஆப்பிரிக்காவில் உள்ள தமிழர்கள் பொதுவாகத்தமிழ் உடைமுறைகளை மறந்து கொண்டுவருகிறார்கள். பெண்கள் சில சமயங்களில் மட்டுமே புடவை கட்டிக்கொள்கிறார்கள். மேலைநாட்டுப்பாணியில் கவுன்கள் போட்டுக்கொள்கிறார்கள். பொதுவாகத் தமிழ்நாட்டு உணவு, குறிப்பாகச் சைவ உணவை அவ்வளவு விரும்பிச் சாப்பிடுவதில்லை என்று கூறலாம். இட்லி, தோசை, உப்புமா போன்ற சிற்றுண்டிகளை அவர்களில் பலருக்கு அறவே பிடிப்பதில்லை.

சீசெல்சில் நம்நாட்டில் உள்ள காய்கறிகள் யாவும் கிடைக்கின்றன. அன்றாட உணவில் பழங்கள், காய்கறிகள் முதலியவைகளை நிறையப் பயன்படுத்துகின்றனர். இறைச்சிக் காகப் பன்றிகளையும் கோழிகளையும் ஒவ்வொரு குடும்பத்தினரும் நிறைய வளர்க்கின்றனர்.

மது, மாமிசம், மீன்கறி, மான் கறியை விரும்பும் மொரீசியஸ் தமிழர் - செவ்வாய் வெள்ளியில் சாம்பார், ரசம்தான் சாப்பிடுகின்றனர். அதேநாளில் தலைகுளித்துக் கோயிலுக்குச் செல்கின்றனர். நோய்நொடிவரின் மந்திரமாவது

நீறு என்று திருநீற்றையே பூசுகின்றனர். பொதுவாகத் தமிழ்ச் சமையலுக்கு இத்தீவில் தனிச்சிறப்புண்டு. சமையலில் தமிழர் பயன்படுத்தும் பலபொருளுக்கும் தமிழ்ப் பெயர்களே இங்கு வழங்கப்படுகின்றன. இந்நாட்டில் விரதச்சாப்பாடு சிறப்பானது. புலால் உணவை விரும்பும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் விரதச் சாப்பாட்டில் மிகவும் ஈடுபாடுடையவர்கள். சாதத்துடன் சாம்பார், ரசம், பலவகைக் காய்கறிகள், பச்சடி, அப்பளம், பாயசம் அனைத்தும் வாழை இலையில் உண்டு மகிழ்கின்றனர். பெரும்பாலான விரதங்களில் இச்சாப்பாடு அல்லது சைவப்பிரியாணி சமைக்கப் படும். புளிச்சோறும் பூரியும் சில இடங்களில் திருவிழாக்களில் அளிக்கப்பெறும். மேலும் பிட்டு, உருண்டை, தோசை, முறுக்கு, அதிரசம், பால்கொழுக்கட்டை, பானக்கம், கஞ்சி முதலியனவும் இந்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. பொதுவாகத் தமிழ்நாட்டுச் சைவச்சாப்பாட்டைச் சேர்ந்தார்போல் 4 அல்லது 5 நாட்கள் சாப்பிட்டால், இவ்வுணவு பிடிக்காமல் ஓரளவு காரம் குறைவுள்ள அசைவ மொரீசியஸ் உணவுக்காக ஏங்குகிறார்கள் என்று கூறினால் மிகையாகாது.

மொரீசியஸில் பெரும்பாலான விழாக்களில் கும்மி கோலாட்டம் இடம்பெறுகின்றது. அன்றாட வாழ்க்கையில் முழங்கால்வரை கவுன்போடும் மொரீசியஸ் நாட்டுப் பெண்கள் கும்மி அடிக்கும்போது கால்பாதம் வரை பாவாடை, மேல் ஜாக்கெட், தாவணி அணிகின்றனர். கைநிறைய வளையல், காதில்தோடு, ஜிமிக்கி, மாட்டல், நெற்றிச் சுட்டி, நீண்டபின்னல் அதில் குஞ்சம், மூக்குத்தி, காலில் கொலுசு போடுகின்றனர். பட்லி என்று இங்கு அதற்குப் பெயர். திருமணத்தில் மணப் பெண் தமிழ்நாட்டுப் பெண்ணை மிஞ்சுகிறாள். ஒட்டியாணம் முதல் காசுமாலை வரை அவள் அணியாத அணிகலன்களே இல்லை. ஆடை என்று பார்க்கும்போது திருமணத்தில் மணப் பெண் பட்டுச்சேலையைக் கட்டுகிறார்கள் மாப்பிள்ளையும் பழைய தமிழ் மரபுப்படியே பட்டு வேட்டி, மேல் அங்கி, மேற்சட்டையுடன் காட்சி அளிக்கிறான். வெள்ளிக்கிழமை மற்றும் விசேட நாட்களில் கோயிலுக்குச் செல்லும் தமிழ்ச் சுமங்கலிப் பெண்கள் புடவையே கட்டிச் செல்கின்றனர்.

ரீயூனியனில் தமிழர்கள் மாட்டிறைச்சி உண்பதில்லை. பண்டிகை சமயங்களில் தமிழ்நாட்டு உணவுச் சமைத்துண்கின்றனர். தமிழ்க்கிறித்தவர்கள் நீண்ட கவுன்களும் மேக்சிகளும் அணிந்து

வந்து இந்துக்கோயில்களில் தவறாமல் வழிபடுகிறார்கள். நீளக் காலுறையுடன் கோயிலுக்கு வருவோரே மிகுதி.

மார்தினிக் தமிழர்களிடையே சேலை கிடையாது. சிலர் மட்டும் சேலை கட்ட விரும்புகின்றனர். ஆனால் சேலை கிடைப்பதில்லை. சேலைபோல் துணியை உடுத்துகின்றனர். தமிழ்ப் பெண்களில் பலர் கவுன் போட்டுக்கொள்கின்றனர்.

அமெரிக்கக்குடியரசில் குடியேறியிருக்கும் பல தமிழர்கள் நம் உடை, உணவை மறக்கவில்லை. ஆனால் இளம் பரம்பரையினர் புடவையை விரும்பிக் கட்டுவதில்லை. பொதுவாக அமெரிக்கப் பண்பாடு, அமெரிக்க உணவு முதலியவற்றில் ஈடுபாடு உள்ளவர்களாக இவர்கள் இருக்கின்றனர்.

# தமிழர்கள் வாழும் ஏனைய நாடுகளில் தமிழ்மொழியின் நிலை

பொதுவாக இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் தமிழ்மொழி நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இலங்கையில் பேசும் தமிழ் மொழிக்கும், மலேசியாவில் பேசும் தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டில் பேசும் தமிழ்மொழிக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றுமே இலங்கையில் வாழும் மக்களின் முதன்மை மொழிகளாகும். பொதுவாக இலங்கைப் பேச்சுத் தமிழை (1) யாழ்ப்பாணத்தமிழ் (2) மட்டக்களப்புத் தமிழ் (3) மலையகத்தமிழ் (4) இசுலாமியத் தமிழ் என நான்கு முக்கிய துணை கிளை மொழிகளாகப் பாகுபடுத்தலாம்.

யாழ்ப்பாணத் தமிழ் என்பது யாழ்ப்பாண மாவட்டத்தில் வழங்கும் தமிழையே சிறப்பாகக் குறிக்கும். எனினும், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வழங்கும் தமிழையும் அதில் உள்ளடக்கலாம்.

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பேசப்படும் தமிழ் பொதுவாக மட்டக்களப்புத் தமிழ் எனப்படுகிறது. கிழக்கிலங்கையில் திருக்கோணமலை மாவட்டத்தில் பேசப்படும் தமிழ் மட்டக்களப்பு தமிழிலிருந்து சில அம்சங்களில் வேறுபடினும், ஒரு பரந்த அடிப்படையில் அதனையும் மட்டக்களப்புத் தமிழில்அடக்கலாம்.

இலங்கையின் மத்திய மலைநாட்டில் தேயிலை, இரப்பர்

தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்களால் பேசும் தமிழ் மலையகத்தமிழ் எனப்படுகிறது. இந்தியத்தமிழின் செல்வாக்கினை இதில் பெருமளவு காணலாம்.

இலங்கை முசுலீம்களின் பேச்சு வழக்கே இசுலாமியத் தமிழ் எனப்படுகிறது. இது இலங்கைத் தமிழின் ஒரு பிரதான சமூகக்கிளை மொழியாகும். அரசு சொற்கள் அதிகம் பயின்று வருவது இக்கிளைமொழியின் ஒருதனிப்பண்பாகும். இலங்கையின் கிழக்கு வடக்கு மாகாணங்களில் வாழும் முசுலீம்களின் பேச்சு வழக்குக்கும் இடையே காணப்படும் வட்டார நெறியிலான வேறுபாடுகளின் அடிப்படையில் இக்கிளைமொழியை (1) கிழக்கு வடக்கு வகை (2) தென்மேல் மத்தியவகை என இரண்டு துணைக்கிளைமொழிகளாக வகைப்படுத்தலாம். தென்மேல் மத்திய வகையில் சிங்கள மொழியின் செல்வாக்கு அதிகம் காணப்படுகிறது.

இலங்கையில் தமிழ் மொழிக்குத் தேசிய அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் வட மாநிலத்திலும் கிழக்கு மாநிலத்திலும் ஆட்சிமொழியாகிய தமிழை அரசியல் சட்டப்படி இடம்பெறச் செய்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலங்களில் நீதிமன்ற மொழியாகவும் தமிழ் ஆக்கப்பட்டுள்ளது. சிங்களமக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளத் தமிழ் மொழியைப் பயன்படுத்த முடியும். அரசாங்கத்திடமிருந்து தமிழ்மொழியிலே பதிலையும் அவர்கள் பெற முடியும். இதற்கு அரசியல் சட்டத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

## மலேசியா, சிங்கப்பூர்: தமிழ்மொழி வளர்ச்சிக்குச் சிறப்பு ஆதரவு

மலேசியாவிலும் தமிழ்மொழி பண்பாடு பேணிப் பாது காக்கப்பட்டு வருகிறது. மலேசியப் படைப்பிலக்கியங்கள் பல தமிழில் எழுதப்படுகின்றன. மேலும் மலேசிய வானொலி தரமான தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழருக்கு அளித்து வருகிறது. தினமும் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. பொதுவாக

மேல்நோக்கி உயர்நிலையில் செல்லச் செல்ல தமிழ்ப் பத்திரிக்கை களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை குறைகிறது. நடுத்தர வகுப்பினர்கள், தமிழ்ப் பத்திரிகைகளைப் பொருட் படுத்தாமல் புறக்கணிக்கின்றார்கள். கீழ்த்தட்டிலுள்ளவர்கள், குறைவான ஊதியம், குறைவான படிப்பு உள்ளவர்கள், மலேசிய குடிமகன்களாகத் தற்காலிகமாக வாழும் இந்தியர்கள் - முதலியவர் கள்தான் தமிழ்ப் பத்திரிகைகளை மிகுதியாக வாங்கிப் படிக்கிறார்கள். ஆனாலும் பொதுவாக மலேசியத் தமிழர்களுக்குத் தமிழ்மொழிப் பற்றுண்டு என்றே கூறலாம்.

உலகத்தமிழ் அரங்கில் சிங்கப்பூருக்கு என்று சில தனித் தன்மைகள் உள்ளன. தமிழை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டுள்ள நிலை, நாடாளுமன்றத்தில் இடம் தந்த சிறப்பு, ஆசியான் (ASEAN) மட்டத்தில் தமிழைக் கொண்டு நிறுத்தும் தகுதி, பள்ளிகளில் தொடக்கநிலை முதல் இறுதிநிலை வரை தமிழை ஒரு பாடமொழியாக வைத்திருக்கும் இயல்பு, வானொலி யிலும், தொலைக்காட்சியிலும் தமிழுக்கு வழங்கியிருக்கும் வாய்ப்பு, தென்கிழக்காசியத் தமிழுக்கும் தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் தோற்றுவாய் செய்த சிறப்பு, எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய முதல் கட்டுரை எழுதிய இயல்பு, முதல் செய்தித்தாள் வெளியிட்டது, மலாயப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைக்கு வித்திட்டது, தென்கிழக்காசியாவில் தமிழில் பயிற்றும் ஓர் உயர்நிலைப்பள்ளியை உருவாக்கியது என்று இவற்றைப் பட்டியல் இடலாம்.

சிங்கப்பூர்த் தமிழை எழுத்துத்தமிழ், பேச்சுத்தமிழ் என்று இருவகைப்படுத்தலாம். பேச்சுத்தமிழை யாழ்ப்பாணத்தமிழ், இந்தியத் தமிழ் என இருவகைப்படுத்தலாம். இந்தியத் தமிழையும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு பேசுவோர் தமிழ் என்றும், மலையாளம், தெலுங்கு ஆகியவற்றைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுவோர் தமிழ் என்றும் வகைப்படுத்தலாம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுவோர் தமிழிலும், இல்லங்களில் ஆங்கிலம் பேசுவோர் தமிழ் என்றும், இல்லங்களில் தமிழ் பேசுவோர் தமிழ் என்றும் வகைப்படுத்தலாம். பேச்சுத்தமிழில் உள்ள கூறுகள் சிலவற்றை மலாய், ஆங்கிலம், சீனம் ஆகிய பிறமொழிச் செல்வாக்கு, பொதுக்கூறுகள் என்ற தலைப்பிலும் விரிவாக விளக்கலாம்.

## பர்மா, இந்தோனேசியா: தமிழும் தமிழருக்கு ஓர் அயல்நாட்டு மொழி

மலேசியா, சிங்கப்பூர், இலங்கையைத் தவிர, உலகில் பிற அயல்நாடுகளில் தமிழ்மொழியின் வளர்ச்சியில் தொய்வு ஏற்பட்டதோடு மேலும் சில நாடுகளில் தமிழ்மொழி மறையத் தொடங்கியது என்றே கூறலாம்.

பொதுவாகப் பர்மாவில் பர்மியர்களுக்குத் தமிழர்களின் மேல் இருந்த வெறுப்புணர்ச்சி தமிழ் மொழியின் வளர்ச்சியைப் பாதித்தது. இரண்டாம் உலகப்போருக்கு முன் இருந்த தமிழர்களின் உயர்படி பொருளாதார நிலையினைப் பார்த்து அடிநிலையில் இருந்த பர்மியர்களுக்குப் பொறாமையும் வெறுப்புணர்ச்சியும் ஏற்பட்டன. ஆகையால் பர்மாவிற்குச் சுதந்திரம் வந்தபிறகு பர்மியர்களை உயர்த்தவேண்டும், தமிழர்களின் ஆதிக்கத்தையும் எல்லா அயல்நாட்டினரின் ஆதிக்கத்தையும் ஒழிக்கவேண்டும் எனும் கொள்கை உருவாகியது. இதன் விளைவால் பர்மியர்கள் தமிழர்களையும் வளரவிடவில்லை. தமிழ்மொழியையும் வளரவிடவில்லை. தமிழர்கள் சிறுபான்மையினர்கள் என்றுகூட ஏற்றுக் கொள்ளப் படாமையால் சிறுபான்மையினருக்கு அளிக்கப் பட்டிருக்கும் மொழி உரிமைகூடத் தமிழர்களுக்கும், தமிழுக்கும் அளிக்கப்படவில்லை.

இந்தோனேசிய வடசுமத்திரா தமிழர்கள் முற்றிலும் இந்தோனேசியர்களாக மாறிவிட்டனர். மலாய்மொழியில் வல்லவர்களாக இருந்து, தமிழ் பயில வாய்ப்பில்லாததால் தமிழில் தடுமாறுகின்றனர். முதியவர்கள் திறம்பட தமிழைப் பேசவும் எழுதவும் செய்கின்றனர். இளையவருக்கு ஆர்வம் இருக்கிறது. ஆனால் பயிற்சி இல்லாததால் தமிழில் உரையாடத் தயங்குகின்றனர். சிறு குழந்தைகளுக்குத் தமிழ் புரிகிறது. ஆனால் பேசத் தடுமாறுகின்றனர். தங்கள் உறவினர் மத்தியில் முடிந்தவரை இத்தமிழர்கள் தாய்மொழியிலேயே பேச முயலுகின்றனர்.

## பிஜி: இந்தி பேசும் இளம் பரம்பரையினர்

இன்று பிஜியில் இருக்கும் ஒரு இலட்சம் தமிழரில் ஏறத்தாழ 6000 தமிழர்களுக்கே தமிழில் எழுதப்படிக்கத்

தெரியும். பெரும்பான்மையான தமிழர்களுக்குத் தமிழ் பேசக்கூடத் தெரியாது. தமிழர் என்று சொல்லிக்கொள்ளவும், தமிழில் பேசவும் பலர் வெட்கப்படுகின்றனர். கலப்பு மணம் ஏற்படுவதாலும் பலர் தமிழ்ப்பண்பாட்டை இழந்தார்கள் இவர்கள் இந்தி, ஆங்கிலம் பேசுகின்றனர். ஒரே தமிழ்க் குடும்பத்தில் பல்வேறு இந்திய இனக்கலப்பு மணம் நடைபெறுவதால் இக்குடும்பத்தில் தமிழ் மறைந்து இந்தியே ஆட்சி செய்யும் நிலை தோன்றியிருக்கின்றது. இளம்பரம்பரைத் தமிழர்கள் வீட்டில்கூட இந்தி மொழிதான் பேசுகின்றார்கள். தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டும், தமிழ்மொழியை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம்போதிய அளவில் இவர்களிடையே இல்லாததால் தமிழ்மொழி வளர்ச்சியை இங்குக்காண முடியவில்லை. பொதுவாகப் பிஜி தமிழர்களுக்குத் தமிழ்மொழி ஓர் அயல்நாட்டு மொழியாக மாறிவிட்டது எனக்கூறலாம்.

## கரீபியன் தீவுகளில் தமிழர்களுக்குத் தமிழ் அறவே தெரியாது

பொதுவாகக் கயானாவில் இந்தியர்களின் கல்விமொழியாகவும் அயல்தொடர்பு மொழியாகவும், பேச்சு மொழியாகவும், ஏன் சமயமொழியாகவும் விளங்குவது ஆங்கிலமே. பலருக்குத் தமது தாய்மொழி அறவே தெரியாது. ஓரளவு தெரிந்திருந்தாலும் முழுவதும் விளங்காது.

ஜமெய்க்காவிலும் தமிழை மறந்துவிட்டனர். 1960ஆம் ஆண்டுவரை இந்திமொழியில் பேசிக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு இந்தி, உருதுமொழி பேசப்படுவது மிகுதியாகக் குறைந்து விட்டது.

சூரிநாமில் வாழும் 90 விழுக்காடு இந்தோ-சூரிநாமியர்கள் இந்திமொழி பேசுகின்றனர். பெரும்பான்மையான இந்தோகிரேனடியர் களுக்கு இந்திய, தமிழ், அரபிக் மொழிகள் தெரியாது. அவர்கள் ஆங்கிலம் பேசுகின்றார்கள். முதியவர்கள் சிலர் இன்னும் இந்தி மொழியில் பேசக் கூடியவராய் உள்ளனர்.

டிரினிடாட்நாட்டில் கரோனி, சாகுவா நாஸ், வாட்டர்லூ, போரிஸ்பர்க் போன்ற பகுதிகளில் ஒரு சிறிய இந்தியாவைப் பார்க்கலாம். தமிழ்நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள் குறைவு.

இவர்கள் சிறுபான்மையினராக இருந்ததால் காலப்போக்கில் வட இந்தியப் பண்பாட்டைத் தழுவினர். இந்தி மொழியைப் பேசுகின்றனர்.

இரண்டாவது தலைமுறையிலேயே மார்தினித் தமிழர்கள் வீடுகளில் பிரெஞ்சு மொழி வீட்டுமொழியாக மாறியது. இவர்களுடைய நடை, உடை, பண்பாடு மாறிவிட்டன. பெயர்கள் கூடப் பேச்சிலும் எழுத்திலும் மாறிவிட்டன. குவாடிலோப்பிலுள்ள தமிழர்களும் மார்தினிக் தமிழர்களைப்போல் தமிழ்மொழியை மறந்துவிட்டனர்.

பொதுவாகக் கரீபியன் தீவுகளில் தமிழ்மொழி விழிப்புணர்வு தோன்றவில்லை. கயானாவில் மட்டும் தோன்றியிருக்கின்றது.

## தென்னாப்பிரிக்கா, சீசெல்சு தமிழ்மொழி இழப்பு

தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் காலப்போக்கில் தமிழை மறந்தனர். பொதுவாக வீட்டிலே ஆங்கிலம் பேசுகின்றனர். ஆனாலும் தமிழ்மொழியை முற்றிலும் இத்தமிழர்கள் இழக்க வில்லை. ஆகையால் தமிழ்மொழியை வளர்க்கவேண்டும் எனும் ஆர்வம் சில தமிழ் மன்றங்களிடையே இருக்கின்றது. ஏனென்றால் இவர்கள் பிஜித்தமிழர்களைப்போல இந்திமொழிச் சார்புடையவர் கள் என அறுதியிட்டுக்கூற முடியாது.

சீசெல்சு நாட்டில் தமிழர் முதலில் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்தினர். பின்னர் கறுப்பரின் மொழியும், பிரெஞ்சு மொழியும் கலந்த கிரியோல் மொழியைப் பயன்படுத்தினர். தமிழ்மொழி பேசுவோர் எழுதுவோர் எண்ணிக்கை காலப்போக்கில் குறைந்து வந்தது. இறுதியில் தமிழையே மறந்தனர்.

## மொரீசியஸ் தமிழ் ஆசிரியர்கள் தமிழைச் சரளமாகப் பேசத் தடுமாறுவார்கள்

இன்றைய சூழ்நிலையில் மொரீசியஸில் இருக்கும் ஓர் இலட்சம் தமிழர்களிலே 2 விழுக்காடு மட்டும் தமிழை இயல்பாகப் பேசும் திறன் பெற்றவர்கள். மேலும் 3.,4 விழுக்காட்டினருக்குத் தமிழை எழுதவும் படிக்கவும் தெரியும். தமிழைச் சரளமாகப் பேசும் திறன் பெற்றவர்கள் பொதுவாக 60 வயது

அடைந்தவர்களாக இருக்கின்றார்கள். 20 வயதிலிருந்து 60 வயதுள்ள தமிழர்கள் பொதுவாகத் தமிழைக் கற்றுக் கொள்ளவோ, பயன்படுத்தவோ வாய்ப்பளிக்கப்படவில்லை. ஆனால் இவர்கள் தங்கள் குழந்தைகள் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு வாய்ப்பளிக்கவேண்டும் என விரும்புகின்றார்கள். ஆகையால் பெரும்பான்மையான தமிழர்களிடையே இன்று தமிழ்மொழி, பண்பாடு புத்துணர்வு பெற்று வேரூன்றத் தொடங்கியிருக்கின்றது. அவர்கள் தமிழை எழுதவோ, இயல்பாகப் படிக்கவோ, இயல்பாகப் பேசவோ முடியவில்லை என்றாலும் அவர்களுக்குத் தமிழ்மொழி, பண்பாட்டைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் மிகுதியாக இருக்கின்றது. மேலும் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து மொரீசியஸ் அரசு இந்தியமொழி, பண்பாடு, தமிழ்மொழி உட்பட வளர்ச்சியடைவதற்காகச் சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு வருகிறது. ஆகையால் இந்திய அரசின் மனப்பான்மை, மொரீசியஸ் அரசின் தாராளப் பண்பாட்டுக்கோட்பாடு, மொரீசியசில் மக்களின் புத்தெழுச்சி, ஆதரவு முதலியன மொரீசியஸில் தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு மேலும் நன்றாக வளர்ச்சி அடையும் வாய்ப்பினை இன்று உருவாக்கியிருக்கின்றது.

## ரீயூனியனில் தமிழ்மொழி மீண்டும் மலர வாய்ப்பு உண்டா?

தமிழ் மக்களாகிய இவர்கள் தமிழை மறந்துவிட்டனர். அனைவரும் கிரியோல் மொழிபேசுகின்றனர். கிரியோல் மொழி பிரெஞ்சுக் கலப்பு மொழி என்பதோடு தேசிய மொழியும் ஆகும். படித்தவர்கள் மட்டுமே பிரெஞ்சுமொழி பேசுகின்றனர். பிரெஞ்சுமொழி பணித்துறை மொழியாகவும் அலுவலக மொழியாக வும் விளங்குகின்றது. பொதுவாக 100க்கு 95 தமிழர்களுக்குத் தமிழ் எழுதவோ படிக்கவோ, பேசவோ தெரியாது. பாரிஸ்-புதுவைத் தொடர்புள்ள ஒரு சிலர் தமிழ் பேசுகின்றனர். தமிழை மறந்தாலும் தமிழ்மொழி மீண்டும் இங்கு மலர வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றத் தொடங்கியிருக்கின்றது. தமிழ்மொழி ஆர்வம் பிறந்திருக்கிறது. இவ்வார்வத்தை வளர்ப்பது தமிழ்நாட்டின் கடமையாகும். 1980இல் மொரீசியஸ் தமிழ்மொழி விழிப்புக்குப் பின் சிலதமிழ்ப் பண்டாரங்கள் ரீயூனியன் கோயில்களில் தமிழில், வடமொழியில் அர்ச்சனை செய்கிறார்கள். அதற்கு முன்பு பிரெஞ்சு மொழி

இத்தீவில் உள்ள தமிழர்களின் கோயில்களில் ஆட்சிமொழியாக இருந்திருக்கிறது.

## மேலைநாடுகள் இளம்பரம்பரையினர் தமிழை மறந்து வருகிறார்கள்

பொதுவாகப் பிரிட்டன், அமெரிக்கக் குடியரசு நாடுகளில் உள்ளத் தமிழ் இளம்பரம்பரையினர்கள் தமிழ்மொழியை மறந்துவருகின்றனர். அவர்கள் வீடுகளில் தமிழ்மொழிபேசும் சூழமைவு கொஞ்சம் இருக்கும்போதிலும் அவர்களுக்கு பொதுவாகத் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாட்டில் இருக்கும் ஆர்வம் குறைவாக இருக்கிறது எனக் கூறலாம்.

## தமிழ்மொழி வளர்ச்சியடைய பாடுபடவேண்டும்

ஆகையால் தமிழர்கள் இருக்கும் இடத்தில் எல்லாம் தமிழ்மொழி இருக்கின்றது எனக் கூறமுடியாது. மார்தினிக், குவாடிலோப் போன்ற இடங்களில் தமிழர்கள் தமிழை மறந்து விட்டனர். இந்தோனேசியா, பிஜித் தீவு, மொரீசியஸ் போன்ற இடங்களில் தமிழ் பேசும் தமிழர் குறைவு. பலர் தமிழை மறந்துவிட்டனர். பொதுவாகப் பெரும்பான்மையான வெளி நாட்டுத் தமிழர் குடும்பங்களில் உள்ள இளைய தலைமுறையினர் தமிழில் பேச இயலாதவர்களாக இருக்கின்றனர். வெளிநாட்டுத் தமிழர்களின் இல்லங்களில் அவர்கள் தமிழில் உரையாடினால் தான் அவர்களது பிள்ளைகள் ஓரளவாவது தமிழை மற்றவர்கள் பேசும்போது புரிந்துகொள்ளும் நிலையாவது ஏற்படும். இன்று பன்னாட்டுத் தமிழர் குடும்பங்களில் அதுவும் இல்லை. பெரும்பான்மையான அயல்நாடுகள் தமிழகத்திற்கு மிகத் தொலைவில் உள்ளமை இம்மொழி இழப்புத் தோன்றியதற்குக் காரணமாக இருக்கிறது. ஆகையால் தமிழ்நாடு அரசு மேலும் இந்நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு வேண்டிய ஊக்கமும் ஆதரவும் அளிக்கவேண்டும். தமிழ்நாட்டிற்கு அருகில் இருக்கும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியாவில் எவ்வாறு தமிழ்மொழி வளர்ச்சியடைந்திருக்கின்றதோ அவ்வாறு தமிழ்நாட்டிற்கு மிகத்தொலைவில் இருக்கும் தமிழர்வாழும் அயல்நாடுகளிலும் தமிழ்மொழி புத்துயிர்பெற்று வளர்ச்சியடைய உலகத் தமிழர்கள் பாடுபட வேண்டும்.

# வெளிநாடுகளில் தமிழ்க்கல்வி

வெளிநாடுகளில் தமிழ்க்கல்வி மூன்று அடிப்படை முறையில் கற்பிக்கப்படுகின்றது. கற்பிக்கப்படவேண்டும் (1) தமிழ்மொழியை மறந்து இருக்கும், மறந்துகொண்டுவரும் அயல்நாட்டுத் தமிழர்களுக்குக் கற்பித்தல் (2) தமிழ்மொழியில் பயிற்சி, ஆர்வம் உள்ள அயல்நாட்டுத் தமிழர்களுக்கு உயர்நிலைப் படிப்புக்குரிய வசதிகளைச் செய்து கொடுத்தல் (3) தமிழ் கற்றுக்கொள்ள ஆர்வம் இருக்கும் அயல்நாட்டினர்களுக்குத் தமிழ் கற்றுத்தர வசதி அளித்தல். குறிப்பாக மூன்றாவது அடிப்படையில்தான் சோவியத் யூனியன் போன்ற கம்யூனிஸ நாடுகளிலும், செருமனி, பிரான்சு போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இரண்டாவது அடிப்படையில் தமிழ்க்கல்வி வாய்ப்பு அளிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. மொரீசியஸ், பிஜித்தீவு போன்ற நாடுகளில் முதல் அடிப்படையில் தமிழைக் கற்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இந்நாட்டினர்கள் தமிழ்நாட்டினர், இந்தியா செய்யும் உதவி போதவில்லை எனக் கூறுகின்றனர்.

## இலங்கை: தமிழில் கல்வி கல்லூரி முடியும்வரை உண்டு

இலங்கையில் பள்ளிக்கல்வி தாய்மொழியிலேயே நடை பெறுகிறது. சிங்களவர் சிங்களத்திலும் தமிழர் தமிழிலும் பள்ளிக் கல்வியினைக் கற்கின்றார்கள். பள்ளிக்கல்வி 10 ஆண்டுகளாகவும், மேல்நிலைப் பள்ளிக்கல்வி இரண்டு ஆண்டுகளாகவும் அமைந்துள்ளன. எல்லா நிலையிலும் எல்லாப் பாடங்களையும்

தமிழர்ப் பகுதிப் பள்ளிகள் தமிழிலேயே கற்பிக்கின்றன. பள்ளிகளில் ஆங்கிலம் விருப்பப் பாடமாக்கப்பட்டுப் புறக்கணிக்கப் பட்ட சூழலும் வந்தது. இந்நிலையில் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லுகின்றபோது தாய்மொழி வழிப் படிக்கவேண்டியது இன்றியமையாததாகி விடுகிறது. பல்கலைக்கழகங்களில் தாய் மொழியிலேயே எல்லாத் துறைக்கல்வியும் கற்பிக்கப்படவேண்டும் என்பது அரசின் கொள்கை. இக்கொள்கைக்கேற்பப் பல்கலைக் கழகங்களில் கலையியல், அறிவியல், தொழிலியல் கல்விகள் தமிழிலேயே கற்பிக்கப்படுகின்றன. பொதுவாக தமிழ்மொழி வழிக்கல்வி பல்கலைக்கழகங்களில் வெற்றிபெறவில்லை என எம்.ஏ.நுஃமான் கூறுகிறார்.

## மலேசியா: தமிழ் படிக்க விரும்பும் மாணவர் பல்கலைக்கழகத்திலும் படிக்கலாம்

தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் மலேசியாவில் ஆரம்பித்த பொழுது முதல் நான்கு வகுப்புகள் என்றும், பின்னர் 1920 ஆண்டுகளில் ஐந்தாம் வகுப்புவரை சென்று 1930ஆம் ஆண்டுகளில் ஆறாம் வகுப்புவரை தொடர்ந்து 1940ஆம்ஆண்டுகளில் ஏழாம் வகுப்புவரை நீட்டிக்கப்பட்டது. மலேசியா சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து அந்நாட்டின் 800க்கும் அதிகமான தமிழ்ப் பள்ளிகளைத் தேசியக் கல்வித்திட்டத்தின் கீழ்க் கொண்டுவந்ததன் காரணத்தால் தமிழ்ப் பள்ளிகளில் தமிழ்மொழிக்கல்வி மீண்டும் ஆறாம் வகுப்புடன் முடிவடையும் சூழல் ஏற்பட்டது.

இன்று மலேசியா நாட்டில் தொடக்கக் கல்வி 6 ஆண்டுகள். அதிலே ஆங்கிலமும் தாய்மொழியும் கட்டாயம் படிக்க வேண்டும். கல்வி தாய்மொழி வாயிலாகவே கற்பிக்கப்படுகிறது. தமிழ்ப் பள்ளியில் பயிலும் மாணவர்களில், குறிப்பாகத் தோட்டத் தொடக்கப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் 90 விழுக் காட்டினர் உயர் இடைநிலைக் கல்விக்குச் செல்வதே இல்லை.

பிறகு உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகளில் 6 ஆண்டுகள் மலாய்மொழி கட்டாயமாக்கப்பட்டு அனைத்துக் கல்வியும் அம்மொழி வாயிலாகவே கற்பிக்கப்படுகிறது. தமிழ் படிக்கவோ, சீனம் படிக்கவோ விரும்பும் மாணவர் 15 எண்ணிக்கைக்குமேல் இருந்தால் பள்ளி நேரம் இல்லாத பிற நேரங்களில் இம்

மொழிகளில் கற்பிக்கலாம். 6வது வகுப்புவரை தமிழில் படித்துவரும் மாணவர்கள் உயர்நிலைப்பள்ளியில் 7வது வகுப்புவரும்போது அனைத்தையும் மலாய்மொழியில் படிக்கவேண்டும். இடையில் ஓர் ஆண்டு மலாய்மொழி மட்டுமே கற்பதற்கு ஒதுக்கப்பட்ட பள்ளிகளில் அவர்கள் படிக்க வேண்டியுள்ளது. இதனால் ஓர் ஆண்டு வீணாகிறது. ஆதலால் மலேசிய நாட்டின் உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் தமிழே இல்லை என்று சொல்லி விடலாம். தமிழ் மாணவர்கள் மலாயும், சீனமும், படிக்க இப்போது சென்று கொண்டிருக்கின்றனர்.

மேலும் பல்கலைக்கழகங்களிலும் அனைத்தும் மலாய் மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. ஆனால் கோலாலம்பூர் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறை என ஒன்று நடைபெற்று வருகிறது. பெயர் இந்தியத்துறை என்றாலும் அங்கு பெரும்பாலும் தமிழ்க்கல்வியே கற்பிக்கப்படுகிறது. அங்குத் தமிழில் முதல் பட்டப்படிப்பும், முதுகலைப் பட்டப்படிப்பும் நடைபெறுகின்றன. இந்தியக் கல்விக்கு என ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னால் இத்துறை தோற்றுவிக்கப்பட்டது. 1984ஆம் ஆண்டுவரை இத் துறையில் சுமார் 200 மாணவர்கள் தமிழ்ப்பட்டம் பெற்றுச் சென்றிருக்கின்றனர். இத்துறையில் தமிழ்ப் பட்டக்கல்வி படிக்க மாணவர்கள் மிகமிகக் குறைவாகவே வருகின்றனர். உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ் இல்லாதது இதற்கு ஒரு காரணம். கோலாலம்பூர் பல்கலைக்கழகத்தில் பாடத்திட்டங்கள் பல்வேறு துறைகளுக்குரிய பாடங்களை இணைத்து அமைக்கப் பட்டுள்ள காரணத்தால் பிற துறையில் படிக்கும் மாணவர்கள் பலர் தமிழ்த்துறைக்குரிய பாடங்களைப் படிக்க முன்வருகின்றனர்.

## சிங்கப்பூர்: தமிழில் உயர் கல்வி இல்லை

தமிழ்க் கல்வி சிங்கப்பூரில் நிறுவப்பட்ட காலத்திலேயே தொடங்கப்பட்டது என்றாலும் அஃது ஒரு வகையில் ஒருமுகப் படுத்தப்பட்டு முறையாகவும் சீராகவும் இயங்கத் தொடங்கியது இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் என்றே சொல்ல வேண்டும். 1945க்குப் பின்னர்தாம் இரண்டாம் மொழியின் முக்கியத்துவத்தை எல்லோரும் உணர்ந்தனர்.

இன்று சிங்கப்பூரில் பள்ளிக் கல்வியில் மாணவர்கள்

அனைவரும் முதலாவதாக ஆங்கில மொழியைக் கட்டாயமாகக் கற்க வேண்டும். இரண்டாவதாக சீனம், மலாய், தமிழ் ஆகிய தாய்மொழிகளில் ஒன்றைக் கட்டாயம் கற்கவேண்டும். மேல்நிலை முடிகின்றவரை அந்நிலை உள்ளது. தமிழ் மாணவர்கள் 100க்கு 10 பங்கினர் சீனமொழி கற்கவும் 100க்கு 1 பங்கினர் மலாய்மொழி கற்கவும் செல்கின்றனர். தமிழ் கற்பிக்கும் பள்ளிகள் சிங்கப்பூரில் 700 இருக்கின்றன. மேலும் தமிழ் மாணவர்கள் தொடக்கப் பள்ளிகளில் 15,000, உயர்நிலைப்பள்ளிகளில் 7,500 புகுமுக வகுப்புகளில் 300 முதல் 400 வரை படிப்பதாகவும் தெரிகிறது. ஆனால் சிங்கப்பூரில் தமிழில் உயர்கல்வி இல்லை. தமிழில் பட்டம் பெறுவோர் தோன்றுதல் இல்லையாகிவிட்டது. பள்ளிகளில் தமிழ்க்கல்வி கற்பிக்கப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களும், பாட நூல்களும் போதிய அளவு இல்லாமையே பெருங்குறையாகக் கொள்ளப்படவேண்டும்.

## இந்தோனேசியா: கோயில்களில் மட்டும் தமிழ்க்கல்வி

1960 வரை தமிழ்ப்பள்ளிகள் வட சுமத்திராவில் நடைபெற்று வந்தன. அதற்குப் பின்னர் இந்தோனேசிய மொழி போதிக்கப் படாத பள்ளிக்கூடங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், பல பள்ளிக்கூடங்கள் இந்தோனேசியப் பள்ளிகளாக மாறின. ஆனால் இந்தோனேசிய அரசாங்கம் தமிழ்மொழிக்கு மட்டும் விதிவிலக்கு அளித்து, தமிழர்கள் தங்களுடைய மொழியைத் தத்தம் கோயில்களில் வகுப்பு நடத்தித் தங்களுடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம் என்ற சலுகையும் வழங்கிற்று. 1974க்குப் பின்னர் தமிழ் வகுப்புகள் மேடான் மாரியம்மன் கோயிலில் நடத்தப்பட வில்லை என்றாலும் பிஞ்சய் மாரிம்மன் கோயில் போன்ற இதர கோயில்களில் முடிந்த அளவிற்கு மாலை நேரங்களில் தமிழ் வகுப்புகளை நடத்தும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கோயில்களில் கற்பிக்கப்படும் தமிழைத் தவிர இதர வழிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. தனிப்பட்ட முறையில் பல பெற்றோர் தங்களுடைய குழந்தைக்குத் தமிழில் எழுதவும், படிக்கவும் கற்பிக்கின்றனர். வசதி படைத்தவர்கள் வயது முதிர்ந்த சில ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்துத் தங்களுடைய பிள்ளைகளைத் தமிழ் படிக்கச் செய்கின்றனர்.

## பர்மா: தமிழ்க்கல்வியின் தேக்கநிலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தமிழர்கள் தங்கள் இனப்பிரிவினர்களுக்குத் தனிப்பள்ளி நடத்தினர். பர்மாவிற்குச் சுதந்திரம் கிடைத்தபிறகு தனியார் தமிழ்ப் பள்ளிகள் அரசு அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. எல்லாப்பாடங்களும் பர்மிய மொழிமூலம்தான் கற்பிக்கப்பட்டன. இரண்டாவது கட்டாயமொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. தமிழ்மொழியைப் பர்மிய அரசு கற்றுத்தரவில்லை. 1955ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழக நுழைவுக்குத் தேவையான மெட்ரிகுலேசன் தேர்வு பர்மிய மொழியில் மட்டும்தான் நடத்தப் பட்டது. பல்கலைக்கழகக் கல்வியும் பர்மிய மொழியில் மட்டும் தான் அளிக்கப்பட்டது. ஆகையால் பர்மிய மொழி மயமாக்கும் இச்சூழ்நிலையில் தமிழ்மொழி வளர்ச்சியடையும் சூழ்நிலை உருவாகவில்லை.

பர்மியப் பள்ளிகளில் தமிழ் வகுப்பு இல்லை என்றாலும் சில தமிழ்க்கோயில்களில் காலை, இரவு தமிழ் மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கோயில்களும் கழகங்களும் ஞாயிறுதோறும் தமிழைப் படிப்பிக்கின்றன. சில கோயில்களில் தமிழ் பயில வாய்ப்பில்லை. பொதுவாகப் பர்மாவில் வாழும் தமிழ்க் குழந்தைகட்குத் தனிப்பட்ட முறையில் 'தமிழ் கற்பிக்க ஆசிரியர் பலர் இருக்கின்றனர். இருந்தாலும் தமிழ்ப் படிப்போர் குறைந்து வருகின்றனர். வட பர்மாவில் இந்நிலை இரங்கத் தக்கதாக உள்ளதாம். எல்லாக் கோயில்களிலும் தமிழ்ப்படிப்பைக் கட்டாயமாக்கவும், நெறிமுறை உடையதாக்கவும் பர்மிய இந்துச் சங்கம் முயன்று வருகிறது.

## பிஜி: இந்தியுடன், தமிழ் போட்டியிடுகின்றது

தொடக்கத்தில் ஓரளவு தமிழ்க்கல்வி வேரூன்றியபோதிலும், இரண்டாம் உலகப்போரின்போது தமிழ்நாட்டுடன் இருந்த தொடர்பை இழந்ததாலும், பிரிட்டிஷ் அரசு தமிழ்க்கல்விக்கு ஆதரவு அளிக்க முன்வராததாலும், தமிழர்களின் தாழ்வு மனப்பான்மையினாலும், ஆர்வமின்மையினாலும், இந்தி தீவிரவாத இயக்கத்தின் வெறியினாலும் 1950 ஆம் ஆண்டுக்குப்பிறகு தமிழ்க்கல்வி பிஜித்தீவில் நலியத் தொடங்கியது.

இன்று இருக்கும் தமிழ்மொழி சூழ்நிலையில் தமிழ் மொழியை இரண்டாம் நிலை மொழியாக மட்டும்தான் பிஜித் தீவில் கற்பிக்க முடியும் ஏனென்றால் பிஜித் தமிழர்களுக்கே தமிழ்மொழி ஓர் அயல்நாட்டு மொழியாக மாறிவிட்டது. பல ஆண்டுகளுக்கு முன்அரசால் நியமிக்கப்பட்ட கல்விக்குழு எல்லோரும் அவரவர் தாய்மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தமிழர்கள் தமிழைக் கற்றக்கொள்ள வேண்டும் எனப் பரிந்துரை செய்தது.

ஆகையால் பிஜி அரசு தொடக்கப்பள்ளிகளில் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்றுத்தரலாம் என அனுமதி அளித்திருக்கின்றது. இன்று பிஜித்தீவில் 16 சங்கம் பள்ளிகளிலும், 3 சங்கம் அல்லாப்பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுகின்றது. சுமார் 1600இலிருந்து 1800 மாணவர்கள் வரை தமிழ் படிக்கின்றனர். மேலும் எட்டாம் வகுப்பு தேர்வின்போது தமிழ்மொழி மாணவர்கள் தமிழ்மொழித் தேர்வு எழுதவும் 1990 இலிருந்து வாய்ப்பளிக்கப் பட்டிருக்கின்றது.

தமிழ்க்கல்வி அளிக்கவேண்டும் எனும் ஆர்வம் சில தமிழர்களிடையே பிஜியில் இருந்தாலும் அதற்குத் தேவையான வசதிகள் குறைவாகவே இருக்கின்றன. முதலில் தமிழ்க்கல்வி கற்பிக்கக்கூடிய தகுதியுள்ள ஆசிரியர்கள் பலர் இல்லாத நிலை. இரண்டாவதாகத் தேவையான தமிழ்ப் பாடநூல்கள் இல்லாத குறை.

## தென் ஆப்பிரிக்கா: 1984லிலிருந்து தமிழ்ப் படிப்பு முன்னேற்றம்

1984ஆம் ஆண்டிற்கு முன்பு தமிழ்க் கல்வி அரசு இசைவுடன் அறிமுகப்படுத்தப்படவில்லை. 1914ஆம் ஆண்டுவரை டர்பனில் இரண்டு தனியார் பள்ளிகளில் தமிழ்க்கல்வி கற்றுத் தரப்பட்டது. 1914ஆம் ஆண்டு இந்துத்தமிழ் நிறுவனம் அமைக்கப் பட்டவுடனே அந்நிறுவனம் இக்கல்லூரியின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டது. ஆங்கிலக்கல்வி பள்ளிநேரம் முடிந்தபிறகு மத்தியானத்தில் தமிழ்மொழி வகுப்புகள் நடத்தப்பட்டன. 1978ஆம் ஆண்டு இக்கல்லூரியின் 50ஆம் ஆண்டுப் பொன்விழா கொண்டாடப்பட்டது. இன்று இந்நிறுவனம் சனி, ஞாயிறு, மதியம் குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் தமிழ்மொழி

கற்றுத்தருகிறது. ஒரு காலத்தில் வாரக்கடைசியிலும், பள்ளிநேரம் முடிந்தவுடன் 32 பள்ளிகளில் தமிழ்மொழி கற்றுத்தரப்பட்டு வந்தது. மக்கள் குடிப்பெயர்ச்சியால் இப்பள்ளிகளுக்கு ஆதரவு குறைந்து 1981ஆம் ஆண்டு மீண்டும் தமிழ்ப் பயிற்சியைத் தொடங்கிய பெருமை இந்துத் தமிழ் நிறுவனம், நேட்டால் தமிழிசை சபை முதலியவைகளுக்கு உண்டு.

1984ஆம் ஆண்டைத் தமிழ்க் கல்வி வளர்ச்சியின் முக்கிய ஆண்டாகக் கருதலாம். எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தமிழும், மேலும் நான்கு இந்திய மொழிகளும் கற்றுத்தரப்படவேண்டும் என அரசு அறிவித்தது. டர்பனில் இதன் பயனாக 4300 மாணவர்கள் தமிழ் படிக்க முன் வந்திருக்கிறார்கள். ஆரம்ப நிலையானதால் தற்போது இரண்டாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை தமிழ் கற்றுத்தரப்படுகிறது. தேவையான தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. 90 முதல்நிலைப் பள்ளிகளிலும் 4 உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் 1984ஆம் ஆண்டிலிருந்து கற்றுத்தரப்படுகிறது.

## சீசெல்சு: தமிழ்ப்பள்ளிகள் கிடையாது

தமிழ்ப் பள்ளிகள் சீசெல்சு நாட்டில் கிடையாது. ஆனால் 1984ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்துக்கோயில் சங்கம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9லிருந்து 11 மணிவரை தமிழ்மொழிப் பாட வகுப்புகளை நடத்துகின்றது.

## மொரீசியஸ்: தமிழ் பயிலும் வாய்ப்பு உண்டு

தாய்மொழியாகத் தமிழை மொரீசியஸ் தமிழர்கள் மறந்தனர். ஆங்கில மொழி ஆதிக்கத்தில் தமிழ் எங்கே மதிக்கப்படப் போகிறது என்று தமிழர்களுக்கு ஏற்பட்ட விரக்தியாலும், மேலும் பொருளாதார நிலையில் முன்னேறத் துடித்துக் கொண்டிருந்த அக்காலத் தமிழினம் பிரெஞ்சு மொழியையோ ஆங்கில மொழியையோ கற்றால் மட்டும்தான் உயர முடியும் எனும் சூழ்நிலை தோன்றியதாலும், வீட்டிலும், புறச் சூழ்நிலையிலும் வெளியிலும் தாய்மொழிபோல் இவர்களிடையே கிரியோல் மொழி வழங்குவதாலும், பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்கும் வாய்ப்பு இல்லாததாலும் தமிழ்க்கல்வி தமிழர்களாலேயே புறக்கணிக்கப்பட்டது. அண்மைக்காலம் வரை இவர்களுக்குத்

தமிழ்மொழி உணர்ச்சிகூட இல்லாமல் இருந்தது என சில தமிழ் மொரீசியர்கள் கூறுகின்றனர்.

ஆனால் மொரீசியஸ் விடுதலைக்குப்பின்னர் கல்வித் திட்டத்தில் தமிழ் இடம்பெற்றது. கல்வி அமைச்சின்கீழ் உள்ள தொடக்கப்பள்ளிகளில் முதல் வகுப்பு தொடங்கி 6ஆம் வகுப்பு முடிய முறையான தமிழ்ப் பயிற்சி உண்டு. தொடக்கப் பள்ளிகளில் மட்டுமின்றி மகாத்மாகாந்தி நிறுவனத்திலும் இராயல் கல்லூரியிலும் உயர்நிலையில் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படுகிறது. இன்று ஏறத்தாழ 175 பள்ளிகளில் 218 தமிழ் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 10,000 மாணவர்கள் தமிழ்ப் பயிலுகின்றனர். ஆனால் பயிற்றுமொழியாகவும், பாடமொழியாகவும் பள்ளிக் கல்வித் திட்டத்தில் தமிழ் இடம்பெறவில்லை. இன்று பயிற்று மொழியாக ஆங்கிலம் மேல் வகுப்புகளில் உள்ளது. மொரீசியஸ் வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்களும் தமிழ்மொழி கற்பிக்கின்றன. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் கோயில்களில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

## ரீயூனியன்: நான்கு ஆண்டுகளுக்கு முன் தமிழ்மொழியின் மறுபிறவி

இந்நாட்டில் அனைத்துப் பாடங்களும் பிரெஞ்சு மொழியில் போதிக்கப்படுகின்றன. ஆங்கிலம், ஜெர்மன், ஸ்பானிஷ் மொழிகளை அயல்மொழிகளாகக் கற்றுக் கொடுக்கின்றனர். பிரெஞ்சுப் பகுதிகளிலும், பிற பகுதிகளிலும் தமிழ்ப்பள்ளிக் கூடங்கள் இல்லை. ஆனால் சென்ற நான்காண்டுகளாகத் தமிழ்மொழியும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. பிரெஞ்சு மூலம் தமிழ் படிக்க பாலர் பாடநூல் பள்ளியில் கற்பிக்கப்படுகிறது. இஃதன்றிப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமாகிய மொழியியல் பள்ளியில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோருக்குத் தமிழ் போதிக்கப் படுகிறது. பல்கலைக்கழகத்தேர்வுகளில் தமிழை விருப்பப்பாடமாக எடுத்துக் கொள்ளலாம். இதனால் தமிழின் நிலை மேம்படுத்தப் பட்டு வருகிறது.

## கரீபியன் பகுதிகளில் தமிழ்க்கல்வி அறவே கிடையாது

புதுவை அரசு புதுவைக் கிளையின் மூலம் பிரெஞ்சு - தமிழ்ப் பாடநூல்கள் பண்பாட்டு நூல்கள் போன்ற நூல்களைக்

குவாடிலோப்பிக்கு அனுப்பியிருக்கின்றது. குவாடிபோப், மார்தனிக் தமிழர்கள் பிரெஞ்சுமொழி படித்த தமிழர்கள். தமிழ்க்கல்வி அறவே கிடையாது. தமிழ்மொழியை மறந்து விட்டனர். அதேபோல கயானா போன்ற பிற தமிழர்கள் வாழும் கரீபியன் பகுதிகளில் இருக்கும் இந்தியத் தூதரகம் தமிழ்ப் பாடநூல்களையும் தமிழில் எழுதப்பட்ட மாரியம்மன் தாலாட்டு போன்ற தமிழ்ப்பண்பாட்டுத் தொடர்பான தமிழ் நூல்களையும் வரவழைத்துக்கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இருக்கும் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறைக்கும் இவை தொடர்பாக 1991ஆம் ஆண்டு கடிதம் அனுப்பியுள்ளது.

## பிரிட்டன், ஞாயிறு அன்று தமிழ்க்கல்வி

ஐரோப்பாவிலே தொடக்கத்திலிருந்தே தமிழில் பட்டப் படிப்பும் ஆராய்ச்சிப்படிப்பு வசதியும் பிரிட்டனில்தான் இருந்தன. சென்ற நூற்றாண்டிலேயே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழுக்கும், தெலுங்குக்கும் இடமளிக்கப்பட்டிருந்தது. தமிழ்க் கல்விக்கும் தமிழாராய்ச்சிக்கும் சிறப்பாக ஓர் இடமளித்திருப்பது இலண்டன் பல்கலைக்கழகத்தில் உள்ள கீழைநாட்டு ஆப்பிரிக்கா கலைக்கழகம் என்றாலும், ஆக்ஸ்போர்டு, பர்மிங்காம், மான்செஸ்டர், எடின்பரோ முதலிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழில் ஆய்வு செய்ய வாய்ப்பிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மேலும், இலண்டன்வாழ் தமிழ்ச் சிறார்களின் தமிழ்க்கல்விப் பணியில் ஆலயங்களும், தமிழ்ச்சங்கங்களும், நன்மைபுரி இயக்கங்களும், முன்னேற்றக்கழகங்களும் தனித்துவமான தமிழ்ப் பள்ளிகளும், கலைக்கழகங்களும் இவ்வாறு அமைந்த இருபத்து மூன்று அமைப்புகளும் தமிழ்க்கல்விக்காக அரும்பணி ஆற்றுகின்றன.

தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்த அளவினராய் இருந்தபோது தத்தம் வீட்டிலேயே தம் தாய் மொழியைத் தங்களுக்கு இயன்ற அளவில் கற்றுத் தந்து வந்தனர். பின்னர் தமிழர்கள் எண்ணிக்கை மிகுந்ததும் பிள்ளைகளை ஒருபொது இடத்திற்கு அழைத்து வந்து சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை களில் தக்காரைக்கொண்டு தமிழ் பயிற்றுவிக்கத் தலைப்பட்டனர்.

இவ்வாறு தமிழர்கள் கணிசமான அளவில் வாழும் விம்பிள்டன் பகுதியிலும் கிழக்கு இலண்டனிலுள்ள ஈட்ஹோமிலும் 1974 இல் முறையே விம்பிள்டன் தமிழ்ப் பள்ளியும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும் தொடங்கப்பெற்றன. தொடர்ந்து இலண்டன் மாநகரின் பல பகுதிகளிலும் பர்மிங்காம், மான்செஸ்டர், இசுகாட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ போன்ற பெரும் நகர்களிலுமாக இதுகாறும் 22 தமிழ்ப்பள்ளிகள் தோற்றுவிக்கப் பெற்று நன்கு இயங்கிவருகின்றன. இப்பள்ளிகள் பெரும்பாலும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்குவதற்குக் காரணம் தமிழ்ச் சிறார்கள் திங்கள் முதல் அரசினர் பள்ளிக்குச் சென்று கணக்கு, ஆங்கிலம், அறிவியல் முதலியன கற்பதேயாம்.

## அமெரிக்கக்குடியரசு: விடுமுறை நாட்களில் தமிழ்க்கல்வி

அமெரிக்காவில் முதன்முதலாகத் தமிழ்க்கல்வியை அறிமுகப் படுத்திய பல்கலைக்கழகம் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் ஆகும். சிக்காகோப் பல்கலைக்கழகத்திலும், இதாகாவிலுள்ள பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்திலும் சியாட்டிலுள்ள வாஷிங்டன் பல்கலைக்கழகத்திலும், டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்திலும் தமிழ்க் கல்விக்கும் தமிழாய்விற்கும் இடம் அளிக்கப் பட்டுள்ளது.

ஆனால் இப்பல்கலைக்கழகங்கள் அமெரிக்கத் தமிழர்கள் தமிழ் கற்றுக்கொள்வதற்கு மிகுதியாகப் பயன்படவில்லை என்றே கூறுவோம். பொதுவாக அமெரிக்காவிலுள்ள தமிழச்சங்கங்கள், குறிப்பாக, சிக்காகோ, நியூயார்க் ஆகிய நகரங்களிலுள்ள தமிழ்ச்சங்கங்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு கற்பிக்கின்றன. தமிழ்ப்பிள்ளைகள் தாய்மொழியையும், கலைகளையும் கற்கவேண்டும். அவற்றில் திறமைபெற வேண்டும் எனும் நோக்கத்துடன் தக்காரைக்கொண்டு தமிழ் பயிற்றுவிக்கின்றனர். அமெரிக்க நாட்டுச் சூழலுக்கேற்ப தமிழ்ப் பாடத்திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் பொதுவாகத் தமிழ் ஆர்வம் உள்ள மாணவர்கள் அதிகம் எனக் கூற முடியாது.

## பிறநாடுகள்: தமிழ்க்கல்விக்கும் ஆதரவுதரும் அயல்நாட்டினர்

மேலும் நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, துபாய் போன்ற

நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழர்களும், தமிழ்ச்சங்கங்கள் மூலம் தமிழ்மொழி கற்பிக்க தேவையான முயற்சிகளை எடுத்திருக்கின்றனர். ஆஸ்திரேலியாவில் 1978ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சிட்னி தமிழ்ச்சங்கத்தின் முயற்சியால் 1980 லிருந்து சிட்னி ஸ்டிராபீல்டு பப்ளிக் பள்ளியில் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத் தரப்படுகின்றது. தவிர சில தமிழரின் முயற்சியால் ஆஷ்பீல்ட் எனும் ஊரில் தமிழ் கற்றுத்தரப்படுகின்றது. மேலும் நியூ இங்கிலாந்து பல்கலைக் கழகமும் 1991 ஆம் ஆண்டு தமிழ்மொழி கற்பிக்கும் ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கின்றது.

மற்ற நாட்டோடு ஒப்பிடுமிடத்துக் கனடா நாட்டில் தமிழ் படிக்க எந்தக் கல்வி நிலையத்திலும் சிறப்பான வாய்ப்பு வசதிகள் இல்லையென்றே கூறலாம். ஆனாலும் கல்காரிப் பல்கலைக்கழகத்திலும், பிரிட்டிஷ் கொலம்பியாப் பல்கலைக் கழகத்திலும் தமிழ் வகுப்பு நடத்தப்படுகின்றது. சாஸ்திரி-இந்தியா-கனடா நிறுவனம் தமிழியல் ஆய்வுக்கு இடமளித்துள்ளது. இந்தியா சென்று அங்கு மொழிகளைக் கற்க விரும்புவோருக்கு இந்நிறுவனம் துணைபுரிந்து வருகிறது.

கீழ்த்திசை-பண்பாடு தேசியக்கல்வி நிறுவனம், பாரிஸ் பல்கலைக்கழகம், பேரா.குரோ தலைமை தாங்கி நடத்தும் சார்பான் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மேனிலை ஆராய்ச்சி நிறுவனம் என்ற மூன்று நிறுவனங்களே பிரான்சில் தமிழ்ப் பற்றிய படிப்புக்கு முக்கிய இடங்களாகக் கருதப்படுகின்றன. மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள பிரெஞ்சு பேசப்பெறும் செனகால், தக்கார் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இந்நாட்டிலுள்ள தமிழ்ப் பண்பாட்டுக்கழகத்தில் ஞாயிறு தோறும் இலவசத் தமிழ் வகுப்பு, இலக்கியம் மற்றும் வரலாறு, கலந்துரையாடல், கோலம் போடுதல் முதலியவை கற்றுத்தரப்படுகின்றன.

மேற்குச் செருமனியில் மேற்குப் பெர்லின், மாபுர்க், பிரேமன் ஆகிய நகரங்களில் அவ்வப்போது தமிழ் கற்பிக்கப் பட்டிருந்தாலும், ஹாம்புர்க், ஹைடல்பர்க், கொலோன் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் மட்டுமே தொடர்ந்து தமிழ் கற்பிக்கப்படுகிறது எனலாம்.

மாஸ்கோ பல்கலைக்கழகத் தமிழ்ப்பிரிவிலும், போலந்திலுள்ள வார்சா பல்கலைக்கழகத்திலும், செக்கோஸ்லவாக்கியாவிலுள்ள பிராக் நகரிலுள்ள சார்லஸ் பல்கலைக்கழகத்திலும், பின்லாந்து நாட்டின் தலைநகரான ஹெல்சின்கியில் உள்ள ஹெல்சின்கிப் பல்கலைக்கழகத்திலும், ஹாலந்து நாட்டில் உத்ரெஹத் பல்கலைக் கழகத்திலும், ஸ்வீடன் நாட்டின் தலைநகரமான ஸ்டாக்ஹோம் நகரில் உள்ள ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகத்திலும் ஜப்பானில் தோக்கியோவிலுள்ள ஆசிய ஆப்பிரிக்கமொழி நிறுவனத்திலும் தமிழ்மொழி கற்பிக்கப்படுகின்றது. முதல் வகுப்பு முதல் முனைவர் பட்டம் வரை சீனாவில் தமிழ்க்கல்வி இல்லாது போயினும், சீனாவில் தமிழ் தெரிந்த சீனர்கள் 40 பேர் உள்ளவரை, தமிழ்மொழியைக் கற்கும் ஆர்வம் உள்ளவரை பிகிங் வானொலி நிலையம் உள்ளவரை, சீனாவில் தமிழ் ஒலித்துக்கொண்டே இருக்கும். மேலும் தமிழர்கள் வாழும், ஹாங்காங், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பிற ஆப்பிரிக்க, மேற்கு ஆகிய பகுதிகளில் பல தமிழர்கள் குடியேறி தொடர்ந்து வாழும் காலம்வரை இப்பகுதிகளில் எல்லாம் தமிழ் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

# தாயகத்துக்கு அப்பால் தமிழிலக்கியம்

தமிழ் இலக்கியம் குறிப்பாக இலங்கையிலும், மலேசியா, சிங்கப்பூரிலும், பிற பகுதிகளிலும் அயல்நாடுகளில். குடியேறிய தமிழர்கள் மூலம் வளர்ச்சியடைந்தது. சங்ககாலத்திலிருந்தே இலங்கைத் தமிழர்கள் தமிழ் இலக்கியத்தை வளர்த்ததாகச் சான்றுகள் உள்ளன. ஆனால் பொதுவாகப் பத்தொன்பதாம் - இருபதாம் நூற்றாண்டிலிருந்துதான் தமிழர்கள் அயல்நாடுகளில் குடியேறியபின் தமிழ் இலக்கியம் வேற்று நாடுகளில் சிறப்புற வளர்ச்சியடையத் தொடங்கியிருக்கின்றது. தமிழ்மொழி மறைந்து கொண்டு வரும் நாடுகளிலும் நாம் தமிழை வளர்க்க முன்வந்தோமானால் உலகத்தமிழ் இலக்கியம் பல பண்பாட்டுச் சூழமைவு நிறைந்த உலகளாவிய நோக்குடன் மேலும் வளர்ச்சியடைய உதவமுடியும்.

## இலங்கையில் தமிழ் இலக்கியத்திற்குச் சிறப்பான இடம் உண்டு

இலங்கைத் தமிழர்களுக்கெல்லாம் தெரிந்த எழுத்தாளர் களின் புலவர்களின், இடங்களின், பெயர்கள் மேலும் அவர்களில் சிலர் எழுதிய நூல்களின் விவரம் சுருக்கமாகக் கீழே அளிக்கப் பட்டிருக்கின்றது. ஈழத்து பூதன் தேவனார், ஏலேல சிங்கனின் திருவள்ளுவர் உறவு, தேவார ஆசிரியர்கள் பாடிய கோணேசுரவம், திருக்கேதிசுவரம், சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளூடார்க், ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, பலர் மேற்கொண்ட இலக்கண, இலக்கிய புராணநூற்பதிப்புகள், கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி, சைவ, வைணவ, சமயநூல்களின் மொழிபெயர்ப்புகள், மருத்துவ அறிஞர் கிரீனும்,

பிறரும் தமிழில் மொழி பெயர்த்த அறிவியல், குறிப்பாக மருத்துவ நூல்கள், சபாபதி நாவலரின் திராவிடப் பிரகாசிகை, கூத்தப்பிரான் தத்துவக் கலையை உலகுக்கு விளக்கிய ஆனந்த குமாரசுவாமி, தமிழக்கிய நூல்களின் மொழிபெயர்ப்புகள், கனகசபை பிள்ளையின் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர், கணேசஐயர் தொல்காப்பியப் பதிப்புகள், திருத்தந்தை ஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகளார், எம்.வேலுப்பிள்ளை, வித்தவ சிரோமணி பொன்னம்பலம்பிள்ளை, குமாரசாமிப்புலவர், பண்டிதமணி கணபதிபிள்ளை ஆகிய பெயர்கள் இலங்கைத் தொடர்பில் எண்ணுதற்குரியன. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலற்றில் இவர்களுக்கு ஒருசிறப்பான இடம் உண்டு. ஈழத்து பூதன்தேவனார் பாடல்கள் சங்க இலக்கியத்தில் வரலாறாக உள்ளன (அகம்.3, குறுந்தொகை.3, நற்றிணை.1 ஆக ஏழு பாடல்கள்)

ஈழத்து தமிழ் நாவல்கள் - நூல் விவரப்பட்டியல் 1885-1976 எனும் நூலில் 407 நாவல்களைப் பற்றிய தகவல்களை நா.சுப்பிரமணியம் வெளியிட்டிருக்கிறார். ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சி தொடர்பாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. நடராசா எழுதிய ஈழத்துத் தமிழ் இலக்கியவளர்ச்சி, செல்வராசன் வரைந்த ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி (1969) கைலாசபதி அளித்த ஈழத்து இலக்கிய முன்னோடிகள் (1986), கார்த்திகேசு சிவத் தம்பி எழுதிய ஈழத்தில் தமிழ் இலக்கியம் (1987) முதலி யவைகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

## மலேசியாவில் தமிழ் இலக்கியத்தின் மலர்ச்சி

மலேசியநாட்டில் இலக்கிய வளர்ச்சி 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்குகிறது. 1876இல் சிங்கை வர்த்தமானி என்ற இதழும் 1887 இல் சி.ந.சதாசிவபண்டிதரின் வண்ணை அந்தாதியும் முறையே பத்திரிக்கை, கவிதைத் துறைகளைத் தொடங்கி வைத்துள்ளன. சதாசிவப்பண்டிதர் இயற்றிய பிற நூல்கள் வண்ணையந்தாதி, வண்ணை நகரூஞ்சல், சிங்கை நகரந்தாதி, சித்திரகவிகள் ஆகியவை இங்கு வெளியான முதல் நூல்களாகக் காணக்கிடக்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான் நாவல், சிறுகதை, நாடகத்துறைகள் மலேசிய இலக்கியப் பூங்காவில் மலரத்தொடங்கின. வெங்கடரத்தினம்,

சி.வே.சின்னையா, ஆர். இராமநாதன் ஆகியோர் முறையே மலேசியாவின் நாவல், சிறுகதை, நாடகத்துறைகளின் முன்னோடி களாக விளங்குகின்றனர்.

1917ஆம் ஆண்டில் வெங்கடரத்தினம் என்பார் எழுதிய கருணாகரன், அல்லது காதலின்மாட்சி என்னும் நாவலே மலேசியாவில் முதன்முதலாக வெளிவந்த தமிழ்நாவல். 1917-1918 வரையுள்ள காலப்பகுதியில் இரண்டு நாவல்கள் வெளிவந்தன. 1918 முதல் 1933 வரை முதலாம் உலகப்போர் தாக்கத்தால் ஒன்றும் வெளிவரவில்லை. 1931 முதல் 1938 வரை எட்டு நாவல்கள் இங்குதோன்றியுள்ளன. இந்நாவல்களில் மூன்று இன்று கிடைக்கப்பெறாதவை. எஞ்சிய ஐந்தில் இரண்டு துப்பறியும் நாவல்கள், மூன்று சமூக நாவல்கள். 1938 முதல் 1957 வரை எந்த நாவலும் வெளிவரவில்லை. 1957 க்குப்பிறகு பல நாவல்கள் வெளிவந்துள்ளன.

1960 வரை வெளியான இலக்கியப் படைப்புகளையும், பத்திரிக்கைகளையும் பற்றிய குறிப்புகளைத் தொகுத்துத் தமிழ் மலேசியானா என்னும் பெயரில் டாக்டர் இராம் சுப்பையா ஒரு நூலாக வெளியிட்டுள்ளார். தற்போது இலக்கியப் படைப்புக்களேயன்றி திறனாய்வு முயற்சிகளும் பெருகத் தொடங்கியுள்ளன. இன்று மலேசியாவில் 300க்கு மேல் எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். மலேசிய இலக்கிய வளர்ச்சியைப் பற்றியும் நூல்கள் வெளிவந்துள்ளன. இராமையா வின் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு (1978), மதியழகன் எழுதிய மலேசியத் தமிழ் நாவல்கள் (1988), சோலை இருசன் வெளியிட்ட மலேசியத் தமிழ் புலவர் ஏ முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

## சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர்கள்

சிங்கப்பூரில் சுமார் 150 கவிஞர்களும் 20 எழுத்தாளர்களும் 5 நாவல் ஆசிரியர்களும் அற்புதமாகப் பணியாற்றுகின்றனர் என 1982 ஆம் ஆண்டு முரசு ஆசிரியர் வி.என்.எம். முகைதீன் கூறினார்.

புதிய சிங்கப்பூர் அமைத்த அறுபத்தெட்டு ஆண்டுகளிலேயே

தமிழில் இலக்கிய முயற்சிகள் தொடங்கிவிட்டன. ஆரம்பகால முயற்சிகள் அந்தாதி, லாவணி, பதிகம், கும்மி பிரிவுகளில் பிறந்து வளர்ந்தன. தற்காலத் தமிழ்இலக்கிய வகையில் ஒன்றான நாவல் சிங்கப்பூரில் இருபதாம் நூற்றாண்டில் முப்பதின் பிற்பகுதியில் தோன்றியது. அந்தக் காலக்கட்டத்தில்தான் இங்குச் சிறுகதைகளும் படைக்கப்படலாயின. கால ஒழுங்கில் சிறுகதையின் பிறப்பு கவிதை நாவலுக்குப் பிற்பட்டதாயினும் அதுவே மற்ற இரண்டினைக்காட்டிலும் மிகுந்த ஊக்குவிப்பும், வரவேற்பும் பெற்ற துறையாய் இன்று விளங்குகின்றது. 1950-64 காலக்கட்டத்தில் பதினான்கு ஆண்டுகள் சிங்கப்பூர் சிறுகதையிலக்கியத்தின் சிறப்புமிக்க காலம் என்று சொல்ல வேண்டும். சிறுகதை வளர்ச்சிக்கான போட்டிகள், களங்கள் ஆகியனவும், உள்ளூர் எழுத்தாளரை அங்கீகரிக்கும் அறிமுகம், பேட்டிகள், கருத்துரை அங்கங்கள் முதலியன இடம்பெற்றவை இக்காலப்பகுதியில்தான். சிங்கப்பூர்ச் சிறுகதை வரலாற்றிலே ஆயிரக்கணக்கான சிறுகதைகள் மலர்ந்திருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை நாளேடுகளில் வெளியாகி நிலைபேறு கொண்ட நூல்வடிவில் வராமையால் ஆய்வுக்கோ, மதிப்பீட்டிற்கோ அவை கிட்டுவது அரிதாக இருக்கின்றன. 1977வரை சிங்கப்பூரில் நான்கு சிறுகதை நூல்கள் வந்துள்ளன.

சிங்கப்பூர் எழுத்தாளர்களுள் பிரபலமானவர்கள் இளங் கண்ணன், இராம.கண்ணபிரான், பாவலர் என். பழனிவேல், ஏ.பி.சண்முகம், ஈ.வி.சிங்கன் முதலியவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 10 அல்லது 12 சிறுகதைகள், கவிதைகள் வெளிவருகின்றன. சிங்கப்பூரின் ஆங்கில தேசிய நாளிதழ்கூட வாரத்தோறும் தமிழிலும், ஆங்கிலத்திலும் இலக்கியப் பண்பாட்டுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. சிங்கப்பூர் வானொலி புத்தகவளம் - இலக்கியச்சோலை என்ற பகுதியில் தமிழ் நூல்களை அறிமுகம் செய்கின்றது. தமிழ்நேசனும், வானொலி நிலையங்களும், தமிழ்நாடு தமிழ் வளர்ச்சிக்கழகமும், ஆசியாணமும் (ASEAN) இங்கு மலரும் இலக்கியத்திற்கு முறையே பரிசு தருகின்றன. வீரமணி சிங்கப்பூரில் தமிழும் தமிழிலக்கியமும் (1977) எனும் நூலை வெளியிட்டிருக்கிறார்.

## பர்மாவில்தமிழ் இலக்கிய மரபு மறையவில்லை

தமிழறிஞர்களில் மிகச்சிறப்பாகத் தொண்டாற்றிய பெருமை

வே.சாமிநாதசர்மா அவர்களுக்கு உண்டு. தமிழில் மிகுதியான நூல்களை வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. 'தாயும் தாய்மையும்' என்ற அருமையான புதிய நூலை 1981 ஆம் ஆண்டு பூ.சே.புதியணன் வெளியிட்டார். இந்நூல் பிரபலமான பர்மிய ஆசிரியர் சிட்சன்வின் எழுதிய நூலின் தமிழாக்கம். பூ.செ.புதியணனை ஆசிரியராகக் கொண்ட இலக்கிய ஏடு-காலாண்டிதழாக 1981ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு வருகிறது. இலக்கிய ஏடாக ஒரு காலத்தில் இரசிக ரஞ்சனி என்ற ஏடும் பிறவும் வந்திருக்கின்றன.

பிற எழுத்தாளர்களில் சிலர்: கலைதாசன், திலகம், வசந்தி, பாணபட்டன், வாணவளவன், பாரதிநேசன், ரத்னா, கிருஷ்ணகுரு, தமிழ்மணி, பி.எஸ்.பி.அப்துல்வகாப், கே.ஓ.எம்.முகம்மது இசுமாயில், கார்முகில்கவிராயன் கவி.கே.ஏ.மஜீது, ஹிஜிஎஸ்.ஏ.ரகீம், எஸ்.எம்.யூனுஸ், தமிழ்ப்பித்தன், சிறுத்தொண்டன் முதலியவர்கள் ஆவார்கள்.

தாய்லாந்தில் சியாஸ்ராய் மணியம் என்பார் தாய்த்தமிழ் அகராதி ஒன்றை எழுதிக்கொண்டிருக்கிறார்.

## மொரீசியஸிலும் தமிழ் இலக்கிய மரபின் தோற்றம்

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அடித்தளம் போடப்பட்டது. தமிழ்க்கட்டுரைகளும், கவிதைகளும் அக்கால ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு நாளிதழ்களில் வெளியிடப் பட்டன. மேலும் பெருமாள் சுப்பராயன் போன்ற எழுத்தாளர்கள் 1920 இலிருந்து பிரெஞ்சு மொழி நாவல்களைத் தமிழில் மொழிபெயர்த்தனர். 1927இல் ஜி.வெங்கடசாமி என்பார் "சீதாலட்சுமி" என்ற நூலையும், 1940இல் அருணாசலம் என்பவர் "கலைமகள் போதனும்" என்ற நூலையும், எஸ்.முதலியார் என்பவர் 1940இல் "தமிழ் மன்னன் குமரன்" என்ற நூலையும் எழுதினார்கள். தமிழர்கள் பிரெஞ்சு மொழியை எளிதாகக் கற்றுக்கொள்ளவும் நூல்கள் எழுதப்பட்டன. இன்று பள்ளிகளில் தமிழ் கற்பித்து வருகின்ற தமிழாசிரியர்கள் பலர் கட்டுரைகளும், கவிதைகளும் எழுதிவருகின்றனர். பாரதி, திருவள்ளுவர், போன்றவர்களின் நூல்கள் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. திருமலைச்செட்டி, அருணாசலம்

புட்பரதம் போன்றவர்கள் தமிழ்நாடகங்களும் எழுதியுள்ளனர். மொரீசியஸ் இலக்கிய வளர்ச்சியைப்பற்றி விரிவாகத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சு.இராசாராம் "மொரீசியஸில் தமிழரும் தமிழும்" என்னும் நூலில் எழுதியிருக்கின்றார். இதுவே இந்நாட்டு இலக்கிய வளர்ச்சியைப்பற்றி விரிவாக எழுதியிருக்கும் முதல் நூலாகும்.

# வேற்றுநாட்டில் குடியேறிய தமிழர்களின் பொருளாதாரநிலை

## பெரும்பான்மையோர் தொழிலாளர்கள்

பொதுவாக இன்று அயல்நாடுகளில் (இலங்கை, கிழக்கு, வடக்குப் பகுதிகளைத்தவிர) குடியேறியிருக்கும் தமிழர்களின் முன்னோர்களில் பெரும்பாலோர் தோட்டங்களில் வேலை செய்வதற்காகத் தொழிலாளர்களாகப் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து, குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டைவிட்டுச் சென்றார்கள். அவர்கள் அனைவருமே தமிழ்நாட்டில் மிகவும் தாழ்ந்த சமூகநிலையில் உள்ளவர்களாக வாழ்ந்து வந்தவர்கள் எனக் கூறலாம். பிரிட்டிஷ் அரசால் பணியமர்த்தப்பட்ட முகவர்கள் கூலியாட்களைத் தேடி, அயல் நாடுகள் வளமையுள்ளவை என ஏமாற்றி, இணங்கச்செய்து, புகழ்ச்சியாகப்பேசி வயப்படுத்தி, வற்புறுத்தித் தூண்டி, மயக்கிச் சிக்கவைத்து, நயமாக வெளிநாடுகளுக்கு அழைத்துச்சென்றனர். ஒருசிலர் தம் விருப்பத்துடன் சென்றனர்.

தொழில் முறைக் கட்டுப்பாடு ஒப்பந்தத்தின் படி ஒப்பந்தம் செய்துகொண்ட தொழிலாளி ஐந்து ஆண்டுகளுக்குப் பணிபுரிய வேண்டும். விரும்பினால் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். பத்து ஆண்டுகளுக்குப்பின் அரசு செலவில் இந்தியாவிற்கு மீண்டும் திரும்பலாம். பொதுவாக எல்லா நாடுகளிலும் ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் திகைக்க வைக்கிற காட்டுமிராண்டித்தனமான சூழ்நிலையில் பணிபுரியக் கட்டாயப் படுத்தப்பட்டார்கள். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இட்ட

வேலையைச் செய்து முடிக்காவிட்டால் கடுமையாகத் தண்டிக்கப் பட்டார்கள்.

தொழிலாளர்களுக்கு அடுத்தபடியாகச் சென்று குடியேறிய வர்கள் தமிழ் வணிகர்கள். குறிப்பாக அடகுக் கடை வைத்து வணிகம் செய்யும் நாட்டுக்கோட்டை செட்டியார்கள். சோலியா முஸ்லீம் வணிகர்கள் கணிசமான அளவில் சென்று குடியேறினர். ஒரு சிலர் அரசுத்துறையிலும் கல்வித்துறையிலும் பணியாற்றச் சென்றார்கள்.

## தொழிலாளர்கள் உயர்படி நிலையைப்பிடித்தல்

தாங்கள் குடியேறிய அயல்நாடுகளில் கல்வி வாய்ப்புப் பெற்று முன்னேறிய தமிழ்த் தொழிலாளிகளின் குழந்தைகள் ஏராளம். ஆகையால் இன்று இந்நாடுகளில் வாழும் தமிழர்களில் பலர் உயர்சமூக, பொருளாதாரப் படிநிலையில் தன்னம்பிகைக்கை யுடனும், தன்மானத்துடனும் பொதுவாக வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும் எனும் நம்பிக்கையுடனும் வாழ்கின்றார்கள் என்று கூறினால் மிகையாகாது. அவர்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் பணிச்சூழமைவும், சிலருக்கு மிக அதிகமான ஊதியம் கிடைக்கும் சூழமையும் தோன்றியிருக்கின்றன எனக் கூறலாம். எடுத்துக்காட்டாக மொரீசியசில் 1910ஆம் ஆண்டளவில் இந்தியர்ளுக்கு மொரீசியசிலுள்ள மொத்த நிலத்தில் 45.9 விழுக்காடு சொந்தமாக இருந்தது. கரும்புத்தோட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு இந்தியர் வசம் இருந்தது. இதில் 80 விழுக்காடு சொந்தக்காரர்களிடமிருந்தது. தவிர அதிகப்பணமும் சேமித்திருந் தார்கள். இந்தியாவிலுள்ள தங்கள் உறவினர்களுக்குப் பணம் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். மொரீசியசில் அதிக வரியும் செலுத்திக் கொண்டிருந்தார்கள். தவிரக் கடைகள், ஊர்களின் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். தொடக்கப்பள்ளிகளுக்கும், உயர்பள்ளிகளுக்கும் சென்று கொண்டிருந்தார்கள்.

## நடுத்தர வகுப்பினர், பணக்காரர்கள்

ரீயூனியனில் இன்றும் தமிழர்கள் பலர் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிகின்றார்கள். பெரும்பான்மையான தமிழர்கள் வேளாண் மக்களாக இருக்கின்றனர். பிரான்சில் படித்த பிரெஞ்சு மொழிபேசும் தமிழர்கள் முக்கிய பதவிகளில் இருக்கின்றனர்.

மருத்துவர்களாகவும் வழக்குரைஞர்களாகவும், ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பணிபுரிகின்றனர். 28 விழுக்காடு தமிழர்கள் அரசியல், வாணிகம், தொழில்துறையில் பணிபுரிகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் மக்கள் எல்லா வசதியுடனும் வாழ்கின்றனர். இங்கு வறுமையென்பதற்கே இடமில்லை. ஏனென்றால் எல்லாக் குடிமக்களுக்கும் அரசு பலவகைகளிலும் உதவிசெய்கின்றது.

குவாடிலோப் தமிழர்கள் பலர் கரும்பு, வாழைத்தோட்ட ஆட்டுப்பண்ணைச் சொந்தக்காரர்களாகவும் பொறியாளர்களாகவும் படைத்துறைப் பணியாளர்களாகவும் பணிபுரிகின்றனர். பிரெஞ்சு மொழி படித்த தமிழர்கள் பெரும் ஊதியம் பெறுகின்றனர். தமிழர்கள் அரசியல்வாதிகளாகவும், பணக்காரர்களாகவும் கூட இருக்கின்றனர்.

சீசெல்சு நாட்டு மக்கள் பெரும்பான்மையோர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். இதில் கணிசமான தொகையினர் தங்கள் சொந்த நிலத்திலேயே தென்னை, மணிலா, ஏலக்காய், இலவங்கைப்பட்டை போன்றவற்றைப் பயிரிடுகின்றார்கள். சீசெல்சு நாட்டில் பொதுவாக வேலையில்லாத் திண்டாட்டம் மக்கள் மத்தியில் இல்லை. பலர் தற்போது கொத்தனார்களாகவும், தச்சர்களாகவும், மோட்டார் ஓட்டிகளாகவும், உணவகத் தொழிலாளர்களாகவும் பணிபுரிகின்றனர்.

சீசெல்சு நாட்டில் உள்ள வணிக நிறுவனங்களில் பல தமிழர் பெயரிலேயே இருக்கின்றன. எந்த ஊரிலும் கிராமத்திலும் உள்ள கடை தமிழரால் நடத்தப்படுவதாக இருக்கும். மாகித்தீவில் உள்ள மிகப் பெரிய வணிகக் கடையை வைத்து நடத்தபவர் ஒரு தமிழரே. ஒரு சில தமிழர்கள் கல்வித்துறையிலும் அரசாங்கத் துறையிலும் பணியாற்றுகின்றார்கள்.

தென்ஆப்பிரிக்கத் தமிழர்களில் பெரும்பான்மையோர் பண்ணைப் பணியை விட்டுவிட்டனர். 3.7 விழுக்காட்டு இந்தியர்களே கிராமப்புறங்களில் வசிக்கின்றார்கள். இவர்களுக்கும் கரும்புத்தோட்டங்கள், வாணிகக் கோட்டங்கள் சொந்தமாக இருக்கின்றன. 1970 ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி 35.3 விழுக்காடு இந்தியத்தொழிலாளர்கள் ஆக்கத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். 28.4 விழுக்காடு வாணிகத்திலும், 12.9 விழுக்காடு பணித் துறையிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் கடல் - நில

வான் படைத்துறைகளிலும், காவல்துறையிலும், அஞ்சல்துறை அலுவலகங்களிலும் சட்டத்துறைகளிலும் தமிழர்கள் திறமையுடன் பணிபுரிகின்றனர்.

பிஜித்தீவில் பெரும்பான்மையான தமிழர்கள் வேளாண் தொழிலாளிகள். பெரும்பான்மையான விவசாயிகள் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் ஓரளவு மகிழ்ச்சியான ஆறுதல் அளிக்கக்கூடிய வாழ்க்கை வாழ்கின்றார் கள். பலர் 10 ஏக்கர் நிலத்தின் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். சொந்தமாக டிராக்டர்கூட பலர் வைத்திருக்கின்றனர். நல்ல வீடுகளில் வசிக்கின்றனர். மூன்றில் இரண்டுபேர் வானொலி வைத்திருக்கின்றனர். 20இல் ஒருவர் வீடியோ வைத்திருக்கின்றார் எனக் கூறலாம். பொதுவாகத் தமிழ்நாட்டு உழவர்களை விட பிஜி நாட்டில் உள்ள தமிழ் உழவர்கள் பணக்காரர்களாக இருக்கின்றனர். சில தமிழர்கள் குஜராத்திகளின் கடைகளில், வீடுகளில் பணிபுரிகின்றனர். உயர்பதவியில் இருக்கும் தமிழர்களும் உண்டு.

பொதுவாக இத்தமிழர்களில் பலர் நடுத்தர வகுப்பு படிநிலையைப் பிடித்திருக்கின்றனர் எனக் கூறலாம். எடுத்துக் காட்டாக சிங்கப்பூரில் 25 விழுக்காட்டிற்கு மேல் உள்ள தமிழர்கள் வணிகர்களாகவும், அரசு அலுவலர்களாகவும் இருக்கின்றனர். வழக்குரைஞர்களாகவும், டாக்டர்களாகவும் பல தமிழர்கள் இருக்கின்றனர். இவர்கள் சமூக அமைப்பில் மேல்தட்டில் இருப்பதாகக் கூறலாம். அதுபோலவே பணக்கார வணிகர்களாகவும், நடுத்தர வகுப்பினர்களாகவும், பெரும்பான்மையோர் பேராசிரியர்களாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும், எழுத்தாளர்களாகவும் மலேசியத் தமிழர்கள் இருக்கின்றனர்.

## இன்றும் பல தொழிலாளிகள் ஏழைகள்

தமிழ்த் தொழிலாளிகளின் வர்க்கம் முற்றிலும் மறைய வில்லை. இன்றும் பலர் தொழிலாளிகளாகவே பணிபுரிகின்றனர். இன்று சிங்கப்பூரில் 75 விழுக்காடு தமிழர்கள் தொழிலாளிகளாகப் பணி புரிகின்றனர். அதேபோல கயானாவில் பெரும்பான்மையான தமிழர்கள் நெற்பண்ணைகளிலோ கரும்புத் தோட்டங்களிலோ பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் காலை எட்டுமணியளவிலிருந்து மாலை நான்கு மணிவரை பணி

புரிகின்றனர். இவர்களில் சிலர் வீட்டில் தோட்டம் போடுவதோடு கோழிப்பண்ணை போன்றவற்றை வைத்து மேல்வரும்படிக்கு வழிசெய்து கொள்கின்றனர். ஆசிரியர்களாகவும் செவிலியர்களாக வும் பொறியாளர்களாகவும் பணிபுரியும் தமிழர்கள் ஐந்து முதல் பத்து விழுக்காட்டிற்கு மேல் இருக்கமாட்டார்கள். பொதுவாகக் கணவனும் மனைவியும் ஏதாவது ஒரு வேலை செய்கின்றனர். அவ்வாறு சம்பாதிக்காமல் குடும்ப வாழ்க்கையைக் கயானாவில் பொதுவாக யாரும் செம்மையாக நடத்த முடியாது.

இந்தோனேசியாவில் வட சுமத்திராவில் வாழும் தமிழர்களில் பொருளாதார முன்னேற்றம் கண்டிருப்பவர்கள் மிகக்குறைவாகக் காணப்படுகின்றனர். முப்பது குடும்பங்களையே பொருளாதார அடிப்படையில் முன்னேற்றம் பெற்றுள்ள குடும்பங்கள் என வருணிக்கலாம். பெரும்பாலான தமிழர்கள் ஏதாவது சொந்த வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். ஒரு சில தமிழர்கள் அரசாங்கத்திலும் பணியாற்றுகின்றனர். கல்வித் துறையில் தமிழர்கள் அதிகம் நாட்டம் காட்டவில்லை. பலர் உயர்நிலைப்பள்ளிப் படிப்போடு முடித்துக்கொண்டு ஏதாவது தொழிலில் ஈடுபடுகின்றனர்.

மலேசியாவில் உள்ள தமிழர்களில் 60 விழுக்காடு ஏழைத் தொழிலாளிகள் ஆவார்கள். 1970ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி வறுமைக்கோட்டின்கீழ் இருக்கும் இந்தியக் குடும்பங்களின் எண்ணிக்கை 39 விழுக்காடு, மலேசியாவின் தேசிய சராசரி 49 விழுக்காடு. பெரும்பான்மையான ஏழைத்தமிழர்களால் பணம் சேமிப்பு செய்ய முடிவதில்லை.

பர்மாவின் வட பகுதிகளில் வாழும் தமிழர்களிடையே கலாச்சார வீழ்ச்சியும், வறுமையும் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

தென் ஆப்பிரிக்காவிலும், பிறநாடுகளிலுமுள்ள இந்தியர்கள் ஏழ்மையில் வாடுகின்றனர். வறுமைக்கோட்டைச் சிறிதளவு தாண்டி வாழ்பவர்கள் 28 விழுக்காடு, 6 விழுக்காடு இந்தியர்கள் இடைநிலைப்பட்ட வகுப்பினராக ஓரளவு சௌகரியத்துடன் வாழ்கின்றார்கள். சுமார் ஒரு விழுக்காடு இந்தியர்களே மகிழ்ச்சி வாய்ந்த வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். செல்வம் அதிகமாக உள்ள இந்தியர்கள் குஜராத்தியர்கள், குறிப்பாக முஸ்லீம் குஜராத்தியர்கள். குறைந்த வருமானம் உடையவர்கள் இந்தி

தமிழ், தெலுங்கு இனப்பிரிவினர்கள் ஆவார்கள். கைத்திறன் பெற்றிராத, அரைகுறை பயில்திறம் பிரிவினர்களில் பெரும் பான்மையாக இருப்பவர்கள் தமிழர்களும், தெலுங்கர்களும் ஆவார்கள்.

## அமெரிக்கா, இலண்டனில் சிறப்புப் பயிற்சியாளர்களுக்கு வரவேற்பு

இன்று லண்டனில் பாதித் தமிழர்கள் மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், பேராசிரியர் களாகவும், வணிகர்களாகவும் இருக்கின்றனர்.

பொதுவாகச் சிறப்பு தேர்ச்சிபெற்ற தமிழர்களும் பிற இந்தியர்களும் அமெரிக்காவிற்குச் செல்கின்றனர். அமெரிக்காவிலே குடியேறிய மொத்த இந்தியர்களில் 77.4 விழுக்காடு அறிவியல் மற்றும் தொழில்துறை, தொழில் நுட்பத்துறையைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். 1961ஆம் ஆண்டு அமெரிக்காவிற்குச் சென்ற இந்தியச் சிறப்புத் தேர்ச்சியாளர்கள் 9.4 விழுக்காடு, பிரிட்டனுக்கு 64.2 விழுக்காடு ஆனால் 1982-85 ஆம் ஆண்டுகளில் இதுவே முறையே 30.8 விழுக்காடு. 1.5 விழுக்காடாக மாறியது.

பொதுவாக அயல்நாடுகளுக்கு, குறிப்பாக அமெரிக்காவிற்குச் செல்லும் தமிழர்களின் தத்தவம் என்னவென்றால் (1) யார் மிகுதியாக ஊதியம் அளிக்கின்றார்களோ அவர்களிடம் உன்னை விற்றுக்கொள் (2) யார் மிகுதியாகக் கல்வி வசதிகளும் பிற செல்வாக்குள்ள வசதிகளையும் அளிக்கின்றார்களோ அவர்களிடம் உன்னை விற்றுக்கொள் (3) யாரிடம் பணிபுரிந்தால் மனநிறைவு, மதிப்பு வருகின்றதோ அவரிடம் உன்னை விற்றுக்கொள் என்பதாகும்.

# அயல்நாட்டுப் பண்பாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கு

## தமிழ்ப்பண்பாடு என்றால் என்ன பொருள்?

தமிழ்ப்பண்பாடு என்பது பொதுவாக இந்தியப் பண்பாட்டுடன் ஒருசேரக்கலந்த இணைப்போவியமாகும். பண்டைய காலத்திலிருந்தே பிற இந்தியப் பண்பாடுகளின் தாக்கத்தைத் தமிழ்நாட்டு வரலாற்றில் காணலாம். குறிப்பாக பல்லவர்கள் காலத்தில் வளர்க்கப்பட்ட சமஸ்கிருதம், பாலி வேதநெறிப் பண்பாட்டோடு தமிழ்ப்பண்பாடு கலந்துவிட்டது. ஆனால் பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தால் இக்கூட்டுப் பண்பாட்டிற்குத் தனித்தமிழர் உருவம் கிடைத்தது எனக்கூறினால் மிகையாகாது. மேலும் புத்தசமயமும், சமணசமயமும், பிற்காலத்தில் இஸ்லாம். கிறித்துவ சமயங்களும் தமிழ்ப்பண்பாட்டுடன் கலந்ததால் தமிழ்ப் பண்பாட்டில் சமயப்பொறுமை வாய்ந்த பெருமனம் உடைய அகல்விரிவான அடிப்படைக்கூறுகளைக் காணலாம். ஆனாலும் தமிழ்ப் பண்பாடு முற்றிலும் தன்தனித்துவப்பண்புகளை இழக்கவில்லை. ஆகையால் அயல்நாடுகளிலுள்ள இந்தியப் பண்பாட்டின் தாக்கத்தை ஆராயும்போது தமிழ்ப்பண்பாட்டின் தாக்கத்தைத் தனியாகப் பிரித்துக் கூறுவது பல சமயங்களில் கடினமாக இருக்கின்றது. ஆனாலும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புப் பங்கையும், நன்றாகத் தெளிவாக, அயல்நாடுகளிலுள்ள சிற்பங்கள், கோயில் கட்டட அமைப்புகள், சமய மரபுகள், மொழி மரபுகள் விளக்கிக் காட்டுகின்றன. ஆகையால் இந்தியக் கடல் அலையோடு பல அலைகளாகச் சென்ற, காவிரி, வைகை, தாமிரபரணிப் பண்பாட்டின் தாக்கத்தையும் வெளிநாடுகளில் காணலாம்.

## மணிமேகலா கடவுள் வழிபாடு

கம்போடியா, தாய்லாந்து முதலிய நாடுகளில் மணிமேகலா எனும் தெய்வத்தை வணங்கும் வழக்கம் உண்டு. எடுத்துக் காட்டாக மன்னர் முதலாவது ராமா (1783-1809) காலத்தில் எழுதப்பட்டதாய் ராமாயணத்தில் கடற் கடவுள் மணிமேகலா ரத்தினங்கள் நிறைந்த அரண்மனையில் வாழ்கின்றாள் எனக் கூறப்பட்டிருக்கின்றது. இன்றுகூடக் கம்போடியாவில் மணிமேகலா ஒரு கடற் கடவுளாகக் கருதப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறாள். பொதுவாகத் தாய்லாந்து, மலேயா போன்ற நாடுகளில் மின்கேலா என்னும் பெயரால் மணிமேகலா எனும் கடல் தெய்வ வழிபாடு வழக்கில் இருந்ததை அறிகிறோம். இம்மணிமேகலா வழிபாட்டைக் குறிப்பாக கடல்கடந்துச் சென்ற தமிழ் வணிகர்கள் தென் கிழக்காசிய நாடுகளுக்கு பண்டைய காலத்தில் எடுத்துச் சென்றிருக்கவேண்டும் என நம்பப்படுகின்றது.

## பல்லவர் காலத்தில் சென்ற சிவ வழிபாடு

சாவாவில் கி.பி.732 இல் எழுதப்பட்ட கங்கல் கல்வெட்டில் தான் முதன்முதலாக இத்தீவுகளில் தோன்றிய சிவ வழிபாடு பற்றிய செய்தி கிடைக்கின்றது. இக்கல்வெட்டு பிற்கால பல்லவகிரந்த மொழியில் எழுதப்பட்டிருப்பதால் முதன்முதலாகச் சிவவழிபாடு தென்னிந்தியர்கள் மூலம், குறிப்பாகத் தமிழர்கள் மூலம் இத்தீவுகளுக்குச் சென்றிருக்கலாம் என உய்த்துணரப் படுகின்றது. சாவகத்திலுள்ள சிவன்கோயில்கள் பெரும்பாலும் 6500 அடி உயரமுள்ள டியெங் பீடபூமியிலேயே உள்ளன. இங்கு மாமல்லபுரத்திலுள்ள கோயில்களைப் போல் ஐந்து கோயில்கள் உள்ளன. இவை பஞ்சபாண்டவர் பெயரில் உள்ளன. இவை தென்னாட்டுத் தமிழக வழியில் வந்த சிவ வழிபாடுடைய திருக்கோயில்களேயாகும். ஆனால் இங்குச் சிவன் தாடியுடையவ னாகவும் தொப்பி அணிந்தவனாகவும் காணப்படுகிறான்.

சாவாவில் கட்டப்பட்ட பெரும்பான்மையான கோயில்கள் சிவன் கோயில்களாகும். பிரம்மானன் என்னும் இந்துக்கோயில் சாவகத்தில் இருக்கின்றது. பிரம்மானன் சிவன்கோவில் கி.பி.856 இல் கட்டத் தொடங்கப்பட்டது. ராஜா தக்ஷன் என்பவனால் கி.பி.900இல் கட்டி முடிக்கப்பட்டது. நடுவில் சிவன்கோயிலும் சுற்றிலும் நான்முகன், திருமால் கொற்றவை, அகத்தியர்

கோயில்களும் கட்டப்பட்டன. இங்குப் புடை சிற்பகமாகச் செதுக்கப்பட்ட இராமகதைமிகச் சிறப்புடையது. பிரம்மானன் என்ற இக்கோயிலின் பெயர் வேதாரண்யன் என்ற சொல்லி லிருந்து வந்திருக்கலாம். 'வேதா' என்றால் 'பிரம்மா' என்று பொருள். 'ஆரண்யா' என்றால் 'காடு', 'வனம்' என்று பொருள். வேதாரண்யா என்ற சொல் பிரம்மவனா என்றும், பின்னர் இச்சொல்லே பிரம்மானன் என்றும் மாறியது என தி.என். இராமச்சந்திரன் கூறுகின்றார். பிரம்மானன் கோயில்களில் அமைப்பும் அவற்றில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் விக்கிரகங்களின் தன்மையும் சோழர்காலத்துக் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் சாயலையும் ஒட்டி அமைந்திருக் கின்றது. மேலும் பிரம்மானான் சிவவழிபாட்டுமுறை தமிழ்நாட்டு சைவ சித்தாந்த வழிபாட்டு முறையை ஒத்திருக்கின்றது. மேலும் தமிழகக் கோயில் போன்ற அமைப்பு, நுட்பம், கல்லடுக்கு திறன் முதலியவற்றைப் பார்க்கலாம்.

சுமத்திராவில் வாரா யொங் ராங் என்னுமிடத்தில் பல ஆலயங்கள் அழிந்து கிடக்கின்றன. அதன் நடுவில் பெரிய சிவன்கோயிலும் இருக்கின்றது. மங்கைபங்கன் திருவடிவமும், கணபதியின் படிமங்களும் பல உள்ளன. இவையெல்லாம் தமிழகத்தில் காணப்படும் படிமங்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டின் சிவன்மட்டும் இந்தோனேசியாவிற்குச் செல்ல வில்லை. சிவவழிபாடு தத்துவமும், குறிப்பாகப் பல சைவ சித்தாந்த தத்துவமும் இந்தோனேசியாவிற்குச் சென்றன. எடுத்துக்காட்டாகப் பிரம்மானன் வழிபாட்டு முறை சைவ சித்தாந்த வழிபாட்டு முறையை ஒத்திருக்கிறது எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். அயனும், மாலும் அரனின் ஏவலால் தத்தம் தொழில்களைச் செய்கின்றனர் என்பது சித்தாந்தம். இதே மாதிரியான கருத்தைப் பாலினீய இந்துக்களிடம் பார்க்கலாம். அவர்கள் தத்துவப்படி உள்பொருள் உலக முழுமையின் மூலகாரணம் சிவாதித்யா. இவரே எங்கும் உள்ள எக்காலத்திற்கும் உரிய கடவுள். பிரம்மா, விஷ்ணு, ருத்ரா எனும் மூன்று வடிவங்களை எடுத்துக்கொண்டு சிவாதித்யா உலகத்தைப் படைக்கின்றார், ஆளுகின்றார், அழிக்கின்றார். சிவனைப் பாலி னீயர்கள் ருத்ரன், ஈஸ்வரன், கிரிபதி, பஞ்சமுகா, மஹாதேவா என்றும் அழைக்கின்றார்கள்.

## பாலித்தீவில் உருவ வழிபாடு இல்லா சிவன் கோயில்கள்

பாலித்தீவில் சிறியதும் பெரியதுமான 4,661 கோயில்கள் இருக்கின்றன. இக்கோயில்கள் தமிழகத்தில் உள்ள கோயில்களைப் போல் அமைப்பில் இல்லை. இக்கோயில்களில் நம்நாட்டில் உள்ளது போல இறைவன் சிலையோ, இறைவியின் சிலையோ இல்லை. இங்கு எத்தகைய உருவவழிபாட்டினையும் காண முடியாது. நம்நாட்டுக் கோயில் வெளிச் சுற்றுகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றதோ அவ்வாறே இங்கும் வெளிச்சுற்றுகள் பயன்படுத்தப்படுகின்றன. உள்திருச்சுற்றில் பல தெய்வங்கள் உறையும் இடங்கள் உள்ளன. இவற்றை மேரு எனக் கூறுகிறார்கள். தெய்வம் வந்து தங்குவதற்கு மேருவின் அடிப் பகுதியில் மேடை ஒன்று உண்டு. ஆனால் வந்து தங்குவதற்கு மேருவின் அடிப்பகுதியில் மேடை ஒன்று உண்டு. ஆனால் எந்தத் தெய்வச்சிலையும் இல்லை. மக்கள் இங்கு வந்து வழிபடுகின்றபோது இறைவன் ஆவிரூபத்தில் இருந்து அருளுவதாக நம்புகின்றனர். விழாக்காலங்களில் மட்டுமே உருவ வழிபாடு நடைபெறுகிறது. இச்சமயங்களில் உற்சவ மூர்த்தியின் உருவத்தை அலங்கரித்து நீராட்ட, ஆற்றங்கரைக்கோ, கடற்கரைக்கோ எடுத்துச் செல்வார்கள். உற்சவ மூர்த்தியை நதிக்கு நீராட்ட எடுத்துச் செல்வது, அப்போது ஆடை அணிகலன்களை உடன்எடுத்துச் செல்வது போன்றவற்றிலும் உற்சவ மூர்த்திக்குப் பூசை செய்வதுபோன்ற சமயச் சடங்குகளிலும் தமிழக பழக்க வழக்கங்கள், சமயச் சடங்குகள் ஆகியவற்றின் தாக்கம் நிறைந்திருக்கின்றது. பாலித்தீவில் உள்ள மக்கள் பொதுவாக விழாக்காலங்களிலேயே கோயில்களுக்குச் செல்கிறார்கள். மற்ற காலங்களில் நாள்தோறும் வீடுகளில் மூதாதையர் வழிபாடும் இறைவணக்கமும் நிகழ்த்துகிறார்கள். உமாதேவியை இயற்கை அன்னையாக இம்மக்கள் வழிபடுகின்றனர். ஆனால் பாலித் தீவினர் மலைமகளைச் சிவனுடைய இரண்டாவது மனைவியாகக் கருதுகிறார்களள. சிவனுடைய பூத கணங்களை முச்சந்திகளில் எல்லாம் வழிபாடு செய்கிறார்கள்.

## அயல்நாடுகளுக்குத் தமிழர்கள் மூலம் சென்ற அகத்தியர், கணபதி

பொதுவாக, பழைய சாவா கல்வெட்டுகளில் அகத்தியரின் பெயரைப்பார்க்கலாம். அகத்தியரை, அகஸ்தி, காலசாயா,

கும்பயோனி என்றும் அழைத்தார்கள். அகத்தியர் சிற்பங்களும், கோயில்களும், உதாரணமாக போரோபுதூரில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

சிவனைப்போலுள்ள முக்கண்ணும், கபாலமும் இளம் பிறையும் உடைய முக்கண் கபால கணபதி சிங்கசாரியில் இருக்கின்றார். இவர் கைகளில் ஜெபமாலையும் யானைக்கைக் கொம்பும், கோடரியும் ஒரு சிறு கவசமும் வைத்திருக்கிறார். இவரது உருவம் ஒவ்வொருவர் வீட்டின் வாசல்படியிலும் இருக்கும். நூல்களில் இவரது வணக்கம் முதல் இடம் பெற்றிருக்கும். கபாலங்களின்மீது அமர்ந்துள்ள கணபதியும் கிடைத்திருக்கின்றது. கபாலங்களே இவருடைய காதணிகளும், காலணிகளும், கையணிகளும், இடுப்பணிகளும், கழுத்தணிகளுமாகக் காணப்படுகின்றன. கணேசர் வழிபாடு குப்தர்கள் காலத்தில் இந்தியாவில் இருந்ததாக உறுதியான சான்றுகள் இல்லை. பல்லவர் காலத்தில் தோன்றிய திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இயற்றிய நூல்களில் கணபதி வழிபாடு இருப்பதாலும், பக்தி இயக்கம் தமிழ்நாட்டிலிருந்து பிற பகுதிகளுக்கும் பரவியதாலும் பல்லவர்கள் காலத்தில் கணேசர் வழிபாடும் இந்தோனேசியா, பிறதென்கிழக்காசிய நாடுகளில் அறிமுகப்படுத்தியிருக்கலாம் என உய்த்துணர முடிகின்றது.

## மலேசியாவில் தமிழர் நாகரிகப் பாங்கு

மலேசியக் கோயில் கட்டட, சிற்ப அமைப்புக்களில் பல்லவர் களின் செல்வாக்கைத் தெளிவாகக் காணலாம். உதாரணமாக இது சம்பந்தமாக அகழ்வாராய்ச்சி சான்றுகள் கேதாவில் கிடைக்கின்றன. குறிப்பாக மாமல்லபுரம் ஒற்றைக்கல்லால் ஆன கோயில்களின் தாக்கத்தை இங்குப் பார்க்கலாம். புகித்சோராஸ், புகித்மொதாளும், புகித்மெரியம், கேதா மலைமுகடு முதலிய இடங்களில் உள்ள சிவன், திருமால் கோயில்களிலும் சிற்பங்களிலும் தென் இந்தியப் பல்வவர்களின் செயற்பாணியை, நாகரிகப் பாங்கினைக் காணலாம்.

## பர்மாவில் தமிழர் சமயத்தின் தாக்கம்

பர்மாவில் பல்லவர் சிற்ப முறையினைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் பல கிடைத்துள்ளன. அவை

பண்டைக்கால புரோம் நகரில் காணப்படும் இந்து சமயச் சிற்பங்களாகும். அவற்றுள் சிறப்புடையன திருமால், இலக்குமி ஆகியோரின் புடைப்புச் சிற்பங்களாகும். அவற்றின் தலைகள் சிதைந்து போயுள்ளன. அவை பல்லவ முறையினைப் பின்பற்றிச் செய்யப்பட்டுள்ளன.

சிவ உருவச் சிலைகள், கணேசர், நந்தி போன்ற சிவவழிபாடு தொடர்பான சிலைகள் பர்மாவில் கண்டுபிடிக்கப் பட்டதால் தென்இந்திய வணிகக் குடும்பங்கள் இப்பகுதிகளில் குடியேறியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இப்பகுதிகளில் கி.பி.1057 இல் தாட்டனில் (மான்மாவட்டம்) கணேசருக்குக் கட்டியிருக்கும் கோயில் சோழர் காலத்துக் கோயிலாகக் கருதப்படுகின்றது. பர்மாவில் 12. 13ஆம் நூற்றாண்டுகளில் கிடைத்த தமிழ்க்கல்வெட்டுகள் மூலம் பர்மாவில் குடியேறிய தமிழர்கள் வைணவ சமயத்தையும் பரப்பியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

## கம்போடியா, வியட்நாமிலும் பல்லவர், சோழர் பண்பாடு

கம்போடியா (பியுனான்), வியட்நாம் (சம்பா), லாவோஸ் பகுதிகளிலும் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தைக் காணலாம். பியுனானின் கலை வளர்ச்சிக்கு அடிப்படையாகப் பல்லவருடைய கலைப்பணி இருந்ததாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். பியூனான் காலத்திய புத்த விகாரங்களில் சிகரங்கள் பல்லவர்கள் ஒற்றைக் கல்லில் செதுக்கிய கோயில்களின் பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. தென்னாட்டுச் சைவ சமயம் பியூனானில் தழைத்தோங்கியது. கோயில்கட்டடக் கலைப்பணி, சிற்ப வடிவ அமைப்புகள், வாழ்க்கை முறையின் சிறப்பியல்புகள் முதலி யனவும் தமிழ்நாட்டின் பிரதிபலிப்பாகவே பியுனானில் நிலவியது. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருக்கின்ற குணவர்மனின் பிரசாத் பிரேம்லோவன் கல்வெட்டு முதல் முதலாக கம்போடியாவிலுள்ள வழிபாட்டைப் பற்றிக் கூறுவதால் இவ்விஷ்ணு வழிபாடு முதன்முதலாகப் பல்லவர்கள் காலத்தில் கம்போடியாவில் அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும் என உய்த்துணரலாம்.

பழைய சிவலிங்கங்களைப் போற்றிக் காப்பதும், புதிய லிங்கங்களை அமைப்பதும் தங்களுடைய புனிதமான கடமையாகச்

சம்பாவின் (வியட்நாம்) அரசர்கள் கருதினார்கள். புதிய லிங்கங்களுக்குத் தங்களுடைய பெயர்களைச் சேர்த்துப் பெயரிடுவதை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். தமிழ்நாட்டில் குறிப்பிட்ட ஓர் அரசன் கட்டிய கோயிலுக்குத் தன்னுடைய பெயரை இட்டு வழங்குவது மரபாகும். குணபரன் கட்டிய ஈச்சுரம் 'குணபர ஈச்சுரம்' என்றும், இராசராசன் எடுப்பித்த கோயில் இராசராசேச்சுரம் என்றும் வழங்கப் படுகின்றன என்பதை நாம் நன்கு அறிவோம். இதைப்போன்று சம்பாவில் கோயில்களுக்கு மட்டும் அல்லாமல் கோயில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளுக்கும் அப்பெயரிடப் பெற்றதைக் காணுகின்றோம்.

காம்போஜ அரசர்கள் பல்லவர்களுக்குரிய வர்மன் பட்டப் பெயரைப் பூண்டு இருந்தனர். ஆங்கோர்வாட், பயோன் முதலிய கோயில்கள் தென்னிந்திய கோயில்களைப் பெரிதும் ஒத்துள்ளன. தனித்துநிற்கும் தூபிகள், கோபுரங்கள் இவை செங்கற்களால் எளிமையான திட்டத்துடன் கட்டப்பட்டவை ஆகும். செங்கோண அமைப்புடையவை. பொய்க் கதவுகளுடன் இருக்கும் சுவர்கள் மேலும் இக்கட்டடங்களின் அணி வேலைப்பாடுகள் பல்லவர் கலைத்திறனைத் தழுவியிருக்கின்றன. பனைமலையில் பல்லவர்களால் எடுப்பிக்கப்பட்ட திருக்கோயிலை ஆங்கோர்வாட்கோயில் ஒத்திருக்கிறது. கி.பி.பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீஇராமானுஜ ஆச்சாரியாரின் சரணாகதி தத்துவம் கம்பூச்சியாவில் பரவி இருந்ததைக் காணுகிறோம். கம்பூச்சியாவின் திருமால் கோயில்களில் தமிழ்நாட்டுத் தென்கலை வைணவர் பின்பற்றும் பாஞ்சரத்திர ஆகமப்படி பூசைகள் செய்யப்பட்டன. இந்தப் பாஞ்சரத்திர ஆகம வழிபாடு தமிழ்நாட்டிற்கு உரியதாகும். மேலும் தென்னிந்தியாவிலிருந்து சிவநடராசவடிவம் காம்போஜத்திற்குக் கொண்டு செல்லப்பட்டமை ஆகிய எல்லாவற்றையும் ஒருங்கு இணைத்துப் பார்க்கின்றபோது தென்னிந்தியர்களே கம்போடியாவிற்குச் சென்று குடியேறியிருக்கவேண்டும் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

சம்பாவில் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் மிசோன் என்னும் இடத்திலுள்ள கோயில் மாமல்லபுரத்துக் தேர்களையும் காஞ்சிபுரத்து கயிலாசநாதர்கோயிலையும் அமைப்பில் பெரிதும் ஒத்திருக்கின்றது. மாமல்லபுரத்து தருமராசர் ரதமும் அருச்சுனன் தேரும் கொண்டுள்ள சிகரங்களே பெரிதும் சம்பாவின் கோயில் கோபுரங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்க வேண்டும்.

## தாய்லாந்தில் தமிழர் கலைப்பணிகள்

தாய்லாந்தின் கிழக்குப் பகுதியில் திருமாலின், நின்ற கோலச்சிலை ஒன்று கிடைத்துள்ளது. அது பல்லவர்காலத்தில் (கி.பி.8-9 நூ.) காஞ்சியில் செய்யப்பட்ட திருமாலின் திருமேனியைப் பெரிதும் ஒத்துள்ளது. அங்குள்ள மற்றோர் இடிபாட்டின் தெற்குப் பகுதியில் புடைப்புச் சிற்பங்கள் சில கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. திருமாலின் கிடந்த கோலச் சிற்பமும், கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடிக்கும் அற்புதக் காட்சிச் சிற்பமும், கவர்ச்சிமிகு புடைப்புச் சிற்பங்களாக விளங்குகின்றன. இவை மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயில் (மண்டபங்) களில் வீறுடன் விளங்கும் கல்லோவியங்களைப் பெரிதும் ஒத்துள்ளன.

## காரைக்கால் அம்மையார் வழிபாடு செய்யும் ஆசியர்கள்

தமிழ்நாட்டில் முதன்முதலில் வணங்கப்பெற்ற சைவ நாயன்மார் காரைக்கால் அம்மையாரே ஆவார் (கி.பி.3 அல்லது 5ஆம் நூற்றாண்டு) தம்மைக் 'காரைக்கால் பேய்' என்றே சுட்டிக்கொண்ட அம்மையாரின் பெயரை எளிதில் மக்கள் மறந்தனர். கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டின் கடல் வாணிகர்கள் காரைக்கால் அம்மையைத் தங்கள் குலதெய்வமாகக் கருதிப்போற்றி வழிபட்டனர்.

பிறநாடுகளுக்கு வணிகம் செய்வதற்குச் சென்றபொழுது தங்கள் குல தெய்வமாகிய அம்மையின் நிலையையும் தங்களுடன் வணிகர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். கம்பூசியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் உள்ள கோயில் சிற்பங்களுள் ஊழிக்கூத்தன் திருமேனியும் அதற்கு எதிரில் காரைக்கால் பேயின் சிலையும் கல்லிலும் செம்பிலும் செய்யப் பட்டு, வழிபாட்டிற்கும் சிற்ப அலங்காரத்திற்கும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

சம்பாவில் போங்கலே எனும் கோயிலில் பதினாறு கைகளை உடைய ஊழிக்கூத்தன் திருவுருவச்சிலை முன் அம்மையாரின் சிலை செதுக்கப்பட்டுள்ளது. அடுத்துச் சூரியவர்மனின் பண்டேய் ஸ்ரீஎனும் கோயிலில் (11ஆம்நூ.) அம்மையாரோடு கூடிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் கற்சிலையும் செப்பு

சிலையும் காணப்படுகின்றன. தாய்லாந்தில் பீமாய் எனும் இடத்தில் அம்மையாரின் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவற்றால் காரைக்கால் அம்மையாரின் வழிபாடு கி.பி.பதினொன்றாம் நூற்றாண்டு வரையில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வழக்கில் இருந்தமை தெளிவாகிறது. தமிழ்நாட்டு மக்கள் இடையே வழக்கில் இருந்த பல்வேறு வழிபாட்டு நெறிகளுள் நடராசர் வழிபாட்டு நெறி (ஊழிக்கூத்து), காரைக்கால் அம்மையாரின் வழிபாட்டு நெறியோடு பின்னிப்பிணைந்து இருந்தமை இதனால் புலனாகிறது.

## அயல்நாடுகளில் தமிழர்கள் அறிமுகப்படுத்திய ஜென் புத்தசமயம், வஜ்ராயன புத்த சமயம்

பல்லவர்களின் ஆட்சியின்போது தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் கீர்த்தி வாய்ந்த புத்த சமயத்தலமாக விளங்கியது. பல்லவர்கள் காலத்தில் சீனாவுக்குச் சென்ற தென்னிந்திய புத்த சமயப் பரப்பாளர்கள் மூலம் தாய்லாந்து, பர்மா, வியட்நாம் முதலிய தென்கிழக்காசியப் பகுதிகளிலும் புத்தசமயம் பரவியது எனக்கூறலாம்.

கி.பி.ஆறாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த போதிதர்மா என்பார் கடல்வழியாகத் தென் சீனாவுக்குச் சென்றார். இவர் சீனாவிலும், ஜப்பானிலும் சென் புத்தசமயத்தை நிறுவினார். இவருடைய சேவையைப் பாராட்டிச் சீனாவிலும், ஜப்பானிலும் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பொதுவாக ஜப்பானியர்கள் இவரைத் தாருமா அல்லது தர்மா என அழைக்கின்றார்கள்.

மேலும் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குப் பிறகு வியட்நாமிற்குச் சென்ற மற்றொரு தென்னிந்தியர் வியட்நாமில் ஜென்புத்தசமயத்தை நிறுவினார். இவருடைய பெயர் வினிடாருசி, இவரும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என யூகிக்கப்படுகிறது.

கி.பி.எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வஜ்ரபோதி என்பார் சீனாவிலும், ஜப்பானிலும் வஜ்ராயன புத்த சமயத்தை அறிமுகப்படுத்தினார். மேலும் இவரும் இவருடைய

மாணவர் அமோகாவஜ்ராவும் இந்தோனேசியாவிற்கும் சென்று இச்சமயத்தைப் பரப்பியதாக வரலாறு உண்டு. வஜ்ராயனபுத்த சமயம் மகாயான புத்தசமயத்திலிருந்து தோன்றியதாகும்.

## பல்லவ கிரந்த மொழியிலிருந்து தோன்றிய தென்கிழக்காசிய மொழிகள்

தென்கிழக்காசியாவில் முதன்முதலாகக் கிடைத்த கல்வெட்டுகள் எல்லாம் பல்லவ கிரந்த எழுத்துமுறையைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி சுமார் 200 கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. ஆகையால் சமஸ்கிருதம் எழுதுவதற்கு வட இந்திய எழுத்துமுறை பயன்படுத்தப்படாமல் தென்இந்தியப் பல்லவ கிரந்த எழுத்துமுறை பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. இக்காரணத்தால் தென்கிழக்காசியாவில், குறிப்பாக இந்தோ சீனாப் பகுதிகளில் சமஸ்கிருதம் பரவுவதற்குத் தமிழ்ப் பல்லவர்கள் காரணமாக இருந்தனர்.

பல்லவ கிரந்த எழுத்து முறையை நன்கு கற்றறிந்த தென்கிழக்கு ஆசியர்கள் இவ்வெழுத்து முறையைப் பயன்படுத்தி தங்களுடைய மொழிகளை வளர்த்தனர். ஆகையால் பல்லவ கிரந்த எழுத்து முறையிலிருந்து வளர்ந்த மொழிகள் (1) இந்தோ-ஜாவானிய எழுத்துமுறை (2) மேற்கு ஜாவாவில் பேசப்படும் சுந்தனீஸ் மொழிஎழுத்துமுறை, (3) மதுரீஸ் மொழி எழுத்துமுறை (4) பாலினிஸ் மொழி எழுத்துமுறை (5) சுமத்திரா மொழிகளின் எழுத்துமுறை (பட்டக் மொழி எழுத்து முறை), (6) ரெஜாங்குமொழி, லாம்போங்மொழி எழுத்துமுறை (தென்சுமத்திரா) (7) மலேயமொழி எழுத்துமுறை (8) பர்மிய மான் மொழி எழுத்துமுறை முதலியன ஆகும்.

## பல அயல்நாட்டு மொழிகளில் தமிழ்ச் சொற்களின் தாக்கம்

மலாய் மொழியில் நானூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்இலக்கிய வழக்குச் செற்களையும், பேச்சு வழக்குச் சொற்களையும் காணலாம். (கட்டில், உண்டி, கும்பல், செட்டி, பூஜா, கருடர், அகா (அக்காள்), ராஜ).

இந்தோனேசியமொழியிலும் ஏறத்தாழ நானூறு தமிழ்ச்

சொற்களைப் பார்க்கலாம். பல வரிவடிவில் திரிந்து இருக்கின்றன. (உதாரணம் கெத்துமலரான் (கொத்தமல்லி), குடங்கு (கிடங்கு) இங்சா (இஞ்சி) மங்கா(மாங்காய்) ஹெறலை (இலை), கடலா (கடலை) தமிழ்வழி சமஸ்கிருதச் சொற்களையும் காணலாம். புத்திரி (புத்ரி), மந்திரி, விஷா (விஷம்) ராஜா, கஜா, தேவதா, குரு பண்டைய சாவகத் தமிழ்க்கவிதையில் ஆளப்பட்ட சொற்களில் சில: அப்பம், இடம் கஞ்சி, கட்டில், கடமை, காவல், கூண்டு மற்றும் பற.

தாய்லாந்திலுள்ள தாய்மொழியில் வழங்கும் தனித்தமிழ்ச் சொற்கள்பல. அவற்றுள் வேளா (வேளை), பார்வே(பார்வை), தூக் (தூக்கு), மாங்க் (மாங்காய்) போன்ற சொற்கள் நம் கருத்தைக் கவருவனவாகும். மற்றும் இன்றைய பேச்சு வழக்கில் தமிழில் வழங்கும் சொற்கள் அம்மொழியில் ஏராளமாக திரிந்த நிலையில் வழங்கி வருகின்றன. காருணா (கருணை) நகான் (நகரம்), பட்டோம் (பட்டணம்), சிந்தனா (சிந்தனை), ராணி, தம்மசாட் (தருமசத்திரம்).

தமிழ்ச் சொற்களுக்கும் கொரிய மொழியில் உள்ள சில சொற்களுக்கும் ஒற்றுமை இருக்கின்றது எனச் சிலர் கருதுகின்றனர் (அப்பா, அம்மா, அண்ணி, புல்).

தமிழ், ஜப்பான் ஆகிய மொழிகளுக்குப் பொதுவாக ஏறக்குறைய 300 சொற்கள் இருக்கின்றன. ஒரே பொருள்தரக் கூடிய 510 சொற்கள் இவ்விரு மொழிகளிலும் காணப்படுகின்றன. அப்பா, அன்னை, கல், கீரை, காவல், சட்டம், சலவை, தாவு, தூய, வடம், மந்தி, சட்டி, நிலம் நாற்று, படகு, பாத்தி, மட்டம், மண், வரி, வாய், வேர், கீறு (கீறுதல்), நரி (நாரி) போன்ற பொதுச் சொற்கள் உள்ளன.

சில தமிழ்ச் சொற்கள் ஆங்கில மொழியுடன் கலந்து வேரூன்றின. முனைவர் உரோனாட்டு ஆசர் அன்னைத்தமிழ் ஆங்கில மொழிக்கு அருங்கொடையாக நல்கிய சொற்கள் ஆயிரத்தை விஞ்சும் என்கிறார். ஆனைக்கொன்றான் (ஒருவகை பாம்பு), மிளகுத் தண்ணீர் (Mulagu Tawny), கட்டுமரம் (Catumaran), தேக்கு (Teack), அரிசி, நாவாய், வெற்றிலை போன்ற எத்தனையோ நற்றமிழ்ச் சொற்கள் நேரடியாகவும், இலத்தீன், பழங்கிரேக்க மொழி வாயிலாகவும் வந்தேறியுள்ளன.

## முடிவுரை

பொதுவாக அயல்நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தைப் பண்டைய காலத்திலிருந்து பார்க்கலாம். எழுத்து முறை, தவிர தமிழ், சமஸ்கிருதம் சிற்பம், கட்டடக்கலைகள், இந்து புத்த சமயக்கடவுள்கள், தத்துவங்கள், சமய சகிப்புத்தன்மை, மேலும், உணவு, உடை முதலிய பழக்கவழக்கங்கள் தமிழ்நாட்டிலிருந்து அயல்நாட்டிற்கு, குறிப்பாக தென் ஆசியா, தென்கிழக்கு ஆசியா, கிழக்காசிய நாடுகளுக்குச் சமீபகாலம் வரை சென்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து தமிழர்களே பலநாடுகளில் பெருமளவில் குடியேறியிருப்பதால் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழர்களிடைய நிலவிய பண்பாடுகளும் பரவின. குறிப்பாகத் தீமிதிவிழா, கரகம், காவடி, பொங்கல் போன்ற தமிழர் திருவிழாக்கள், இன்றைய உணவு, உடை, அணிகலன்கள், குறிப்பாக வழிபாடு பழக்கவழக்கமுறை பல நாடுகளில் பரவியிருக்கின்றன. சீனர்களும், தாய்மக்களும், பர்மியர்களும், மலேசியர்களும், இந்தோனேசியர்களும், கிரியோல்களும், நீக்ரோக்களும், பிஜியர்களும், ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும், நம்பிக்கையுடன் சில நேரங்களில் தமிழ் விழாக்களில் பங்கேற்று, தமிழ்க் கடவுள்களை வணங்குகின்றனர். சிலர் காவடி .கூட எடுக்கின்றனர். தமிழ்மொழியும் புத்துணர்வுடன் அயல்நாடுகளில் வளரத் தொடங்கியிருக்கின்றது. தமிழ்த்தாய் வாழ்த்து உலகத் தமிழர்களிடையே பரவியிருக்கின்றது. ஆகையால் தமிழர் பண்பாடு உலகில் பலப்பகுதிகளில் மலர்ந்து பூத்துக்குலுங்குகின்றது எனும் உண்மையை அயல்நாடுகளுக்குப் பயணம் செய்பவர்கள் கண்கூடாகப் பார்க்கலாம்.

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

## அண்மைவெளியீடுகள்

| | |
|---|---|
| அறிவியல் களஞ்சியம் தொகுதி – 13 | 700.00 |
| பாரதிதாசனும் பொதுவுடைமைத் தத்துவமும், பாவேந்தரும் மொழிபெயர்ப்பும் | 30.00 |
| பழந்தமிழ்த் தொடரியல் வரலாற்று ஆய்வு | 70.00 |
| தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 5 | 150.00 |
| உயிர்வேதியியல் | 270.00 |
| குழந்தை நல மருத்துவம் தொகுதி – 1 | 210. 00 |
| குழந்தை நல மருத்துவம் தொகுதி – 2 | 170. 00 |
| சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி – 2 (மறுபதிப்பு) | 400.00 |
| வாழ்வியல் களஞ்சியம் தொகுதிகள் 5 – 9 (மறுபதிப்பு) ஒவ்வொன்றும் | 700.00 |
| அருங்கலைச் சொல் அகர முதலி (மீள்பதிப்பு) | 600.00 |
| திருமுறைத் திருநெறி தொகுதி – 1 | 105.00 |
| தஞ்சை மராட்டிய மன்னர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி–2 | 85.00 |
| வைத்திய சிந்தாமணி | 80.00 |
| அயல்நாட்டவர்க்குத் தமிழ் – கருத்துப் பரிமாற்ற இலக்கணம் | 70.00 |
| சுந்தரர் தேவாரப் பாடல்களில் இசை | 70.00 |
| தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி – 1 (மறுபதிப்பு) | 200.00 |
| உலகநாடுகளில் தமிழ்ப் பண்பாடு | 50.00 |
| 108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடும் அமைவுகளும் | 50.00 |
| தமிழக அறிவியல் வரலாறு | 60.00 |
| இசைத் தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி – 1 | 60.00 |
| தன்வந்தரி வைத்தியக் கும்மி | 50.00 |

தொடர்பு முகவரி :

**இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)**

தஞ்சாவூர் – 613 001. தொ.பே. 04362 – 239221